# தினபூமி

thinaboomi.com

பூமி: 34 சுற்று: 27 கார்த்திகை 24

RNI Regn. No.55306/93 TN/CCN/556/2012-2014

சென்னை, புதன், டிசம்பர் 10, 2025

▸சென்னை ▸மதுரை ▸திருச்சி ▸கோவை ▸நெல்லை ▸சேலம் ▸வேலூர் ▸புதுச்சேரி

பக்கம் 8 ₹ 3.00




**இந்திய விவசாய பொருட்கள் மீது கூடுதல் வரி விதிக்க அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்ப் திட்டம்**

....2-ம் பக்கம்

**பீகார் மாநில தேர்தல் வெற்றி: தே.ஜ. கூட்டணி எம்.பி.க்கள் பிரதமர் மோடிக்கு பாராட்டு**

....3-ம் பக்கம்

**ஜூனியர் உலக கோப்பை ஹாக்கி: 3-வது இடத்துக்கான போட்டியில் இந்தியா-அர்ஜென்டினா மோதல்**

....6-ம் பக்கம்





சென்னையில் நேற்று நடைபெற்ற ஜியோ ஹாட்ஸ்டார் சவுத் அன்பவுண்ட் நிகழ்வில் தமிழ்நாடு அரசு மற்றும் ஜியோ ஹாட்ஸ்டார் நிறுவனம் இடையே ரூ.4 ஆயிரம் கோடி மதிப்பிலான புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தானது.

### ‘என் வாக்குச்சாவடி வெற்றி வாக்குச்சாவடி’

# தமிழ்நாடு முழுவதும் இன்று தி.மு.க. பிரச்சாரம் தொடக்கம்

## தேனாம்பேட்டையில் நடைபெறும் கூட்டத்தில் முதல்வர் மு.க.ஸ்டாலின் பங்கேற்று பேசுகிறார்

சென்னை, டிச. 10-

**சென்னை தேனாம்பேட்டையில் இன்று நடைபெறும் தி.மு.க.வினரின் என் வாக்குச்சாவடி வெற்றி வாக்குச்சாவடி கூட்டத்தில் முதல்வர் மு.க.ஸ்டாலின் பங்கேற்க உள்ளார்.**

**முதல்வர் வியூகம்....**

தமிழக சட்டசபை தேர்தல் அடுத்த ஆண்டு ஏப்ரல் மாதம் நடைபெறும் என தெரிகிறது. இந்த தேர்தலில் 200 தொகுதிகளில் வெற்றி பெற இலக்கு நிர்ணயித்து தி.மு.க. தலைவர் மு.க.ஸாலின் வியூகம் வகுத்து செயல்பட்டு வருகிறார். இந்தநிலையில் தி.மு.க.வினரின் என் வாக்குச்சாவடி வெற்றி வாக்குச்சாவடி பிரச்சாரம் இன்று தொடங்க உள்ளது.

**மாநிலம் முழுவதும்...**

தேனாம்பேட்டையில் பகுதிச்செயலாளர் தலைமையில் நடைபெறும் கூட்டத்தில் முதல்வர் மு.க.ஸ்டாலின் பங்கேற்க உள்ளார். வாக்குச்சாவடிகளை பலப்படுத்தும் தி.மு.க.வின் பிரசாரம் மாநிலம் முழுவதும் இன்று தொடங்க உள்ளது. ஒவ்வொரு வாக்குச்சாவடியிலும் தி.மு.க.வினரை உற்சாகத்துடன் செயல்பட வைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. வீடு வீடாக செல்லும் பூத் கமிட்டி குழுக்களில் மகளிர் கட்டாயம் இடம்பெற வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

**ஆலோசனை கூட்டம்**

முன்னதாக நேற்று முன்தினம் முதல்வர் மு.க.ஸ்டாலின் சென்னையில் இருந்து காணொளி காட்சி வாயிலாக ‘என் வாக்குச்சாவடி வெற்றி வாக்கு சாவடி’ என்ற பெயரில் தி.மு.க. மாவட்ட செயலாளர்களுடன் ஆலோசனை கூட்டம் நடந்தது. இதில் முதல்வர் மு.க.ஸ்டாலின் தி.மு.க. நிர்வாகிகளுக்கு பல்வேறு ஆலோசனைகளை வழங்கினார்.

**முதல்வர் கேட்டறிந்தார்**

அப்போது திருச்சி கலைஞர் அறிவாலயத்தில் கழக முதன்மைச் செயலாளரும், நகராட்சி நிர்வாக துறை அமைச்சர் கே.என்.நேரு தலைமையில் தயார் நிலையில் இருந்த மத்திய மாவட்ட செயலாளர் வைரமணி, வடக்கு மாவட்ட செயலாளர் காடுவெட்டி தியாகராஜன், மாநகர் மாவட்ட செயலாளர் மற்றும் மாநகராட்சி மேயர் மு.அன்பழகன், சட்டமன்ற உறுப்பினர்கள் சௌந்தரபாண்டியன், பழனியாண்டி, ஸ்டாலின்குமார், கதிரவன் ஆகியோருடன் தொகுதி நிலவரம், எஸ்.ஐ.ஆர். பணிகள் குறித்து கேட்டறிந்தது குறிப்பிடத்தக்கது.

### 1.30 லட்சம் நிர்வாகிகள் பங்கேற்கிறார்கள்:

# தி.மலையில் வரும் 14-ம் தேதி தி.மு.க. இளைஞரணி மாநாடு

## முதல்வர் மு.க.ஸ்டாலின் தொடங்கி வைக்கிறார்

சென்னை, டிச. 10-

**திருவண்ணாமலையில் வரும் 14-ம் தேதி தி.மு.க. இளைஞரணி மாநாட்டை முதல்வர் மு.க.ஸ்டாலின் துவக்கி வைக்கிறார். இதில் 91 சட்டமன்ற தொகுதிகளுக்கு உட்பட்ட 1 லட்சத்து 30 ஆயிரம் இளைஞரணி நிர்வாகிகள் பங்கேற்க இருக்கிறார்கள்.**

**இன்னும் 4 மாதங்கள்...**

தி.மு.க. தலைவர் முதல்வர் மு.க.ஸ்டாலின், அடுத்த ஆண்டு நடைபெறும் சட்டசபை பொதுத்தேர்தலில் 200 தொகுதிகளில் வெற்றி இலக்கை முன் வைத்து வியூகம் வகுத்து செயல்படுகிறார். தேர்தலுக்கு இன்னும் 4 மாதங்களே உள்ள நிலையில் தி.மு.க.வில் வாக்குச்சாவடி முகவர்களை முழுமையாக நியமித்து அவர்களுக்கு பல்வேறு ஆலோசனைகளையும் வழங்கி உள்ளார். இப்போது வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப்பணிகள் நடைபெறுவதால் அதில் விடுபடும் வாக்காளர்களை கண்டறிந்து அவர்களை வாக்காளர்



பட்டியலில் சேர்க்க வேண்டும் என்று அறிவுறுத்தி உள்ளார்.

**தி.மு.க.வினருக்கு கட்டளை...**

அதுமட்டுமின்றி என் வாக்குச்சாவடி-வெற்றி வாக்குச்சாவடி என்று அறிவித்து கடுமையாக உழைக்க வேண்டும் என்று தி.மு.க.வினருக்கு கட்டளையிட்டுள்ளார். ஒவ்வொரு வீடுகளுக்கும் சென்று திராவிட மாடல் அரசின் சாதனைகள் அடங்கிய துண்டறிக்கைகள் வழங்கப்பட வேண்டும் என்றும் கூறி உள்ளார். அவ்வாறு வீடு வீடாக செல்லும் பூத் கமிட்டி குழுக்களில் கட்டாயம் மகளிர் இடம் பெற வேண்டும் என்றும் அறிவுறுத்தி உள்ளார். இதன் அடிப்படையில் கட்சி நிர்வாகிகள் இப்போது வீடு வீடாக சென்று தி.மு.க.வின் சாதனைகளை எடுத்து சொல்லி வருகிறார்கள்.

**இளைஞரணி மாநாடு...**

இந்த நிலையில் தி.மு.க.வின் இளைஞரணி மாநாட்டை துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் திருவண்ணாமலையில் வருகிற 14-ந் தேதி நடத்துகிறார். தேர்தலுக்கு முன்னோட்டமாக நடத்தப்படும் இந்த மண்டல மாநாட்டில் வட மாவட்டங்களில் உள்ள 91 சட்டமன்ற தொகுதிகளுக்கு உட்பட்ட 1 லட்சத்து 30 ஆயிரம் இளைஞரணி நிர்வாகிகள் பங்கேற்க இருக்கிறார்கள். இந்த மாநாட்டில் முதல்வர் மு.க.ஸ்டாலின் பங்கேற்று சிறப்புரையாற்ற உள்ளார். அப்போது சட்டசபை தேர்தல் தொடர்பாக கட்சியினருக்கு முக்கிய அறிவிப்புகளை வெளியிடுவார் என தெரிகிறது.

**மேலும் 2 கட்சிகள்...**

தி.மு.க. கூட்டணிக்கு மேலும் 2 கட்சிகள் வரும் என்று எதிர்பார்க்கப்படும் சூழலில் அதையும் முதல்வர் மு.க.ஸ்டாலின் தெளிவுப்படுத்துவார் என தெரிகிறது. தி.மு.க. கூட்டணியில் காங்கிரஸ் இடம் பெற்றிருந்தாலும், த.வெ.க. கட்சியுடன் காங்கிரஸ் ரகசியமாக பேசி வருவது பற்றியும் இந்த மாநாட்டில் அவர் தனது கருத்துக்களை வெளிப்படுத்துவார் என தெரிகிறது.

**வெற்றியை உறுதி செய்யும்....**

பாராளுமன்ற தேர்தலுக்கு முன்பு சேலத்தில் தி.மு.க. இளைஞரணி மாநாடு நடத்தப்பட்டது. அது தி.மு.க.வின் வெற்றியை முடிவு செய்தது. அதேபோல் திருவண்ணாமலையில் இளைஞரணி மண்டல மாநாடு நடத்தப்படுகிறது. இது 2026 சட்டசபை தேர்தலில் தி.மு.க.வின் வெற்றியை நிச்சயம் உறுதி செய்யும் என்று துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் நம்பிக்கை தெரிவித்துள்ளார். இதற்காக இளைஞரணி மண்டல மாநாட்டை பிரமாண்டமாக நடத்த ஏற்பாடுகள் நடந்து வருகிறது.

### திருப்பரங்குன்றத்தில் தீபம் ஏற்றும் விவகாரம்:

# நீதிபதி ஜி.ஆர்.சுவாமிநாதனை தகுதி நீக்கம் செய்ய வேண்டும்

## மக்களவை சபாநாயகரிடம் இண்டியா கூட்டணி எம்.பிக்கள் மனு

புதுடெல்லி, டிச. 10-

**மதுரை ஐகோர்ட் நீதிபதி ஜி.ஆர்.சுவாமிநாதனை பதவி நீக்கம் செய்யும் தீர்மான நோட்டீசை மக்களவை சபாநாயகரிடம் மனு அளிக்கப்பட்டுள்ளது.**



திருப்பரங்குன்றம் மலையில் கல்தூணில் தீபம் ஏற்ற உத்தரவிட்ட ஐகோர்ட் நீதிபதி ஜி.ஆர்.சுவாமிநாதன் மீது நடவடிக்கை எடுக்கக்கோரும் தீர்மானத்தை நாடாளுமன்றத்தில் கொண்டுவர ‘இந்தியா’ கூட்டணி திட்டமிட்டு உள்ளது. சர்ச்சைக்குரிய திருப்பரங்குன்றம் மலையில் கார்த்திகை தீபம் ஏற்ற மதுரை ஐகோர்ட் நீதிபதி ஜி.ஆர்.சுவாமிநாதன் உத்தரவிட்டார். இதன்படி தீபம் ஏற்றச்சென்றபோது அங்கு பிரச்சினை ஏற்பட்டது. இந்த வழக்கு இன்னும் நிலுவையில் உள்ளது.

இதற்கிடையே, நீதிபதியின் தீர்ப்பில் விமர்சனங்கள் எழுந்துள்ளது. தி.மு.க., கம்யூனிஸ்டு உள்ளிட்ட கட்சிகள் இது தொடர்பாக ஆலோசனை நடத்தின. பாராளுமன்றத்திலும் இந்த விவகாரம் பேசப்பட்டது. இந்த நிலையில் நீதிபதி ஜி.ஆர்.சுவாமிநாதன் மீது நடவடிக்கை எடுக்கக் கோருவது தொடர்பான தீர்மானத்தை பாராளுமன்றத்தில் கொண்டு வர இண்டியா கூட்டணி எம்.பி.க்கள் திட்டமிட்டு உள்ளதாக தமிழக எம்.பி. ஒருவர் தெரிவித்தார்.

இந்த நிலையில், மதுரை ஐகோர்ட் நீதிபதி ஜி.ஆர்.சுவாமிநாதனை பதவி நீக்கம் செய்யும் தீர்மான நோட்டீசை மக்களவை சபாநாயகரிடம் மனு அளிக்கப்பட்டுள்ளது. தகுதி நீக்க தீர்மானம் கொண்டுவர, மக்களவையில் 100 உறுப்பினர்கள், மாநிலங்களவையின் 50 உறுப்பினர்கள் கையெழுத்திட வேண்டும், அந்த அடிப்படையில் தி.மு.க. சார்பில் மக்களவையில் இண்டியா கூட்டணி கட்சி உறுப்பினர்களின் கையெழுத்துகள் பெறப்பட்டுள்ளன.

### வருகிற ஜனவரி 15-ம் தேதிக்குள்

# மக்கள்தொகை கணக்கெடுப்புக்கு அதிகாரிகளை நியமிக்க வேண்டும்

## அனைத்து மாநிலங்களுக்கும் மத்திய அரசு உத்தரவு

புதுடெல்லி, டிச. 10-

**வருகிற ஜனவரி 15-ம் தேதிக்குள் மக்கள்தொகை கணக்கெடுப்புக்கு அதிகாரிகளை நியமிக்க வேண்டும் என்று அனைத்து மாநிலங்களுக்கும் மத்திய அரசு உத்தரவிட்டுள்ளது.**

மக்கள் தொகை கணக்கெடுப்புப் பணியை மத்திய உள்துறை அமைச்சகம் நடத்த உள்ளது. இப்பணி அடுத்த ஆண்டு ஏப்ரல் மாதம் முதல் 2 கட்டங்களாக தொடங்கும் என்று பாராளுமன்றத்தில் கடந்த 2-ம் தேதி மத்திய அரசு தெரிவித்தது. 2026-ம் ஆண்டு ஏப்ரல் முதல் செப்டம்பர் வரை மாநில மற்றும் யூனியன் பிரதேசங்களின் வசதிக்கு ஏற்ப 30 நாட்களுக்குள் வீடுகள் கணக்கெடுப்பு நடத்தப்படும். இரண்டாம் கட்டமாக 2027-ம் ஆண்டு மார்ச் 1-ந் தேதி முதல் மக்கள்தொகை கணக்கெடுப்பு நடைபெறும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் மக்கள் தொகை கணக்கெடுப்பு பணிக்கு அதிகாரிகளை வருகிற ஜனவரி 15-ம் தேதிக்குள் நியமிக்க வேண்டும் என்று அனைத்து மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களுக்கு இந்தியப் பதிவாளர் ஜெனரல் சுற்றறிக்கை அனுப்பி உள்ளார். அதில் கூறியிருப்பதாவது:-

மக்கள்தொகை கணக்கெடுப்பு பணிக்கான அதிகாரிகள் நியமனத்தை 2026-ம் ஆண்டு ஜனவரி 15-ந்தேதி முடிக்குமாறு அறிவுறுத்தப்படுகிறது. சுமார் 700 முதல் 800 பேர்களுக்கு ஒரு கணக்கெடுப்பாளருக்குப் பணி ஒதுக்கப்பட வேண்டும். ஒவ்வொரு 6 கணக்கெடுப்பாளர்களுக்கும் ஒரு மேற்பார்வையாளர் நியமிக்கப்பட வேண்டும்.

மக்கள்தொகை கணக்கெடுப்பு விதிகள்-1990-ன் விதி 3-ன் படி, ஆசிரியர்கள், எழுத்தர்கள் அல்லது மாநில அரசு மற்றும் உள்ளூர் அதிகார சபையின் எந்தவொரு அதிகாரியும் கணக்கெடுப்பாளராக நியமிக்கப்படலாம். கணக்கெடுப்பாளரை விட உயர்ந்த பதவியில் உள்ள அதிகாரிகள் மேற்பார்வையாளராக நியமிக்க வேண்டும். ஜனவரி 15-ந்தேதிக்குள் மக்கள்தொகை கணக்கெடுப்பு அதிகாரிகளை நியமிப்பதை உறுதி செய்ய மாநில அரசுகள் மற்றும் யூனியன் பிரதேச நிர்வாகங்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறது. இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

### தமிழ்நாடு அரசு துறைகளில்

# 61 காலிப்பணியிடங்களை நிரப்ப அறிவிப்பு வெளியீடு


சென்னை, டிச. 10-

**தமிழக அரசு துறைகளில் 61 காலிப்பணியிடங்களை நிரப்புவதற்கான அறிவிப்பை டி.என்.பி.எஸ்.சி. வெளியிட்டுள்ளது. இதற்கு விண்ணிப்பிக்க வரும் 31-ம் தேதி கடைசி தேதி என்று அறிவிக்கப்பட்டுள்ளது.**

தமிழக அரசு துறைகளில் காலியாக உள்ள பணியிடங்களை டி.என்.பி.எஸ்.சி. எனப்படும் தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வு ஆணையம் நிரப்பி வருகிறது. அந்த வகையில், தற்போது அரசு உதவி வழக்கு நடத்துநர் பணியிடங்களை நிரப்ப அறிவிப்பு வெளியிட்டுள்ளது.

இதன் விவரங்கள் வருமாறு: தேர்வு நடத்தும் நிறுவனம்: தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம் (டி.என்.பி.எஸ்.சி), பணி நிறுவனம்: தமிழ்நாடு மின் விநியோக நிறுவனம் லிமிடெட், காலி இடம்: 61. பதவி: அரசு உதவி வழக்கு நடத்துநர் (நிலை - 2). கல்வி தகுதி: பி.எல். பட்டம் பெற்றிருக்க வேண்டும். வழக்கறிஞர் சங்கத்தில் உறுப்பினராக இருக்க வேண்டும். குற்றவியல் நீதிமன்றங்களில் குறைந்தது ஐந்து ஆண்டுகள் பணியாற்றி இருக்க வேண்டும். வயது: பிரிவுகளுக்கு ஏற்ப வயது வரம்பு மாறுபடும். தேர்வு முறை: தமிழ் தகுதித் தேர்வு, முதல் நிலைத்தேர்வு, மெயின் தேர்வு, ஆவண சரிபார்ப்பு. விண்ணப்பிக்க கடைசி தேதி: 31-12-2025. இணையதள முகவரி: https://tnpsc.gov.in/.


**மார்க்கெட் விலை நிலவரம்**



| BSE | NSE |
|---|---|
| -436.41 | -120.90 |
| பாயிண்ட் 84,666.28 | பாயிண்ட் 25,839.65 |



**தங்கம்**
1 சவரன் ₹96,000
1 கிராம் ₹12,000



**வெள்ளி**
1 கிலோ ₹199,000
1 கிராம் ₹199.00



**டாலர்** ₹89.86

**பெட்ரோல்** ₹100.75
**டீசல்** ₹92.34



### புதின் இந்தியா வருகை எதிரொலி:
# இந்திய விவசாய பொருட்கள் மீது வரி விதிக்க அதிபர் ட்ரம்ப் திட்டம்

**வாஷிங்டன், டிச. 10-**

இந்திய விவசாய பொருட்கள் மீது கூடுதல் வரி விதிக்க அமெரிக்கா திட்டமிட்டுள்ளது.

உக்ரைன், ரஷியா இடையிலான போர் சுமார் 3 ஆண்டுகளுக்கு மேலாக நீடித்து வரும் நிலையில், ரஷியாவிடம் இருந்து அதிக அளவில் கச்சா எண்ணெய் இறக்குமதி செய்யும் இந்தியா, சீனா உள்ளிட்ட நாடுகள் மீது அமெரிக்க அரசு கடுமையான வரி விதிப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. குறிப்பாக இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யப்படும் பொருட்களுக்கு 50 சதவீத வரி விதித்து அமெரிக்க அதிபர் டொனால்டு டிரம்ப் உத்தரவிட்டுள்ளார்.



இதனிடையே, இந்தியா, அமெரிக்கா இடையே வர்த்தகம் தொடர்பான பேச்சுவார்த்தை தொடர்ந்து நடைபெற்று வருகிறது. இரு தரப்பும் பல்வேறு சுற்று பேச்சுவார்த்தை நடத்தியுள்ளது. இந்நிலையில், இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யப்படும் அரசி உள்ளிட்ட விவசாய விளைபொருட்கள் மீது கூடுதல் வரி விதிக்க அமெரிக்க ஜனாதிபதி டிரம்ப் திட்டமிட்டுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

இந்திய விவசாய உற்பத்தி பொருட்கள் அமெரிக்க சந்தையில் குறைவான விலையில் கிடைப்பதால் உள்ளூர் விவசாயிகள் பாதிக்கப்படுவதாக குற்றச்சாட்டு எழுந்துள்ளது. இதையடுத்து, இந்திய விவசாய பொருட்கள் மீது கூடுதல் வரி விதிக்க ட்ரம்ப் திட்டமிட்டு வருவதாக தகவல் வெளியாகியுள்ளது. அதேபோல், கனடாவில் இருந்து இறக்குமதி செய்யப்படும் விவசாய உரங்கள் மீதும் கூடுதல் வரி விதிக்கப்பட உள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

# ஆப்கானிஸ்தானில் நிலநடுக்கம்

**ஆப்கானிஸ்தான், டிச. 10-**

ஆப்கானிஸ்தானில் ஒரேநாளில் இரண்டு முறை நிலநடுக்கம் ஏற்பட்டது.

ஆப்கானிஸ்தானில், நிலப்பரப்பில் இருந்து சுமார் 10 கி.மீ. ஆழத்தில் நேற்று (டிச. 9) மதியம் 1.17 மணியளவில் 4.5 ரிக்டர் அளவிலான நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளதாக, தேசிய நில அதிர்வு ஆராய்ச்சி மையம் தெரிவித்துள்ளது. இதனைத் தொடர்ந்து, ஆப்கானிஸ்தானில் மதியம் 2.36 மணியளவில் நிலப்பரப்பில் இருந்து சுமார் 70 கி.மீ. ஆழத்தில் மற்றொரு நிலநடுக்கம் ஏற்பட்டிருப்பது உறுதி செய்யப்பட்டுள்ளது. இந்த நிலநடுக்கம், ரிக்டர் அளவில் 3.8 ஆகப் பதிவாகியுள்ளது.

இந்த நிலநடுக்கத்தால், ஏற்பட்ட உயிர் மற்றும் பொருள் சேதங்கள் குறித்த அதிகாரப்பூர்வ தகவல் இதுவரை வெளியிடப்படவில்லை. இருப்பினும், இந்த நிலநடுக்கங்களின் அதிர்வுகள் அங்குள்ள பல்வேறு முக்கிய நகரங்களில் உணரப்பட்டதாக, உள்ளூர்வாசிகள் தெரிவித்துள்ளனர். முன்னதாக, இந்திய மற்றும் யுரேஷிய டெக்டோனிக் தகடுகளின் பல்வேறு பிளவுக்கோடுகளின் மீது ஆப்கானிஸ்தானின் நிலப்பரப்பு அமைந்துள்ளது. இதனால், அந்நாடு நிலநடுக்கங்களால் அதிகம் பாதிக்கப்படும் வாய்ப்புள்ளதாகக் கூறப்படுகிறது.

வடக்கு ஆப்கானிஸ்தானில் கடந்த நவ.4 ஆம் தேதி ஏற்பட்ட நிலநடுக்கத்தில் சிக்கி 27 பேர் பலியாகினர். மேலும், 956-க்கும் அதிகமானோர் படுகாயமடைந்தனர். இத்துடன், ஆப்கானிஸ்தானில் கடந்த ஆகஸ்ட் மாதம் ஏற்பட்ட சக்தி வாய்ந்த நிலநடுக்கத்தில் ஆயிரக்கணக்கான மக்கள் பலியானது குறிப்பிடத்தக்கது.

### 79-வது பிறந்தநாளை முன்னிட்டு
# காங். தலைவர் சோனியா காந்திக்கு பிரதமர் நரேந்திர மோடி வாழ்த்து

**டெல்லி, டிச. 10-**

79-வது பிறந்தநாளை முன்னிட்ட சோனியா காந்திக்கு பிரதமர் மோடி வாழ்த்து தெரிவித்தார்.

காங்கிரஸ் மூத்த தலைவர் சோனியா காந்தி. இவர் 20 ஆண்டுகள் காங்கிரஸ் தலைவராக செயல்பட்டுள்ளார். மேலும், இவர் பாராளுமன்றத்தில் காங்கிரஸ் கட்சியின் தலைவராக செயல்பட்டு வருகிறார். இந்நிலையில், சோனியா காந்தி தனது 79வது பிறந்தநாளை நேற்று கொண்டாடினார். சோனியா காந்தி இத்தாலியின் லூசியானா நகரில் 1946ம் ஆண்டு டிசம்பர் 9ம் தேதி பிறந்தார்.

இந்நிலையில், சோனியா காந்தியின் பிறந்தநாளையொட்டி பிரதமர் மோடி வாழ்த்து தெரிவித்துள்ளார். இது தொடர்பாக பிரதமர் மோடி வெளியிட்ட எக்ஸ் பதிவில், சோனியா காந்திக்கு எனது பிறந்தநாள் வாழ்த்துகள். அவர் உடல் நலத்துடன் நீண்டகாலம் வாழ பிரார்த்திக்கிறேன்' என தெரிவித்துள்ளார்.

# த.வெ.க.வை ஒருபோதும் நிறுத்த முடியாது: புதுவை கூட்டத்தில் ஆதவ் அர்ஜுனா பேச்சு

**புதுச்சேரி, டிச. 10-**

புதுச்சேரி த.வெ.க. பொதுக்கூட்டத்தில் 'தில்' இருந்தால் தேர்தலில் மோதுங்கள் என்று ஆதவ் அர்ஜுனா பேசினார். மேலும் த.வெ.க.வை ஒருபோதும் நிறுத்த முடியாது என்றும் அவர் தெரிவித்தார்.

தமிழகம் முழுவதும் மாவட்ட வாரியாக கட்சியின் தலைவர் விஜய் பிரசாரம் மேற்கொண்டார். கரூர் சம்பவத்துக்குப் பிறகு கடந்த மாதம் காஞ்சீபுரத்தில் ஒரு தனியார் கல்லூரியில் நடந்த மக்கள் சந்திப்பு நிகழ்ச்சியில் விஜய் கலந்து கொண்டு பேசினார்.

அதற்கு அடுத்தபடியாக விஜய் தலைமையில் த.வெ.க. பொதுக்கூட்டம் புதுச்சேரி உப்பளம் ஹெலிபேடு மைதானத்தில் நேற்று நடைபெற்றது. இந்த கூட்டத்தில் கியூ.ஆர்.கோடுடன் கூடிய பாஸ் வழங்கப்பட்டு கூட்டத்தில் 5 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர். கூட்டத்தில் த.வெ.க. பிரச்சார மேலாண்மை பொதுச் செயலாளர் ஆதவ் அர்ஜுனா பேசியதாவது:-

கரூர் சம்பவத்திற்கு பின்னர் முக்கியமான ஒரு விஷயத்தை சொல்ல வேண்டும். புதுச்சேரி காவல்துறைக்கு நன்றி சொல்ல வேண்டும். தமிழக முதல்வர் புதுச்சேரியை பார்த்து சட்டம் ஒழுங்கை பற்றி தெரிந்து கொள்ள வேண்டும். புதுச்சேரி காவல்துறையினர் விஜய் பொதுக்கூட்டத்துக்கு மிக சிறந்த அளவில் பாதுகாப்பு அளித்தனர். தமிழ்நாட்டில் கூட இந்த அளவுக்கு பாதுகாப்பு கொடுத்தது இல்லை. புதுச்சேரி காவல்துறை பார்த்து தமிழ்நாடு காவல்துறை கற்றுக்கொள்ள வேண்டும்.

இந்தியாவிற்கே முன்னுதாரமாக புதுச்சேரி காவல்துறை திகழ்ந்து கொண்டிருக்கிறது. இதற்காக புதுச்சேரி முதல்வர் என்.ரங்கசாமிக்கு நன்றி தெரிவித்து கொள்கிறோம். இப்படி ஒரு பாதுகாப்பை தமிழகச் சுற்றுப்பயணங்களின் கிடைத்ததில்லை. தில் இருந்தால் தேர்தலில் மோதுங்கள். அரசை வைத்துக் கொண்டு, காவல் துறையை வைத்துக் கொண்டு பிரசாரம் செய்வதை முடக்குவதை முதலில் நிறுத்துங்கள். காற்றை நிறுத்த முடியாது. வெள்ளத்தை நிறுத்த முடியாது. அதுபோலத் தான் த.வெ.க.வை நிறுத்த முடியாது. இவ்வாறு அவர் கூறினார்.

# இந்தோனேசியாவில் பயங்கரம்: கட்டிட தீ விபத்தில் 22 பேர் பலி

**ஜகர்தா, டிச. 10-**

இந்தோனேசியாவில் அலுவலகக் கட்டடத்தில் ஏற்பட்ட தீ விபத்தில் பலியானவர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. இந்தோனேசியாவில், அலுவலகக் கட்டடத்தில் ஏற்பட்ட தீ விபத்தில் சிக்கி பலியானவர்களின் எண்ணிக்கை 22 ஆக அதிகரித்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த விபத்தில், அந்தக் கட்டடத்தில் இருந்த கர்ப்பிணிப் பெண் ஒருவரும் பலியானது உறுதி செய்யப்பட்டுள்ளது.



தலைநகர் ஜகார்த்தாவில், கெமாயோரன் பகுதியில் அமைந்துள்ள 7 அடுக்குமாடி அலுவலகக் கட்டடத்தில், நேற்று (டிச. 9) நண்பகல் பயங்கர தீ விபத்து ஏற்பட்டுள்ளது. இதையடுத்து, அந்தக் கட்டடத்தின் முதல் தளத்தில் ஏற்பட்ட தீயானது வேகமாக மற்ற தளங்களுக்கும் பரவியதாகக் கூறப்படுகிறது. இதனைத் தொடர்ந்து, தகவலறிந்து அங்கு விரைந்த நூற்றுக்கணக்கான தீயணைப்பு வீரர்கள், 29 தீயணைப்பு வாகனங்களின் உதவியுடன் சுமார் 3 மணிநேரம் போராடி தீயை கட்டுக்குள் கொண்டு வந்ததாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில், தீ விபத்தில் சிக்கி ஒரு கர்ப்பிணிப் பெண் உள்பட 15 பெண்களும், 7 ஆண்களும் என மொத்தம் 22 பேர் பலியானதாக, இந்தோனேசிய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். மேலும், பலியானவர்களின் உடல்கள் மீட்கப்பட்டு கிழக்கு ஜகார்த்தாவில் உள்ள மருத்துவமனையில் அடையாளம் காண்பதற்காக வைக்கப்பட்டுள்ளன. இத்துடன், விபத்து ஏற்பட்ட கட்டடம் டிரோன் தயாரிக்கும் நிறுவனத்தின் அலுவலகம் எனவும், சோதனைப் பகுதியில் இருந்த பேட்டரிகளின் மூலம் தீ உருவாகியிருக்கக் கூடும் எனவும் முதற்கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

# இந்தியா - அமெரிக்கா இடையே இன்று வர்த்தக பேச்சுவார்த்தை

**டெல்லி, டிச. 10-**

இந்தியா - அமெரிக்கா இடையே இன்று வர்த்தக ஒப்பந்தப் பேச்சுவார்த்தை நடைபெறுகிறது.

தெற்கு மற்றும் மத்திய ஆசியாவுக்கான அமெரிக்க துணை வர்த்தக பிரதிநிதி ரிக் ஷ்விட்ஜெர் தலைமையிலான குழு மூன்று நாள் பயணமாக செவ்வாய்க்கிழமை இந்தியா வரவுள்ளது. இந்தக் குழு மத்திய வர்த்தகத் துறைச் செயலரும் இந்திய பிரதிநியுமான ராஜேஷ் அகர்வால் தலைமையிலான குழுவைச் சந்தித்து இருதரப்பு வர்த்தக ஒப்பந்தத்தின் முதல் கட்டத்தை இறுதி செய்வதற்கான பேச்சுவார்த்தையை நடத்தவுள்ளதாக அதிகாரபூர்வ வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்படும் பொருள்கள் மீது அதிகபட்சமாக 50 சதவீத வரியை அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் விதித்ததால் இரு நாடுகளிடையேயான உறவு பாதிக்கப்பட்டுள்ளது.

முன்னதாக, கடந்த செப்டம்பர் 16-ஆம் தேதி இந்தப் பேச்சுவார்த்தையில் பங்கேற்க அமெரிக்க குழு இந்தியா வந்தது. அதைத் தொடர்ந்து, மத்திய வர்த்தக அமைச்சர் பியூஷ் கோயல் தலைமையிலான இந்திய குழு கடந்த செப்டம்பர் 22-ஆம் தேதி அமெரிக்கா சென்று பேச்சுவார்த்தையில் பங்கேற்றது.

இருதரப்பு வர்த்தக ஒப்பந்தம் தொடர்பாக இதுவரை 6 சுற்று பேச்சுவார்த்தைகள் நிறைவுற்றுள்ளன. இரு நாடுகளிடையே தற்போது மேற்கொள்ளப்பட்டு வரும் ரூ. 17,18,207 கோடி (191 பில்லியன் டாலர்) மதிப்பிலான இருதரப்பு வர்த்தகத்தை வரும் 2030-ஆம் ஆண்டுக்குள் ரூ. 44,97,925 கோடி (500 பில்லியன் டாலர்) மதிப்புக்கு உயர்த்துவதை இந்த இருதரப்பு வர்த்தக ஒப்பந்தம் இலக்காக கொண்டுள்ளது.

# தங்கம் விலை சற்று சரிவு

**சென்னை, டிச. 10-**

தங்கம் விலை இந்த மாதம் தொடக்கம் முதலே ஏற்ற இறக்கமாக இருந்து வருகிறது. சென்னையில் ஆபரணத் தங்கத்தின் விலை சனிக்கிழமை கிராமுக்கு ரூ.40 உயர்ந்து ரூ.12,040-க்கும், சவரனுக்கு ரூ.320 உயர்ந்து ரூ.96,320-க்கும் விற்பனையானது. தொடர்ந்து வாரத்தின் முதல் நாளான திங்கள்கிழமை தங்கம் விலையில் மாற்றமின்றி, அதே விலைக்கு விற்பனையானது.

இந்த நிலையில், சென்னையில் ஆபரணத் தங்கத்தின் விலை நேற்று சவரனுக்கு ரூ. 320 குறைந்து ஒரு சவரன் ரூ. 96,000-க்கும் கிராமுக்கு ரூ. 40 குறைந்து ஒரு கிராம் ரூ.12,000-க்கும் விற்பனையானது. வெள்ளி விலை கிராமுக்கு ரூ.1 உயர்ந்து ரூ.199-க்கும், ஒரு கிலோ (கட்டி வெள்ளி) ரூ.1,000 உயர்ந்து ரூ.1.99 லட்சத்துக்கும் விற்பனையானது.

# காட்டு வழி பயணம் வேண்டாம்: ஐயப்ப பக்தர்களுக்கு அறிவுரை

**சபரிமலை, டிச. 10-**

காட்டு வழி பயணம் வேண்டாம் என்று ஐயப்ப பக்தர்களுக்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது.

கேரள ஐகோர்ட் உத்தரவின் பேரில், சபரிமலையில் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளது.


இந்நிலையில், நேற்று முன்தினம் சன்னிதானத்தில் கூடுதல் கலெக்டர் அருண் தலைமையில், உயர் அதிகாரிகளின் ஆய்வு கூட்டம் நடைபெற்றது. கூட்டத்துக்கு பின் அவர் கூறியதாவது:-

சபரிமலையில், தரிசனத்துக்கான ஆன்லைன் முன்பதிவு, உடனடி தரிசன முன்பதிவு தற்போது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டுள்ளது. இதனால் பக்தர்கள் சிரமம் இன்றி தரிசனம் செய்து வருகிறார்கள். கூட்ட தெரிசலை தவிர்க்க பக்தர்கள் முன்பதிவு செய்த நாளிலேயே தரிசனத்தை முடித்து கொள்ள வேண்டும்,

சபரிமலை தரிசனத்துக்கு வரும், பெண்கள், குழந்தைகள், நோயாளிகள், வயதானவர்கள் பாரம்பரிய காட்டு வழி பயணத்தை தவிர்த்த வேண்டும். அவர்கள் அனைவரும் நிலக்கல்- பம்பை வழியாக, சபரிமலைக்கு வருவது சிறந்தது, யானை, சிறுத்தை உட்பட வன மிருகங்களின் நடமாட்டம் இந்த வனப்பகுதிகளில் அதிக அளவில் இருக்கும் என்பதால், பாதுகாப்பு கருதி இந்த எச்சரிக்கை விடப்படுகிறது.

இந்த வழிகளில் வனத்துறை, தீயணைப்பு மீட்பு படையினர் 24 மணி நேரமும் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டு உள்ள போதிலும் எச்சரிக்கை தேவை. இவ்வாறு அவர் கூறினார்.

**10-12-2025**



## இன்றைய ராசி பலன்கள்

**மேஷம்:-** கஷ்டங்கள் என்றால் என்ன என அறிந்து கொள்வீர்கள். பண இழப்புகளைத் தவிர்க்க எச்சரிக்கையுடன் இருக்க வேண்டிய நாள். தேவையற்ற அவமானங்களும் ஏற்படும்.

**ரிஷபம்:-** தாயின் மனம் கோணாது நடந்து கொள்வது நல்லது.. எதைப் பார்த்தாலும் ஒருவிதமான பய உணர்வு ஏற்படும். தூக்கம் இன்மையால் அசதி ஏற்படும். பொருள்களைப் பாதுகாப்பது அவசியம்.

**மிதுனம்:-** உற்சாகம் மிகுந்த உன்னத நாள். குழந்தைகளின் வசதிகள், கல்வி ஆகியவை பற்றிய அக்கறை எடுத்துப் பாசத்தைப் பொழிவீர்கள். தன்னம்பிக்கையால் வெற்றி கிட்டும்.

**கடகம்:-** பணமுடை காரணமாக நிம்மதி குறையும். இறைசிந்தனை இன்னல்களைத் தீர்க்கும். வீட்டிலும், வெளியிலும் வீண்வாக்குவாதங்களைத் தவிர்த்தால் மனநிம்மதி பெருகும்.

**சிம்மம்:-** இன்று பௌர்ணமி நிலவு போல் உங்கள் முகம் பிரகாசிக்கும். புத்தி சாதுர்யமும், வாக்குவன்மையும் மேலிடும். வியாபாரிகள் மற்றவர்களைக் கவரும் வண்ணம் பேசி ஆதாயம் அடைவர்.

**கன்னி:-** கடின உழைப்பின் காரணமாக நேரத்துக்கு உணவருந்த முடியாத நிலை ஏற்படும். பசியால் பிறர் மீது தேவையற்ற வெறுப்பு ஏற்படும். முன் கோபத்தை அடக்க முன்னேற்றம் ஏற்படும்.

**துலாம்:-** எடுத்த காரியம் அனைத்திலும் வெற்றி மேல் வெற்றி கிட்டும். பல வழிகளிலும் தனலாபம் கிடைக்கும். வியாபாரம், தொழிலில் வரவு அதிகமாகி மகிழ்ச்சி நிலவும்.

**விருச்சிகம்:-** அரசு ஆதரவு, உதவிகள் கிடைக்கும். தேவைப்படும் போது மிக முக்கியமானவர்கள் கை கோடுப்பர். புதிய வேலைவாய்ப்பு சாத்திரங்களிலும், மந்திர, தந்திரங்களிலும் தேர்ச்சி ஆகிய நற்பலன்கள் உண்டாகும்.

**தனுசு:-** தெய்வ நம்பிக்கை கூடும். சுகம், சந்தோஷம், இனிய சுற்றுலாப் பயணங்கள் எல்லாம் ஏற்படும். ஆரோக்கியம் மேம்பாடு அடையும், தனலாபம் எதிர்பார்த்தபடி இருக்கும்.

**மகரம்:-** கோபத்தைத் தவிருங்கள், குழப்பங்கள் குறையும். நேர்மைக்கு மாறாக நடந்தால் நிம்மதி இருக்காது. உயர் அதிகாரிகளிடம் பணிவாக நடந்தால் அனுகூலமான ஆதாயங்கள் கிடைக்கும்.

**கும்பம்:-** பல வழி வகைகளிலும் பணவருமானம் வந்து குவியும். திருமண ஏற்பாடுகள் நடக்கலாம். வாழ்க்கையில் முன்னேற்றம் உண்டு. மாணவர்கள் கல்வியில் சிறந்து விளங்குவர்.

**மீனம்:-** ஆசைப்பட்டு வாங்க நினைத்த பொருட்கள் அனைத்தும் வீடு வந்து சேரும். ஆணையிடும் அதிகாரபதவி கிடைக்கலாம். தொழில் விரிவாக்கத்தால் வருமான உயர்வு இருக்கும்.

# ருவாண்டாவுக்கு ரூ.2 ஆயிரம் கோடி நிதி வழங்க அமெரிக்கா ஒப்புதல்

**வாஷிங்டன், டிச. 10-**

ஆப்பிரிக்க நாடான ருவாண்டாவுக்கு ரூ.2 ஆயிரம் கோடி நிதி வழங்க அமெரிக்கா ஒப்புதல் அளித்துள்ளது.

கிழக்கு ஆப்பிரிக்க நாடான ருவாண்டாவில் எய்ட்ஸ், மலேரியா உள்ளிட்ட பல தொற்றுநோய்கள் வேகமாக பரவுகின்றன. இதனை கட்டுப்படுத்த முடியாமல் அந்த நாட்டின் சுகாதாரத்துறை போராடி வருகிறது. இந்த நிலையில் காங்கோ உடனான அமைதி ஒப்பந்தம் குறித்த பேச்சுவார்த்தைக்காக ருவாண்டா அதிபர் பால் ககாமே அமெரிக்கா சென்றிருந்தார்.

பின்னர் ஜனாதிபதி டிரம்ப் முன்னிலையில் இரு நாடுகளின் தலைவர்களும் அமைதி ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டனர்.

தொடர்ந்து நாட்டின் சுகாதாரத்துறையை மேம்படுத்துவது தொடர்பாக ருவாண்டா அதிபர் பால் ககாமே அமெரிக்காவுடன் பேச்சுவார்த்தை நடத்தினார். அப்போது உலக சுகாதார திட்டத்தின்கீழ் சுமார் ரூ.2 ஆயிரம் கோடி வழங்கும் ஒப்பந்தத்தில் இரு தரப்பினரும் கையெழுத்திட்டனர்.

# அண்ணாமலையை சந்தித்தது ஏன்..? அ.ம.மு.க. டி.டி.வி.தினகரன் விளக்கம்

**சென்னை, டிச. 10-**

அண்ணாமலையை சந்தித்தது குறிதது டி.டி.வி.தினகரன் விளக்கம் அளித்துள்ளார்.

தமிழகத்தில் அடுத்த ஆண்டு சட்டசபை தேர்தல் நடைபெற உள்ளது. தேர்தலுக்கு இன்னும் சில மாதங்களே உள்ள நிலையில் அரசியல் கட்சிகள் தேர்தல் நடவடிக்கைகளை தீவிரப்படுத்தி வருகின்றன.

கூட்டணி, பிரசாரம், பொதுக்கூட்டம், நலத்திட்டப்பணிகள், கட்சி நிர்வாகிகளுடன் ஆலோசனை, கட்சி கட்டமைப்பை மேலும் வலுப்படுத்துதல் என பல்வேறு நடவடிக்கைகளை அரசியல் கட்சிகள் மேற்கொண்டு வருகின்றன.

தேர்தலில் அ.தி.மு.க. , பா.ஜ.க. கூட்டணி அமைத்துள்ளன. அதேவேளை, பா.ஜ.க. தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணியில் இருந்து டிடிவி தினகரன் தலைமையிலான அமமுக கடந்த செப்டம்பர் மாதம் விலகியது.

இதனிடையே, டிடிவி தினகரன் நேற்று முன்தினம் கோவையில் உள்ள அண்ணாமலை வீட்டிற்கு சென்றார். அங்கு இருவரும் ஒரு மணி நேரத்திற்கு மேல் ஆலோசனை நடத்தினர். இதனை தொடர்ந்து அண்ணாமலை நேற்று முன்தினம் இரவே டெல்லி புறப்பட்டு சென்றார்.

இந்நிலையில், டிடிவி தினகரன் கோவையில் செய்தியாளர்களை சந்தித்தார். அப்போது, அண்ணாமலையை சந்தித்தது குறித்து செய்தியாளர்கள் கேள்வி எழுப்பினர். அதற்கு பதில் அளித்த டிடிவி தினகரன் கூறுகையில்,

கூட்டணி குறித்து முடிவு செய்ய இன்னும் காலம் உள்ளது. அமமுகவை தவிர்த்துவிட்டு எந்த கூட்டணியும் ஆட்சி அமைக்க முடியாது. அமமுக இடம்பெறும் கூட்டணிதான் வெற்றிபெறும் , ஆட்சி அமைக்கும் கூட்டணியாக இருக்கும்.

கூட்டணி குறித்து பொறுத்திருந்து முடிவு எடுப்போம். அண்ணாமலை எனது நெருங்கிய நண்பர். நேற்றைய சந்திப்பு நட்பு ரீதியிலானது. அந்த சந்திப்பில் அரசியல் இல்லை. விலைபோகாத தொண்டர்கள் என்னுடன் பயணிக்கின்றனர்.

தினபூமியில் விளம்பரம் செய்து பயன் பெறுங்கள்

### திருப்பரங்குன்றம் விவகாரம்:
# கோவில் விவகாரங்களில் கோர்ட் தலையிடக்கூடாது
## தமிழக அரசு சார்பில் வாதம்

**மதுரை, டிச. 10-**

திருப்பரங்குன்றம் கோவில் விவகாரம் தொடர்பான விசாரணையின் போது கோவில் விவகாரங்களில் கோர்ட் தலையிடக்கூடாது என்று தமிழக அரசு சார்பில் வாதிடப்பட்டது.

திருப்பரங்குன்றம் மலையில் உள்ள உச்சிபிள்ளையார் கோவிலில் ஆண்டுதோறும் கார்த்திகை தீபத்தன்று தீபம் ஏற்றப்படும். ஆனால் இந்த தீபத்தை, மலையில் உள்ள தீபத்தூணில் ஏற்ற வேண்டும் என்று மதுரை எழுமலை பகுதியை சேர்ந்த ராம ரவிக்குமார், மதுரை ஐகோர்ட்டில் வழக்கு தொடர்ந்தார். சம்பந்தப்பட்ட பகுதியில் சிக்கந்தர் தர்கா உள்ளது. தீபத்தூணுக்கும், தர்காவுக்கும் குறுகிய இடைவெளி இருப்பதாகவும், அங்கு தீபம் ஏற்றும்பட்சத்தில் சட்டம், ஒழுங்கு பிரச்சினை ஏற்படும் எனவும் அரசு தரப்பில் எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டது.

இந்த வழக்கினை விசாரித்த நீதிபதி ஜி.ஆர்.சுவாமிநாதன், கார்த்திகை தீபமான 3-ந்தேதி திருப்பரங்குன்றம் மலையில் உள்ள தீபத்தூணில் தான் தீபம் ஏற்ற வேண்டும் என்று கடந்த 1-ந்தேதி உத்தரவிட்டார். ஆனால், 3-ந்தேதி வழக்கம் போல திருப்பரங்குன்றம் உச்சிபிள்ளையார் கோவிலில் கார்த்திகை தீபம் ஏற்றப்பட்டது. சட்டம்-ஒழுங்கு பிரச்சினையை காட்டி தீபத்தூணில் தீபம் ஏற்ற போலீசார் அனுமதி மறுத்துவிட்டனர்.

இதற்கிடையில் தமிழக அரசு சார்பில் உடனடியாக சுப்ரீம் கோர்ட்டில் மேல்முறையீடு மனு தாக்கல் செய்யப்பட்டது. இந்த சூழலில், திருப்பரங்குன்றம் மலையில் உள்ள தீபத்தூணிலும் தீபத்தை ஏற்ற போதிய முன்னேற்பாடு செய்யாத அலுவலர்கள் மீது கோர்ட் அவமதிப்பு நடவடிக்கை கோரிய வழக்கு மதுரை ஐகோர்ட்டில், தனி நீதிபதி ஜி.ஆர்.சுவாமிநாதன் அமர்வில் நேற்று விசாரணைக்கு வந்தது. அப்போது தமிழக அரசு சார்பில் வாதிடுகையில், "மேல்முறையீட்டு வழக்கு முடியும் வரை காத்திருக்க வேண்டும். அதற்குள் திரி, எண்ணெய், மலை எங்கும் போய்விடாது. நீதிபதி உத்தரவு சரியா தவறா என்பதற்கே மேல்முறையீடு செய்யப்பட்டுள்ளது. எப்படி இடைக்கால உத்தரவு கோர முடியும்.

கோவில்களில் இதைச் செய்யக்கூடாது, இதைச் செய்ய வேண்டும் என யாரும் சொல்ல முடியாது. கோர்ட் கூட சொல்ல முடியாது. தேவஸ்தானமே முடிவு செய்ய இயலும். இது குறித்த விரிவான உத்தரவுகள் உள்ளன.


பிரச்னை வந்தால், கோர்ட்டை காரணம் காட்ட காட்ட இயலாது. அரசே பொறுப்பேற்க வேண்டும். சட்ட ஒழுங்கை கருத்தில் கொள்ள வேண்டும். மேல்முறையீட்டு வழக்கு விசாரணைக்கு வரவுள்ளதால், அதன்பின் இந்த வழக்கை பட்டியலிட வேண்டும்" என்று தெரிவிக்கப்பட்டது.

### பீகார் சட்டசபை தேர்தல் வெற்றி:
# தே.ஜ. கூட்டணி எம்.பி.க்கள் பிரதமர் மோடிக்கு பாராட்டு

**டெல்லி, டிச. 10-**

டெல்லியில் நடந்த தே.ஜ. கூட்டணி பாராளுமன்ற குழுக்கூட்டத்தில் பிரதமர் மோடிக்கு மாலை அணிவித்துப் பாராட்டு தெரிவித்தனர்.

பாராளுமன்ற குளிர்கால கூட்டத்தொடர் டிசம்பர் 1-ம் தேதி தொடங்கி 19-ம் தேதி வரை நடைபெற உள்ளது. கூட்டத்தொடரில் 15 அமர்வுகள் இடம்பெற உள்ளன. இந்த நிலையில், டெல்லியில் தேசிய ஜனநாயகக் கூட்டணி பாராளுமன்ற குழுக் கூட்டம் நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் பிரதமர் மோடி, மத்திய அமைச்சர்கள் ராஜ்நாத் சிங், அமித் ஷா, கிரண் ரிஜிஜூ மற்றும் பாஜக தலைவர் ஜெ.பி. நட்டா ஆகியோர் கலந்து கொண்டனர். சமீபத்தில் பீகார் தேர்தலில் மகத்தான வெற்றி பெற்றதற்காக தே.ஜ. கூட்டணி எம்பிக்கள் பிரதமர் மோடிக்கு



மாலை அணிவித்துப் பாராட்டு தெரிவித்தனர்.

தேசிய ஜனநாயகக் கூட்டணி பாராளுமன்றக் கட்சியின்போது நடைபெற்ற விவாதங்கள் குறித்து கிரண் ரிஜிஜூ கூறுகையில், பிரதமர் நரேந்திர மோடி, மக்களின் நலனுக்கான சீர்திருத்தங்களில் கவனம் செலுத்த எம்.பி.க்களுக்கு வழிகாட்டுதல் வழங்கியதாகக் அவர் கூறினார். பீகார் தேர்தலில் தேசிய ஜனநாயகக் கூட்டணி வெற்றி பெற்றதற்கு அனைத்து தேசிய ஜனநாயகக் கூட்டணித் தலைவர்களும் பிரதமர் மோடிக்கு வாழ்த்துத் தெரிவித்தனர்.

அனைத்து தேசிய ஜனநாயகக் கூட்டணி எம்.பி.க்களும் தங்கள் தொகுதிகளுக்காகப் பணியாற்ற பிரதமர் மோடி வழிகாட்டினார். மக்களின் வாழ்க்கையை மேம்படுத்துவதற்கும், எவ்விதப் பிரச்னைகளை எதிர்கொள்ளாமல் இருக்கவும் அனைத்து துறைகளிலும் சீர்திருத்தங்களை மேற்கொள்வதையும் பிரதமர் வலியுறுத்தினார். சட்டங்கள் மக்களுக்கு உதவ வேண்டும். இளைஞர்களுடன் இணையுமாறும் எம்பிக்களை அவர் கேட்டுக் கொண்டார். இந்த வழிகாட்டுதலுக்குப் பிரதமருக்கு எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இது தேசிய ஜனநாயகக் கூட்டணி பாராளுமன்றக் கட்சியின் மிகச் சிறந்த கூட்டமாகும் என்று அவர் கூறினார்.

# சோனியா காந்தி பிறந்தநாள்: முதல்வர் ஸ்டாலின் வாழ்த்து

**சென்னை, டிச. 10-**



சோனியா காந்திக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் பிறந்தநாள் வாழ்த்து தெரிவித்துள்ளார்.

காங்கிரஸ் பாராளுமன்ற கட்சி தலைவர் சோனியா காந்தி நேற்று தன்னுடைய 79-வது பிறந்தநாளை கொண்டாடினாற். அவருக்கு காங்கிரஸ் கட்சியினர், அரசியல் தலைவர்கள் உள்ளிட்ட பலர் சமூக வலைதளங்களில் வாழ்த்து தெரிவித்து வருகின்றனர். அந்த வகையில் தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின், சோனியா காந்திக்கு பிறந்தநாள் வாழ்த்து தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக எக்ஸ் தளத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில், காங்கிரஸ் பாராளுமன்றக் கட்சித் தலைவர் சோனியா காந்திக்கு பிறந்தநாள் வாழ்த்துக்கள். அவரது வாழ்க்கை தியாகம், தன்னலமற்ற பொதுப் பயணம், மதச்சார்பின்மை மற்றும் அரசியலமைப்பு விழுமியங்களை நிலைநிறுத்துவதற்கான உறுதியான உறுதி ஆகியவற்றை பிரதிபலிக்கிறது. இந்தியாவிற்கான நமது கூட்டு முயற்சிகளை அவரது கொள்கை ரீதியான பாதையும் வழிகாட்டுதலும் தொடர்ந்து வலுப்படுத்தட்டும்'' என்று குறிப்பிட்டுள்ளார்.



அ.தி.மு.க. பொதுச்செயலாளரும், சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவருமான எடப்பாடி கே. பழனிசாமியை செங்கோட்டையனின் மூத்த சகோதரர் காளியப்பன் அவர்களுடைய மகன் செல்வன் தலைமையில் குள்ளம்பாளையம் கிராமம், கோபி செட்டிப்பாளையம் தொகுதி உள்ளிட்ட பல்வேறு பகுதிகளை சேர்ந்த 50- க்கும் மேற்பட்டோர் நேரில் சந்தித்து தங்களை அ.தி.மு.க.வில் இணைத்துக் கொண்டனர்.

# தாம்பரத்தில் அ.தி.மு.க. சார்பில் வரும் 16-ம் தேதி ஆர்ப்பாட்டம்

**சென்னை, டிச. 10-**

தி.மு.க. அரசை கண்டித்து சென்னை தாம்பரத்தில் அ.தி.மு.க. சார்பில் வரும் 16-ம் தேதி ஆர்ப்பாட்டம் நடத்த இருக்கிறது.

அ.தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டிருப்பதாவது:-

தாம்பரம் மாநகராட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் நிலவி வரும் பல்வேறு சுகாதார சீர்கேடுகள் மற்றும் நிர்வாக சீர்கேடுகளுக்குக் காரணமான; மக்களின் அடிப்படைத் தேவைகளை உடனுக்குடன் செயல்படுத்தாமல் கிடப்பில் போட்டு வைத்திருக்கும் தாம்பரம் மாநகராட்சி நிர்வாகத்தைக் கண்டித்து; மக்களின் அடிப்படைத் தேவைகளை உடனடியாக நிறைவேற்றிட வலியுறுத்தியும், அ.தி.மு.க. செங்கல்பட்டு மேற்கு மாவட்டத்தின் சார்பில் 16-ம் தேதி (செவ்வாய்க்கிழமை) மாலை 4 மணியளவில், மேற்கு தாம்பரம், சண்முகம் சாலையில், மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெறும்.

இந்தக் கண்டன ஆர்ப்பாட்டம், கழக புரட்சித் தலைவி பேரவைச் செயலாளரும், மதுரை புறநகர் மேற்கு மாவட்டக் கழகச் செயலாளரும், சட்டமன்ற எதிர்க்கட்சி துணைத் தலைவரும், முன்னாள் அமைச்சருமான ஆர்.பி.உதயகுமார் தலைமையிலும்; செங்கல்பட்டு மேற்கு மாவட்டக் கழகச் செயலாளர் சிட்லபாக்கம் ச. ராசேந்திரன், முன்னிலையிலும் நடைபெறும்.

இந்தக் கண்டன ஆர்ப்பாட்டத்தில், செங்கல்பட்டு மேற்கு மாவட்டத்தைச் சேர்ந்த தலைமைக் கழகச் செயலாளர், கழக சார்பு அணிகளின் நிர்வாகிகள், முன்னாள் பாராளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், மாவட்டத்தில் பல்வேறு நிலைகளில் பணியாற்றி வரும் நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்புகளின் இந்நாள், முன்னாள் பிரதிநிதிகள் மற்றும் கூட்டுறவு சங்கங்களின் முன்னாள் பிரதிநிதிகளும், கழக உடன்பிறப்புகளும், வியாபாரிகள், பல்வேறு தரப்பட்ட தொழிலாளர்கள் உள்ளிட்ட பொதுமக்கள் அனைவரும் பெருந்திரளான அளவில் கலந்துகொள்ளுமாறு அன்போடு கேட்டுக் கொள்கிறேன். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# கேரளாவில் உள்ளாட்சி தேர்தல்: விறுவிறுப்பான வாக்குப்பதிவு

**திருவனந்தபுரம், டிச. 10-**

கேரளாவில் உள்ளாட்சி தேர்தலை முன்னிட்டு மக்கள் நீண்ட வரிசையில் நின்று தங்களது வாக்குகளை செலுத்தினர்.

கேரளாவில் கிராம பஞ்சாயத்து, ஊராட்சி ஒன்றியம், நகராட்சி வார்டுகளுக்கான உள்ளாட்சி தேர்தல் 2 கட்டங்களாக நடத்த தேர்தல் ஆணையம் முடிவு செய்தது. அதன்படி, முதற்கட்டமாக திருவனந்தபுரம், கொல்லம், கோட்டயம், ஆலப்புழை, எர்ணாகுளம், பத்தனம்திட்டா, இடுக்கி ஆகிய 7 மாவட்டங்களுக்கு உள்ளாட்சி தேர்தல் நேற்று நடைபெற்றது.

பஞ்சாயத்து அடிப்படையில் ஒரு வாக்காளர் கிராம, ஊராட்சி மற்றும் மாவட்ட பஞ்சாயத்து என 3 வாக்குகள் பதிவு செய்ய வேண்டும். வாக்குப்பதிவு காலை 7 மணிக்கு தொடங்கிய நிலையில் மாலை 6 மணிக்கு நிறைவடைந்தது. காலை முதலே மக்கள் நீண்ட வரிசையில் நின்று வாக்குகளை ஆர்வமாக செலுத்தினர்.

உள்ளாட்சி தேர்தலில் பதிவாகும் வாக்குகள் வரும் 13ம் தேதி எண்ணப்பட்டு அன்றே முடிவுகள் அறிவிக்கப்பட உள்ளன. கேரளாவில் அடுத்த ஆண்டு சட்டசபை தேர்தல் நடைபெற உள்ள நிலையில் தற்போது நடைபெறும் உள்ளாட்சி தேர்தல் அரசியல் முக்கியத்துவம் வாய்ந்ததாக பார்க்கப்படுகிறது. கேரளத்தில் அடுத்தாண்டு சட்டப்பேரவைத் தேர்தலும் நடைபெற உள்ளது குறிப்பிடத்தக்கது.

### தமிழகம் மட்டுமல்லாமல்,
# புதுச்சேரிக்கும் குரல் கொடுப்பேன்: பிரம்மாண்ட கூட்டத்தில் விஜய் பேச்சு

**புதுச்சேரி, டிச. 10-**

புதுவை கூட்டத்திற்கு நல்ல பாதுகாப்பு கொடுத்துள்ளனர். பாதுகாப்பு வழங்கிய புதுச்சேரி முதல்வருக்கு நன்றி என்றும் தமிழகம் மட்டுமல்லாமல், புதுச்சேரிக்கும் குரல் கொடுப்பேன் என்றும் நேற்று நடந்த பொதுக்கூட்டத்தில் த.வெ.க. தலைவர் விஜய் தெரிவித்துள்ளார்.



தமிழகத்தில் பிரசார வாகனத்தில் சென்று மக்கள் சந்திப்பு நிகழ்ச்சிகளை நடத்தி வந்த தமிழக வெற்றிக் கழக தலைவர் விஜய்க்கு, கரூர் கூட்ட நெரிசல் சம்பவத்தில் 41 பேர் பலியானதற்கு பிறகு அனுமதி மறுக்கப்பட்டது. பொதுக்கூட்டத்திற்கு மட்டுமே அனுமதி அளிக்கப்படும் என்றும் கூறப்பட்டது.

இந்த நிலையில், தமிழகம் போல் அண்டை மாநிலமான புதுச்சேரியிலும் மக்கள் சந்திப்பு நிகழ்ச்சிக்கு அனுமதி மறுக்கப்பட்டது. கடும் கட்டுப்பாடுகளுக்கு மத்தியில் 5 ஆயிரம் பேர் மட்டுமே பங்கேற்கும் வகையில், புதுச்சேரி உப்பளம் மைதானத்தில் வாகனத்தில் நின்று பொதுக்கூட்டம் நடத்த அனுமதி அளிக்கப்பட்டது. அதன்படி, நேற்று புதுச்சேரி உப்பளம் மைதானத்தில் பொதுக்கூட்டம் நடைபெற்றது. கூட்டத்தில், தமிழக வெற்றிக் கழக தலைவர் விஜய் பேசியதாவது:-

என் நெஞ்சில் குடியிருக்கும் புதுச்சேரி மக்களுக்கு வணக்கம். எல்லோரும் எப்படி இருக்கீங்க. இந்த மத்திய அரசுக்குத்தான் தமிழ்நாடு தனி மாநிலம், புதுச்சேரி தனி யூனியன் பிரதேசம் என்று இருப்பார்கள். நாம் வேறு வேறு கிடையாது. நாம் ஒன்றுதான். எல்லோரும் சொந்தம்தான். நாம் பார்க்கும்போது பாச உணர்வு, அதுமட்டும் இருந்தால் போதும். உலகில் எந்த மூலையில் நம் வகையறா இருந்தாலும் அவர்கள் நம் உயிர்தான். பாரதியார் இருந்த மண். பாரதிதாசன் பிறந்த மண்.

1977-ல் எம்.ஜி.ஆர். தமிழகத்தில் ஆட்சி அமைத்தார். புதுச்சேரி மக்கள் 30 ஆண்டுகளாக தாங்கி பிடிக்கிறீர்கள். தமிழகம் மட்டுமல்லாமல், புதுச்சேரிக்கும் குரல் கொடுப்பேன். தமிழக அரசு போல் புதுச்சேரி அரசு கிடையாது. நல்ல பாதுகாப்பு கொடுத்துள்ளனர். புதுச்சேரி முதல்வருக்கு நன்றி. இதைப் பார்த்து தமிழக முதல்வர் கற்றுக்கொள்ள வேண்டும். வரும் தேர்தலில் 100 சதவீதம் கற்றுக்கொள்வார்கள். அதை மக்கள் பார்த்துக்கொள்வார்கள். கூட்டணியில் இருந்தாலும் புதுச்சேரி அரசை மத்திய அரசு கண்டு கொள்ளவில்லை. மாநில அரசாக மாற்ற தீர்மானம் போட்டு அனுப்பினாலும் மத்திய அரசு கண்டுகொள்ளவில்லை.

மூடிய மில்களை திறக்கவில்லை, இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பை உருவாக்கவில்லை. காரைக்கால் மாஹி, ஏனம் பகுதியில் முன்னேற்றமே இல்லை. புதுச்சேரி - கடலூர் மார்க்கத்தில் ரெயில் திட்டம் வேண்டும். புதுச்சேரி மக்களிடம் சொல்கிறேன். தி.மு.க.வை நம்பாதீங்க. நம்பவைத்து ஏமாற்றுவார்கள். மத்திய நிதிக்குழுவில் புதுச்சேரி இடம்பெறவில்லை. அதனால், போதிய நிதி ஒதுக்கப்படவில்லை. வெளியே கடன் வாங்க வேண்டிய நிலை உள்ளது.

மாநில அந்தஸ்து வாங்கினால் மட்டும் போதாது. தொழில் வளர்ச்சியும் வேண்டும். இந்திய அளவில் ரேசன் கடைகளே இல்லாத மாநிலம் புதுச்சேரிதான். மற்ற மாநிலங்களைப் போல் இங்கும் ரேசன் கடைகளை தொடங்கி மக்களுக்கு மானிய விலையில் பொருட்களை வழங்க வேண்டும். காரைக்கால் மீனவர்கள் இலங்கை கடற்படையினரால் சிறைப்பிடிக்கப்படுவதை தடுக்க வேண்டும். புதுச்சேரி தேர்தல் களத்தில் தமிழக வெற்றிக் கழக கொடி பறக்கும். நம்பிக்கையாக இருங்கள். வெற்றி நிச்சயம். இவ்வாறு அவர் பேசினார்.

# இண்டிகோ விமான சேவை பாதிப்பு: ஒரேநாளில் 450 விமானங்கள் ரத்து

**டெல்லி, டிச. 10-**

இண்டிகோ விமான சேவை பாதிக்கப்பட்டதை தொடர்ந்து நேற்று 450 விமானங்கள் ரத்து செய்யப்பட்டன. இதனால் பயணிகள் கடும் அவதியடைந்துள்ளனர்.

விமான விபத்துக்கள் உள்ளிட்ட பல்வேறு பிரச்சினைகளை தவிர்க்க டெல்லி ஐகோர்ட் உத்தரவின் அடிப்படையில் விமான நிறுவனங்களுக்கு சிவில் விமான போக்குவரத்து துறை புதிய விதிகளை வகுத்தது. புதிய விதிகளை அமல்படுத்த 2 ஆண்டுகள் அவகாசம் வழங்கப்பட்டது. ஆனால், சிவில் விமான போக்குவரத்து துறை வகுத்த புதிய விதிகளை இண்டிகோ அமல்படுத்தவில்லை.

குறைவான விமானிகள், பணியாளர்களுடன் சேவையை தொடர்ந்தது. இதனால், கடந்த 1ம் தேதி முதல் இண்டிகோ விமான சேவை கடும் பாதிப்பை சந்தித்து வருகிறது. போதிய விமானிகள் இல்லாத காரணத்தால் நிறுவனத்தின் உள்நாட்டு விமான சேவை பல ரத்து செய்யப்பட்டு வருகின்றன.

இந்நிலையில், நேற்று ஒரேநாளில் 450 இண்டிகோ விமானங்கள் ரத்து செய்யப்பட்டுள்ளன. சென்னை, மும்பை, டெல்லி, பெங்களூரு என பல்வேறு நகரங்களுக்கான இண்டிகோ விமான சேவை ரத்து செய்யப்பட்டுள்ளது. இதனால், பயணிகள் கடும் அவதியடைந்துள்ளனர். அதேவேளை, இண்டிகோ விமான சேவை இன்னும் ஓரிரு நாட்களில் இயல்புநிலைக்கு திரும்பும் என்று விமான நிறுவனம் தெரிவித்துள்ளது.

### என் பெயர், படத்தை பயன்படுத்தக்கூடாது:
# அன்புமணிக்கு ராமதாஸ் எச்சரிக்கை

**சென்னை, டிச. 10-**

இனி என் பெயர், படத்தை பயன்படுத்த அன்புமணிக்கு உரிமை இல்லை என்று ராமதாஸ் எச்சரித்துள்ளார். மேலும் நான் தான் பா.ம.க.விற்கு நிறுவனர், தலைவர் என்றும் அவர் மீண்டும் தெரிவித்துள்ளார்.

பா.ம.க. தலைவர் பதவி தொடர்பாக டாக்டர் ராமதாசுக்கும், அவருடைய மகன் டாக்டர் அன்புமணி ராமதாசுக்கும் இடையே கருத்து மோதல்கள் இருந்து வருகிறது. இருதரப்பில் இருந்தும் இதுதொடர்பாக தேர்தல் கமிஷனில் முறையிட்டு வந்தனர். பல கடிதங்கள் அளிக்கப்பட்டன.

இந்தநிலையில் தேர்தல் கமிஷன் அன்புமணி ராமதாஸ் தான் தலைவர் என்று கூறிவிட்டது. இந்த உத்தரவுக்கு எதிராக டாக்டர் ராமதாஸ் சார்பில் டெல்லி ஐகோர்ட்டில் ரிட் மனு தாக்கல் செய்யப்பட்டது. இந்த மனுவை நீதிபதி மினி புஷ்கர்னா விசாரித்தார். அப்போது தேர்தல் கமிஷனுக்கு எதிரான டாக்டர் ராமதாசின் மனுவை முடித்து வைத்ததுடன், உரிமையியல் கோர்ட்டை நாடலாம் என்றும் டெல்லி ஐகோர்ட் அறிவுறுத்தியது.

இந்த நிலையில் டாக்டர் ராமதாஸ் செய்தியாளர்கள் சந்திப்பில் கூறியதாவது:- தேர்தல் ஆணையத்தில் வழங்கப்பட்ட ஆவணத்தில் எனது கையெழுத்தை போலியாக போடப்பட்டுள்ளனர். 46 ஆண்டுகளாக உழைத்தவரை அசிங்கமாக பேசுவதா?. கண் தெரியவில்லை, காது கேட்கவில்லை என்று கூறுவதா?. என்னை பற்றி பேச அன்புமணிக்கு எந்த உரிமையும் கிடையாது. கட்சி எனக்கு இல்லை என்று சொல்வதற்கு ஒரு பிள்ளை.

இனி என் பெயர், படத்தை அன்புமணி பயன்படுத்தக்கூடாது; அதற்கு அவருக்கு உரிமை இல்லை. வேண்டுமென்றால் அன்புமணி தனிக்கட்சி தொடங்கிக்கொள்ளட்டும். நான் உருவாக்கிய பா.ம.க.வை அன்புமணி உள்ளிட்ட யாரும் உரிமை கொண்டாட முடியாது. நான் தான் பா.ம.க.விற்கு நிறுவனர், தலைவர். இவ்வாறு அவர் கூறினார்.

### கூட்ட நெரிசல் ஏற்பட்டால் யார் பொறுப்பு?
# த.வெ.க. ஆனந்தை கடுமையாக எச்சரித்த புதுவை பெண் எஸ்.பி.

**சென்னை, டிச. 10-**

கூட்ட நெரிசல் ஏற்பட்டால் யார் பொறுப்பு? என்று த.வெ.க. பொதுச்செயலாளர் ஆனந்தை புதுச்சேரி பெண் எஸ்.பி. கடுமையாக எச்சரித்த சம்பவம் அங்கு பரபரப்பை ஏற்படுத்தியது.



த.வெ.க. தலைவர் விஜயின் கரூர் பொதுக் கூட்டத்தில் கூட்ட நெரிசலில் சிக்கி உயிரிழந்த சம்பவம் நாடு முழுவதும் கடும் அதிர்வலைகளை ஏற்படுத்தியது. இந்த சம்பவம் முடிந்து 72 நாட்களுக்கும் மேல் ஆகியுள்ள நிலையில், புதுச்சேரியில் மக்கள் சந்திப்பு பிரசாரம் மேற்கொள்ள த.வெ.க. சார்பில் அனுமதி கேட்கப்பட்டிருந்தது. புதுச்சேரியில் விரிவான சாலை வசதிகள் இல்லாததாலும், மக்கள் நெருக்கம் அதிகம் உள்ள பகுதி என்பதாலும் விஜயின் ரோடு ஷோவுக்கு அனுமதி மறுக்கப்பட்டது. த.வெ.க. பொதுச் செயலாளர் புஸ்ஸி ஆனந்த் அம்மாநிலத்தின் முதலமைச்சரை சந்தித்துப் பேசியும் அனுமதி மறுக்கப்பட்டது. மாறாக பொதுக் கூட்டம் நடத்த அனுமதி அளிக்கப்பட்டது.

அந்த வகையில், புதுச்சேரி உப்பளம் ஹெலிபேடு மைதானத்தில் தமிழக வெற்றிக்கழகத்தின் பொதுக் கூட்டம் நேற்று நடந்தது. காலை 10.30 மணிக்கு ஹெலிபேடு மைதானத்திற்கு வந்த விஜய் பிரசார மேடையில் உரையாற்றினார். விஜயைப் பார்ப்பதற்காக ஏராளமான இளைஞர்கள், தொண்டர்கள் குவிந்தனர். கரூர் சம்பவத்துக்குப் பிறகு முதல்முறையாக பொதுவெளியில் நடக்கும் கூட்டம் என்பதால் அசம்பாவிதம் ஏற்படாத வகையில், பல்வேறு கட்டுப்பாடுகள் விதிக்கபட்டிருந்தன. ஆனால், காலை முதலே ஏராளமான தொண்டர்கள் குவியத் தொடங்கினர். ஒரே நேரத்தில் ஆயிரக்கணக்கானோர் குவிந்ததால் அப்பகுதியில் பரபரப்பு ஏற்பட்டது.

தொண்டர்கள் முண்டியடித்துக் கொண்டிருந்த நிலையில் போலீஸார் அவர்களை ஒழுங்குபடுத்தி அனுப்பிக் கொண்டிருந்தனர். அப்போது, த.வெ.க. பொதுச்செயலாளர் புஸ்ஸி ஆனந்த், கியூ ஆர் கோடு இல்லாமலேயே சில தொண்டர்களை உள்ளே செல்ல அனுமதித்தார். அங்கிருந்த அனைவரையும் உள்ளே விடுமாறு மற்றொரு த.வெ.க. நிர்வாகியும் கூறினார். இதனைப்பார்த்து கோபம் அடைந்த பெண் காவல் கண்காணிப்பாளர் ஈஷா சிங், புஸ்சி ஆனந்த் உள்பட த.வெ.க. நிர்வாகிகளை எச்சரித்தார். கரூரில் 41 பேர் உயிரிழந்துள்ளனர். புதுச்சேரியில் நெரிசல் ஏற்பட்டால் யார் பொறுப்பு. தான் என்ன வேலை செய்ய வேண்டும் என்று த.வெ.க. நிர்வாகிகள் கூறக் கூடாது என்று கூறி, பாஸ் இல்லாதவர்களை உள்ளே செல்ல அனுமதி மறுத்தார்.

# புதுவை: விஜய் கூட்டத்திற்கு துப்பாக்கியுடன் வந்த நபர்...!

**புதுவை, டிச. 10-**

புதுவையில் விஜய் கூட்டத்திற்கு துப்பாக்கியுடன் வந்த சிவகங்கையை சேர்ந்த நபரால் பரபரப்பு ஏற்பட்டது.



கரூர் துயர சம்பவத்திற்குப் பிறகு தமிழக வெற்றிக்கழகத் தலைவர் விஜய் நேற்று பொதுக்கூட்டத்தில் பங்கேற்று உரையாற்றுகிறார். இதற்காக கடும் நிபந்தனைகளுடன் உப்பளம் துறைமுக மைதானத்தில் பொதுக்கூட்டம் நடத்த அனுமதியளிக்கப்பட்டுள்ளது. கியூஆர் குறியீடு இருந்தால் தான் அனுமதி அளிக்கப்படும் என்ற நிபந்தனையுடன் 5 ஆயிரம் பேருக்கு மட்டுமே பொதுக் கூட்டத்தில் பங்கேற்க அனுமதி அளிக்கப்படும் என்று காவல் துறை கண்டிப்புடன் கூறியுள்ளது. இதன்படி, பொதுக்கூட்டத்திற்கு வரும் தவெக நிர்வாகிகள் தீவிர பரிசோதனைக்கு பிறகே அனுமதிக்கப்பட்டு வருகிறார்கள்.

இந்த நிலையில், விஜய் பொதுக்கூட்டம் நடைபெறும் இடத்திற்கு துப்பாக்கியுடன் வந்த நபரால் பரபரப்பு ஏற்பட்டது.

மெட்டல் டிடெக்டர் மூலம் பரிசோதனை செய்த போது எச்சரிக்கை அலாரம் ஒலித்ததால், அந்த நபரை நிறுத்தி போலீசார் சோதனை செய்தனர். இதில், இடுப்பில் கைத்துப்பாக்கியை மறைத்து வைத்து இருந்தது தெரியவந்தது. அவரிடம் நடத்திய விசாரணையில், சிவகங்கையை சேர்ந்த த.வெ.க. நிர்வாகி மருத்துவர் பிரபுவின் தனி பாதுகாவலர் என்று முதல் கட்ட தகவல் வெளியாகியுள்ளது. அவரிடம் போலீசார் தொடர்ந்து விசாரணை நடத்தி வருகிறார்கள்.

### தமிழக பா.ஜ.க. முன்னாள் தலைவர்
# அண்ணாமலை டெல்லி பயணம்

**சென்னை, டிச. 10-**

தமிழகத்தில் அடுத்த ஆண்டு சட்டசபை தேர்தல் நடைபெறுவதை தொடர்ந்து அண்ணாமலை டெல்லிக்கு புறப்பட்டார்.

தமிழகத்தில் அடுத்த ஆண்டு சட்டசபை தேர்தல் நடைபெற உள்ளது. தேர்தலுக்கு இன்னும் சில மாதங்களே உள்ள நிலையில் அரசியல் கட்சிகள் தேர்தல் நடவடிக்கைகளை தீவிரப்படுத்தி வருகின்றன. கூட்டணி, பிரசாரம், பொதுக்கூட்டம், நலத்திட்டப்பணிகள், கட்சி நிர்வாகிகளுடன் ஆலோசனை, கட்சி கட்டமைப்பை மேலும் வலுப்படுத்துதல் என பல்வேறு நடவடிக்கைகளை அரசியல் கட்சிகள் மேற்கொண்டு வருகின்றன.

தேர்தலில் அதிமுக , பா.ஜ.க. கூட்டணி அமைத்துள்ளன. அதேவேளை, பா.ஜ.க. தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணியில் இருந்து ஓ.பன்னீர் செல்வம் தலைமையிலான அதிமுக தொண்டர்கள் மீட்புக்குழு , டிடிவி தினகரன் தலைமையிலான அமமுக விலகின. அதேவேளை, இந்த இரு கட்சிகளையும் மீண்டும் கூட்டணிக்குள் கொண்டுவர பா.ஜ.க. முயற்சித்து வருகிறது. அதன்படி, தமிழக பா.ஜ.க. முன்னாள் தலைவர் அண்ணாமலை கடந்த 3 தினங்களுக்கு முன்பு ஓ.பன்னீர் செல்வத்தை சந்தித்து ஆலோசனை நடத்தினார். அதேபோல், அமமுக பொதுச்செயலாளர் டிடிவி தினகரன் நேற்று முன்தினம் கோவையில் உள்ள அண்ணாமலை வீட்டிற்கு சென்றார். அங்கு இருவரும் ஒருமணி நேரத்திற்கு மேல் ஆலோசனை நடத்தினர்.

இந்நிலையில், அண்ணாமலை நேற்று முன்தினம் இரவு திடீர் பயணமாக கோவையில் இருந்து விமானம் மூலம் டெல்லி புறப்பட்டு சென்றார். ஓ.பன்னீர் செல்வம், டிடிவி தினகரனுடன் ஆலோசனை நடத்திய அண்ணாமலை டெல்லி புறப்பட்டு சென்றுள்ளார். கூட்டணி குறித்த ஓ.பன்னீர் செல்வம், டிடிவி தினகரனின் நிலைப்பாடு குறித்து பா.ஜ.க. தலைமையிடம் அண்ணாமலை கூறுவார் என எதிர்பார்க்கப்படுகிறது. இதனால் அண்ணாமலையின் டெல்லி பயணம் அரசியல் முக்கியத்துவம் வாய்ந்ததாக பார்க்கப்படுகிறது.

## தலைவர்கள் சொல்வதை படிங்க....



நேரு தலைமையிலான காங்கிரஸ் வந்தே மாதரத்தின் முக்கிய பகுதிகளை அகற்றியதாக பிரதமர் குற்றம் சாட்டினார். உள்துறை அமைச்சர் முஸ்லிம் திருப்திப்படுத்தியதாக இப்போது பேசுகிறார். முஸ்லிம் லீக்குடன் கூட்டணி வைத்து வங்கத்தில் நீங்கள் ஒரு அரசாங்கத்தை அமைத்தபோது, உங்கள் தேசபக்தி எங்கே இருந்தது?

**- கார்கே**



தமிழகத்தில் பா.ஜ.க. மற்றும் மதவாத அமைப்புகளால் காலூன்ற முடியவில்லை என்பதால் தற்போது கார்த்திகை தீபம் ஏற்றுவோம் என்று கூறி பக்தியின் பெயரால் கலவரத்தை நடத்த திட்டமிட்டு செயல்பட்டு வருகிறது. எனவே, தமிழக மக்கள் விழிப்போடு இருந்து, ஆர்.எஸ்.எஸின் மதவாதத் திட்டங்களை முறியடிக்க வேண்டும்.

**- கி.வீரமணி**



பா.ஜ.க.தான் அதிகாரத்தின் உச்சத்தில் இருக்கவேண்டும், மற்றவர்கள் தனக்கு கீழ் என்று எண்ணுகிறது. வாக்காளர் சிறப்பு தீவிர திருத்தம் சட்ட விரோதமானது. அதை நிறுத்த வேண்டும். தேர்தல் ஆணையரை நியமிக்கும் குழுவில் இருந்து இந்தியாவின் தலைமை நீதிபதி ஏன் நீக்கப்பட்டார்? நாட்டின் தலைமை நீதிபதி மீதே நம்பிக்கை இல்லையா?

**- ராகுல் காந்தி**



சமாஜ்வாடி கட்சி எம்.பி. அவதேஷ் பிரசாத், அயோத்தியை உள்ளடக்கிய பைசாபாத் மக்களவை தொகுதியில் பா.ஜ.க.வை தோற்கடித்தார். எங்கள் வெற்றி வகுப்புவாத அரசியல் வேலை செய்யாது என்பதை உறுதி செய்தது. வகுப்புவாத அரசியலை பா.ஜ.க. எங்கு தொடங்கியதோ, அதே அயோத்தியில் எங்கள் உத்தர பிரதேச மக்கள் அதை முடித்துவிட்டனர்.

**- அகிலேஷ் யாதவ்**

# ஜெயலலிதா நினைவு நாளையொட்டி சென்னை புதுவண்ணையில் 500 பேருக்கு அன்னதானம்



**திருவொற்றியூர் டிச.10**

மறைந்த முதலமைச்சர் ஜெயலலிதா 9ம் ஆண்டு நினைவு நாள் நிகழ்வுசென்னை புதுவண்ணாரப்பேட்டை 39ஆவது வடக்கு வட்டம் தனபால் நகர் சந்திப்பில் வட்ட கழக செயலாளர் ஆர்.சிவகுமார் ஏற்பாட்டில் மாவட்ட துணை செயலாளர் லட்சுமிசிவகுமார் தலைமையில் பகுதி செயலாளர் சந்தன சிவா முன்னிலையில் 500 பேருக்கு மாவட்ட கழக செயலாளர் ஆர். எஸ். ராஜேஷ் அம்மா பேரவை துணைச்செயலாளர் டாக்டர் சி.பி. மூவேந்தன் ஆகியோர் 500 பேருக்கு அன்னதானம் வழங்கினார்கள்.முன்னதாக ஜெயலலிதாவின் உருவப்படத்திற்கு மலர் அஞ்சலி செலுத்தப்பட்டது. இந்த நிகழ்வில் மாவட்ட பகுதி வட்டநிர்வாகிகள் நேதாஜி கணேசன், ஏ.கணேசன், பி.ஜெகன், நெல்லை கே.குமார், கே.எஸ்.மூர்த்தி, நாகரத்தினம் ரவிராஜன் கே.பி.கர்ணன், மாலா, எல். எஸ்.மகேஷ்குமார், வி.எஸ்.புருஷோத்தமன், ஆர்.லிங்கேசன், கே.லோகு, அருண்பிரசாத், இரா.முரளிமுருகன், மேனகாமதி, கே.கந்தசாமி, தனபால் நகர். பர்கான்பாய், ஆர்.சதீஷ்குமார், சுரேஷ், ரமேஷ், ஆனந்தஜோதி, பி.கோபி, ஜி.சேகர் தருண், சசிகுமார், வி.வெங்கடேசன், நவநீதம் சஞ்சய்குமார் கிஷோர், ரூபன், உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்

# சென்னையில் ,மாவட்ட வாரியாக சுற்றுலா திட்டப்பணிகள் குறித்து சுற்றுலா அலுவலர்கள் மற்றும் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக்கழகத்தின் மூலம் நடத்தப்பட்டு வரும் தங்கும் விடுதிகள், உணவு விடுதிகள் குறித்து ஆய்வுக்கூட்டம்

## சுற்றுலா துறை அமைச்சர் இரா.ராஜேந்திரன் தலைமையில் நடந்தது



**சென்னை,டிச.10**

சுற்றுலாத்துறை அமைச்சர் திரு.இரா.இராஜேந்திரன் அவர்களின் தலைமையில், மாவட்ட வாரியாக சுற்றுலா வளர்ச்சி திட்டப் பணிகள் குறித்து சுற்றுலா அலுவலர்கள் மற்றும் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் மூலம் நடத்தப்பட்டு வரும் தங்கும் விடுதிகள், உணவு விடுதிகள், படகு குழாம்கள் மற்றும் சுற்றுலா குறித்து மண்டல மேலாளர்கள், மேலாளர்கள் மற்றும் பொறியாளர்களுடனான ஆய்வுக் கூட்டம் சென்னை, வாலாஜா சாலையில் அமைந்துள்ள சுற்றுலா வளாகத்தில் நடைபெற்றது.

**ஆய்வு கூட்டம்**

இந்த ஆய்வுக் கூட்டத்தில் மாண்புமிகு சுற்றுலாத்துறை அமைச்சர் அவர்கள் தெரிவித்ததாவது: தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் நல்வழிகாட்டுதலின்படி, சுற்றுலாத்துறையில் மாவட்ட வாரியாக பல்வேறு வளர்ச்சிப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. சுற்றுலாத்துறையில் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளை அதிக அளவில் ஈர்க்கும் வகையில் நம் பாரம்பரிய மிக்க தொன்மை வாய்ந்த பிரசித்தி பெற்ற கோவில்கள், புராதான சின்னங்கள் மற்றும் ஊட்டி, கொடைக்கானல், ஏற்காடு, ஏலகிரி வால்பாறை போன்ற இயற்கையாக அமையப்பெற்ற மலைவாச சுற்றுலாத் தலங்கள். தமிழ்நாட்டின் மாவட்ட வாரியாக சுற்றுலா தலங்களில் ஏற்படுத்தப்பட்டுள்ள சுற்றுலா வளர்ச்சிப் பணிகள் குறித்தும் மாவட்டந்தோறும் வரக்கூடிய சுற்றுலாப் பயணிகளுக்கு சுற்றுலா தலங்களில் போக்குவரத்து முதற்கொண்டு, விருந்தோம்பல் போன்ற அடிப்படை உட்கட்டமைப்பு வசதிகளை சுற்றுலாப் பயணிகளுக்கு ஏற்படுத்திதரவேண்டுமென சுற்றுலா உயர் அதிகாரிகள் மற்றும் சுற்றுலா அலுவலர்களுக்கு சுற்றுலாத்துறை அமைச்சர் அவர்கள் ஆலோசனை வழங்கினார்.

மேலும், தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் தங்கும் விடுதிகள், உணவு விடுதிகள், படகு குழாம்கள் அனைத்து உட்கட்டமைப்பு வசதிகளும் பலதரப்பட்ட அனைத்து உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலா பயணிகளுக்கு ஏற்றார்போல் உணவு வழங்கி விருந்தோம்பலில் சிறப்புடன் திகழவேண்டுமெனவும் அடிப்படை வசதிகளில் குறைகள் இருப்பின் அதனை உடனடியாக சரிசெய்து விருந்தினர்களை நல்லமுறையில் நடத்த வேண்டுமென்றும், அனைத்து மண்டல அலகுகளிலும் வரவுசெலவு மற்றும் விருந்தினர்களிடம் விருந்தோம்பல் குறித்த தகவல்களை மண்டல மேலாளர் மற்றும் மேலாளர்களுடன் உரையாற்றி மேலும், தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக, விருந்தோம்பல் சேவையை மேலும் சிறப்பாக நடத்த வேண்டுமென்று மண்டல மேலாளர்கள் மற்றும் மேலாளர்களுக்கு மாண்புமிகு சுற்றுலாத்துறை அமைச்சர் அவர்கள் அறிவுறுத்தினார்,

இக்கூட்டத்தில், சுற்றுலா பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் டாக்டர் க.மணிவாசன், அவர்கள், சுற்றுலா இயக்குநர், தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக மேலாண்மை இயக்குநர் திரு. தா.கிறிஸ்துராஜ், சுற்றுலாத் துறை இணை இயக்குனர்அ. சிவப்பிரியா, தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக பொது மேலாளர். சி. லட்சுமி பிரியா, மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# சென்னை விக்டோரியா பொது அரங்கில் மேற்கொள்ளப்பட்டுள்ள புனரமைப்புப்பணிகள்: மேயர் ஆர்.பிரியா நேரில் ஆய்வு



**சென்னை,டிச.10**

சிங்காரச் சென்னை 2.0 திட்டத்தின் கீழ் ரூ.32.62 கோடி மதிப்பில் தொன்மை மாறாமல் புனரமைக்கப்பட்டுள்ள விக்டோரியா பொது அரங்கத்தினை மேயர் ஆர்.பிரியா (09.12.2025) பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

விக்டோரியா பொது அரங்கம் சென்னையில் உள்ள வரலாற்று சிறப்புமிக்க கட்டடமாக திகழ்கின்றது. இக்கட்டடம் பிரிட்டிஷ் ஆட்சிக் காலத்தில் இங்கிலாந்தின் பேரரசி விக்டோரியாவின் பெயரால் பெயரிடப்பட்ட சிறப்பு வாய்ந்த கட்டடமாகும். மேலும், சென்னை மாநகரின் கட்டடக் கலைக்கு ஒரு எடுத்துக்காட்டாகவும், விக்டோரியா ராணி ஆட்சியின் பொன் விழாவை நினைவு கூறும் வகையிலும் அமைக்கப்பட்ட இக்கட்டடம் மிகவும் சிறப்பு வாய்ந்தது. ராபர்ட் சிசோல்ம் என்பவரால் இந்தோ சாரசெனிக் கட்டடக்கலையில் நம்பெருமாள் செட்டியாரால் 1888ஆம் ஆண்டு இந்த அரங்கம் கட்டப்பட்டது.

வரலாற்று சிறப்புமிக்க, தொன்மை வாய்ந்த விக்டோரியா பொது அரங்கினை அதன் தொன்மை மாறாமல் புனரமைத்து, மறுசீரமைக்கும் பணியினை மேற்கொள்ள மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டு, நிதி ஒதுக்கீடு செய்தார்கள். அதனடிப்படையில், சிங்கார சென்னை 2.0 திட்டத்தின் கீழ், மாநகராட்சி சார்பில் ரூ.32.62 கோடி மதிப்பீட்டில் அதன் தொன்மை மாறாமல் புனரமைத்து, மறுசீரமைக்கும் பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது.இரண்டு தளம் கொண்ட இக்கட்டடத்தின் நீளம் 48 மீட்டர், அகலம் 24 மீட்டர், பிரதானக் கூரையின் உயரம் 19 மீட்டர் மற்றும் மொத்த கோபுரத்தின் உயரம் 34 மீட்டர் ஆகும். தற்பொழுது இந்த விக்டோரியா பொது அரங்கின் முழுக் கட்டடத்தையும் அதன் தொன்மை மாறாமல் பழுது பார்க்கும் பணிகள், நில அதிர்வினை தாங்கும் வகையில் மறுசீரமைப்பு பணிகள், முழு கூரையினையும் மறுசீரமைப்பு செய்யும் பணிகள், வெளிப்புறம் மற்றும் உட்புறம் மரத்தளம் மற்றும் மரப்படிக்கட்டுகளுடன் மறுசீரமைப்பு செய்யும் பணிகள், ஏற்கனவே உள்ள கட்டடத்தை தற்போதைய பயன்பாட்டிற்கு ஏற்றவாறு மேம்படுத்துதல் உள்ளிட்ட மறுசீரமைப்புப் பணிகள் முடிவு பெற்றுள்ளது.இப்பணிகள் மற்றும் விக்டோரியா பொது அரங்கத்தின் வெளிப்புறங்களில் மேற்கொள்ளப்பட்டுள்ள பூங்கா மற்றும் இதர பணிகளையும் மேயர் பார்வையிட்டு ஆய்வு செய்து, பணிகள் அனைத்தும் தொன்மை மாறாமல் முடித்திடவும் பொதுமக்கள் மற்றும் மாணவர்களை கவரும் வகையில் பணிகளை சிறப்புடன் மேற்கொள்ள அலுவலர்களுக்கு உத்தரவிட்டார். இந்த ஆய்வின்போது, ஆணையாளர் ஜெ. குமரகுருபரன், உடனிருந்தார்.

# சென்னை கொளத்தூர், ஜி.கே.எம் காலனியில் ரூ.25.72 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டு வரும் புதிய சமுதாய நலக்கூடம்

## அமைச்சர் பி.கே.சேகர்பாபு நேரில் ஆய்வு



**சென்னை,டிச.10**

முதலமைச்சர்.மு.க.ஸ்டாலின் அவர்களால் வருகின்ற 18.12.2025 அன்று கொளத்தூர், ஜி.கே.எம் காலனி, ஜம்புலிங்கம் பிரதான சாலையில், பெருநகர சென்னை மாநகராட்சி சார்பில் ரூ.25.72 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டு வரும் பேரறிஞர் அண்ணா பெயரில் திறக்கப்படவுள்ள புதிய சமுதாய நலக் கூடத்தின் இறுதிக் கட்டப் பணிகளின் முன்னேற்றம் குறித்து (09.12.2025) பி.கே.சேகர்பாபு அவர்கள் நேரில் சென்று அமைச்சர் ஆய்வு செய்து, அனைத்து பணிகளையும் விரைந்து முடித்து கண்காணித்திட தொடர்புடைய அலுவலர்களை அறிவுறுத்தினார்.

இந்த சமுதாயக் கூடம் 40,300 சதுரடி பரப்பளவில் தரைத்தளத்தில் கார், இருசக்கர வாகனங்கள் நிறுத்தும் வகையில் வாகனங்கள் நிறுத்தும் வசதிகளுடனும், முதலாவது தளத்தில் ஒரே சமயத்தில் 435 நபர்கள் அமர்ந்து உணவு சாப்பிடும் வகையில் உணவுக்கூடம், இரண்டாவது தளத்தில் 800 இருக்கைகளுடன் திருமண மண்டபம் மூன்றாம் தளத்தில் 10 எண்ணிக்கையிலான தங்கும் அறைகள் வசதிகளுடன் கட்டப்பட்டு வருகிறது.

இதனைத் தொடர்ந்து, மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் அவர்கள், இராயபுரம் மண்டலம், வார்டு-57க்குட்பட்ட வால்டாக்ஸ் சாலையில் மாநகராட்சி சார்பில் ரூ.8.55 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டு வரும் சமுதாயக் கூடக் கட்டுமானப் பணியினைப் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு, வட சென்னைப் பகுதிக்குட்பட்ட மக்களுக்கு பெரிதும் பயன்தரும் வகையில் நவீன வசதிகளுடன் உயர்தரமாக கட்டப்பட்டு வரும் இந்த சமுதாயக் கூடங்களில் பணிகளை விரைந்து முடித்து பொதுமக்களின் பயன்பாட்டிற்குக் கொண்டு வருமாறு மாநகராட்சி அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

இந்தக் கட்டடமானது, தரைத்தளம் மற்றும் இரண்டு தளங்களுடன் 28,500 சதுர அடி பரப்பளவில் கட்டப்பட்டு வருகிறது. மேலும், தரைத்தளத்தில் 30 நான்கு சக்கர வாகனங்கள் மற்றும் 50 எண்ணிக்கையில் இருசக்கர வாகனங்கள் நிறுத்தும் வகையில் வாகன நிறுத்துமிடம், முதல்தளத்தில் உணவருந்தும் கூடம், சமையலறை மற்றும் கழிப்பறை வசதிகள், இரண்டாம் தளத்தில் திருமண நிகழ்விடம் ஆகியவை அமைக்கப்பட்டுள்ளது.

இந்த ஆய்வுகளின்போது மின்சார வாரியத் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் டாக்டர் ஜெ.ராதாகிருஷ்ணன், மாநகராட்சி ஆணையர்ஜெ.கு ம ர கு ரு ப ரன், சென்னை குடிநீர் வடிகால் வாரிய மேலாண்மை இயக்குநர் டாக்டர் டி.ஜி.வினய், வட்டார துணை ஆணையாளர்க்ள்எச்.ஆர். கௌஷிக், (மத்தியம்), கட்டா ரவி தேஜா, (வடக்கு), மண்டலக் குழுத்தலைவர்கள் சரிதா மகேஷ் குமார், பி.ஸ்ரீராமுலு, மாமன்ற உறுப்பினர்கள்எ.நாகராஜன், பி.அமுதா, லர்கள் ஆகியோர் உடனிருந்தனர்.

# நொளம்பூரில் உள்விளையாட்டு அரங்கம் அமைக்க பூமி பூஜை: காரம்பாக்கம் க.கணபதி எம்.எல்.ஏ பங்கேற்பு



**சென்னை டிச 10-**

மதுரவாயல் சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட 143, வது வார்டு நொளம்பூர், மாதா கோயில் நகரில் சிறு விளையாட்டு அரங்கம் அமைக்கும் பணிக்கு ரூ.3 கோடி மதிப்பீட்டில் திமுக இளைஞரணி செயலாளர் தமிழ்நாடு துணை முதலமைச்சர் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் முன்னிலையில், தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் காணொலி காட்சி வாயிலாக அடிக்கல் நாட்டினார்கள். இந் நிகழ்ச்சியில் மதுரவாயல் சட்டமன்ற உறுப்பினர் காரம்பாக்கம்.க.கணபதி கலந்து கொண்டு அடிக்கல் பூஜை செய்த போது. இந்நிகழ்வில் மண்டலக் குழுத் தலைவர் நொளம்பூர் வே.ராஜன், வில்லிவாக்கம் தெற்கு ஒன்றிய செயலாளர் அயப்பாக்கம் அ. மா.துரைவீரமணி, மாவட்ட அமைப்பாளர் முகப்பேர் கே.நீலகண்டன், பகுதி நிர்வாகிகள் ஆர்.கர்ணல், ஆ.மாலினி, எம்.சி.தீ.பாலாஜி, வட்ட செயலாளர்கள் சி.சசிகுமார், எஸ்.ஜி.மாதவன், எம்.கே.பி. அண்ணதாசன், எம்.இ.ஸ்டாலின் ,எம்.சி. எம்.எம்.ஜெயரத்தினம், ப.ஆலன்,எம். ரூபன் மாமன்ற உறுப்பினர் ரமணி மாதவன், சாந்திராமலிங்கம். மற்றும் மாவட்ட பிரதிநிதி மேட்டுக்குப்பம்லயன்.எம். ஆர்.சதீஷ்கழக நிர்வாகிகள், கலந்து கொண்டனர்.

# அபிராமபுரம் பகுதியில் வாலிபரிடம் பணம் பறித்த இருவர் கைது

**சென்னை டிச 10-**

சென்னை, ஆர்.ஏ.புரம், 2வது தெருவில் வசித்து வரும் அஜித், என்பவர் டெம்போ ட்ராவலர் வைத்து டிராவல்ஸ் தொழில் செய்து வருகிறார். இவர் கடந்த 7.ந்தேதி அன்று இரவு சத்யா நகரில் உள்ள டீக் கடை அருகே நின்று கொண்டிருந்த போது, அங்கு ஆட்டோவில் வந்த அறிமுகமான பாபா சுரேஷ் மற்றும் பிராசாந்த் ஆகிய இருவரும் மேற்படி அஜித்தை வலுக்கட்டாயமாக ஆட்டோவில் ஏற்றி, பணம் கேட்டு மிரட்டியுள்ளனர். அஜித் பணம் ஏதும் இல்லை என்று கூறியதும், பாபா சுரேஷ் கத்தியின் பின்புறத்தால் அஜித்தை தாக்கியுள்ளார்,

**வழக்குப்பதிவு**

உடனே பிரசாந்த் கையால் தாக்கி அஜித்திடமிருந்து செல்போனை பறித்து மிரட்டி, பாஸ்வேர்டு கேட்டு ஜிபே மூலம் ரூ.4,ஆயிரம் ஐ, பிரசாந்த் வங்கி கணக்கிற்கு அனுப்பியுள்ளார், பின்னர் சைதாப்பேட்டையில் உள்ள ஆட்டோ கேஸ் பங்கில் ஆட்டோவுக்கு கேஸ் நிரப்பிவிட்டு அஜித்தின் ஜிபே மூலம் ரூ.600ஐ செலுத்திவிட்டு அங்கிருந்து அடையார் திரு.வி.க. பாலம் அருகே இறக்கிவிட்டு, மிரட்டி தாக்கி விட்டு அங்கிருந்து தப்பிச்சென்றுள்ளனர். இது குறித்து அஜித் அபிராமபுரம் காவல் நிலையத்தில் கொடுத்த புகாரின் பேரில் போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை மேற்கொண்டனர் . அபிராமபுரம் காவல் நிலைய ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினர் தீவிர விசாரணை செய்து, மேற்படி குற்ற சம்பவத்தில் ஈடுபட்ட எதிரிகள் 1.பாபா சுரேஷ் (எ) சுரேஷ் குமார், 2.பிரசாந்த், இருவரை கைது செய்தனர். அவர்களிடமிருந்து குற்ற செயலுக்கு பயன்படுத்திய 1 கத்தி, 1 செல் போன் மற்றும் 1 ஆட்டோ பறிமுதல் செய்யப்பட்டது.

விசாரணையில் எதிரி பாபா சுரேஷ் (எ) சுரேஷ்குமார் அபிராமபுரம் காவல் நிலைய சரித்திரப் பதிவேடு குற்றவாளி என்பதும், இவர் மீது 10 குற்ற வழக்குகள் உள்ளதும், , பிராசந்த் மீது 3 குற்ற வழக்குகள் உள்ளதும் தெரிய வந்தது. கைது செய்யப்பட்ட எதிரிகள் இருவரும் விசாரணைக்குப் பின்னர் நீதிமன்றத்தில் ஆஜர்செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டனர்.

# வளசரவாக்கம் பகுதியில் கார் டிரைவர் தாக்குதல் வழக்கில் மேலும் ஒருவர் கைது

**சென்னை டிச 10-**

சென்னை, விருகம்பாக்கம், அமராவதி தெருவில் வசித்து வரும் வெங்கடேசன், என்பவர் கார் ஓட்டுநராக வேலை செய்து வருகிறார். இவர் கடந்த 1. ந் தேதி அன்று இரவு, அவரது நண்பர்கள் சதீஷ், ரஞ்சித், கணேஷ் மற்றும் நாராயணன் ஆகியோருடன் சேர்ந்து வளசரவாக்கம், காமராஜர் சாலையில் உள்ள டாஸ்மாக் மதுபாரில் மது அருந்திக்கொண்டிருந்த போது, அங்கு ஏற்கனவே மது அருந்திக் கொண்டிருந்த 4 பேரில் ஒருவர் மேற்படி வெங்கடேசனின் நண்பர் ரஞ்சித்திடம் என்ன சத்தம் ஓவராக இருக்கு நீ என்ன பெரிய ஆளா எனக்கேட்டு தகராறு செய்து கையால் அடித்துள்ளார்.

உடனே அவர்களை தடுத்த வெங்கடேசன் மற்றும் அவரது 4 நண்பர்களையும், மேற்படி 4 பேரும் சேர்ந்து தகாத வார்த்தைகளால் பேசி, மது பாட்டில் மற்றும் கையால் தாக்கி கொலை மிரட்டல் விடுத்துச் சென்றனர். இத்தாக்குதலில் இரத்த காயமடைந்த வெங்கடேசன், ரஞ்சித் மற்றும் நாராயணன் ஆகியோர் தனியார் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று நிலையில், மேற்படி சம்பவம் குறித்து வெங்கடேசன் கொடுத்த புகாரின்பேரில், வளசரவாக்கம் காவல் நிலையத்தில் வழக்குப்பதிவு செய்து போலீசார் விசாரணை மேற்கொண்டனர். வளசரவாக்கம் காவல் நிலைய ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினர் தீவிர விசாரணை செய்து, மேற்படி குற்ற சம்பவத்தில் ஈடுபட்ட எதிரிகள் 1.கிர்த்திக், 2.அருண், 3.ராஜேஷ்குமார், ஆகிய 3 பேரை கடந்த 2.ந் தேதின்அன்று கைது செய்து, நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார்.

# குட்கா புகையிலை பாக்கெட்டுகளை விற்பனை செய்த இருவர் கைது

**சென்னை டிச 10-**

சென்னை ஆர்.கே. நகர் காவல் நிலைய ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினருக்கு கிடைத்த ரகசிய தகவலின்பேரில் காவல் குழுவினர் தண்டையார்பேட்டை இரயில் நிலையம் அருகே கண்காணித்து, அங்கு கையில் பையுடன் நின்று கொண்டிருந்த பெண் உட்பட இருவரை பிடித்து விசாரணை செய்து சோதனை செய்தபோது, அவர்கள் தமிழக அரசால் தடை செய்யப்பட்ட குட்கா புகையிலை பொருட்களை விற்பனைக்காக பதுக்கி வைத்திருந்தது தெரியவந்தது

அதன்பேரில்,ஆர்.கே. நகர் காவல் நிலையத்தில் வழக்குப் பதிவு செய்யப்பட்டு, சட்டவிரோதமாக குட்கா புகையிலை பொருட்களை விற்பனைக்காக வைத்திருந்த 1.சந்திரபோஸ், 2.மோகனா, ஆகிய இருவரை கைது செய்தனர். அவர்களிடமிருந்து சுமார் 3 கிலோ எடை கொண்ட ஹான்ஸ் மற்றும் விமல் குட்கா பாக்கெட்டுகள் பறிமுதல் செய்யப்பட்டது. விசாரணையில் கைது செய்யப்பட்ட எதிரிகள் ஆந்திர மாநிலத்திலிருந்து மேற்படி குட்கா புகையிலை பாக்கெட்டுகளை வாங்கி வந்து சென்னையில் விற்பனை செய்தது தெரியவந்தது.கைது செய்யப்பட்ட எதிரிகள் இருவரும் விசாரணைக்குப் பின்னர் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டு உரிய சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டது.

# நீதிமன்ற பிடியாணை பிறப்பிக்கப்பட்ட இருவர் கைது

**சென்னை டிச 10-**

சென்னைவடக்கு கடற்கரை காவல் நிலையத்தில் 9.6.2025 அன்று தாக்கலான காய வழக்கில் தொடர்புடைய எதிரிகள் சந்தோஷ் மற்றும் அவரது தாயார் தவமணி ஆகிய இருவரும் கைது செய்யப்பட்டு, நீதிமன்றக் காவலுக்கு உட்படுத்தப்பட்ட நிலையில், நீதிமன்ற பிணையில் வெளியே சென்ற இருவரும், சென்னை, ஜார்ஜ் டவுன் நீதிமன்ற வளாகம், 7வது குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் வழக்கு விசாரணைக்கு தொடர்ந்து ஆஜராகாமல் தலைமறைவாக இருந்த காரணத்தினால் மேற்படி 2 எதிரிகளை கைது செய்து நீதிமன்றத்தில் ஆஜர் செய்ய கடந்த 04.ந் தேதி அன்று நீதிமன்றம் பிடியாணை பிறப்பித்தது.

**கைது**

வடக்கு கடற்கரை காவல் நிலைய ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினர் தீவிர விசாரணை மற்றும் தேடுதலில் ஈடுபட்டு பல்வேறு இடங்களில் தேடி நீதிமன்ற பிடியாணை பிறப்பிக்கப்பட்ட எதிரிகள் 1.சந்தோஷ், மற்றும் அவரது தாயார் 2.தவமணி, ஆகிய இருவரை நேற்று முன் தினம் கைது செய்தனர்.கைது செய்யப்பட்ட எதிரிகள் இருவரும் விசாரணைக்குப் பின்னர் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டு, சிறையில் அடைக்கப்பட்டனர்.

# திருமங்கலம் பகுதியில் போதைப்பொருள் வைத்திருந்த வழக்கில் மேலும் ஒருவர் கைது

**சென்னை டிச 10-**

சென்னையில் போதை பொருள் தடுப்பு நுண்ணறிவுப்பிரிவு காவல்குழுவினருக்கு கிடைத்த ரகசிய தகவலின்பேரில், காவல்குழுவினர் மற்றும் திருமங்கலம் காவல் நிலைய ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினர் ஒருங்கிணைந்து, கடந்த 19.ந்.தேதி அன்று பார்க் ரோடு, சரவணா பர்னிச்சர் ஷோரூம் அருகே கண்காணித்து, ஒருவரை பிடித்து விசாரணை செய்து சோதனை செய்தபோது, அவர் எல்.எஸ்.டி. ஸ்டாம்பை விற்பனைக்காக மறைத்து வைத்திருந்தது தெரியவந்தது.

அதன்பேரில், திருமங்கலம் காவல் நிலையத்தில் வழக்குப்பதிவு செய்து, எதிரி 1.தியானேஷ்வரன், என்பவரை கைது செய்தனர். அவரிடமிருந்து 4 எல்.எஸ்.டி ஸ்டாம்ப்புகள் மற்றும் 2 செல்போன்கள் பறிமுதல் செய்யப்பட்டது. மேலும் எதிரி அளித்த தகவலின் பேரில் மேற்படி வழக்கில் தொடர்புடைய 2.சரத், 3.முகமது மஸ்தான் ஷர்புதீன், 4.சீனிவாசன், ஆகிய இருவரை ஏற்கனவே கைது செய்து நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தினர். அவர்களிடமிருந்து 10 கிராம் ஒஜி கஞ்சா, பணம் ரூ.27.91 லட்சம், 6 செல்போன்கள் மற்றும் 1 கார் ஆகியவை பறிமுதல் செய்யப்பட்டது. இதனை தொடர்ந்து எதிரிகள் அளித்த தகவலின் பேரில் மேற்படி வழக்கில் தொடர்புடைய 5.தினேஷ் ராஜ், என்பவரை கைது செய்தனர்.

அவரிடமிருந்து ஐ-போன் பறிமுதல் செய்யப்பட்டது. மேற்படி வழக்கில் தொடர்புடைய மற்ற குற்றவாளிகளை தனிப்படை போலீசார் தீவிரமாக தேடிவருகின்றனர்.விசாரணைக்குப்பின்னர் கைது செய்யப்பட்ட தினேஷ் ராஜ் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார்.

தின பூமி நாளிதழில் விளம்பரம் செய்து பயன் பெறுங்கள்

# தமிழ் வளர்ச்சித் துறையின் சார்பில் நடைபெற்ற பேச்சுப் போட்டியில் வெற்றி பெற்ற மாணவ, மாணவிகளுக்கு பாராட்டு சான்றிதழ்கள்

## கலெக்டர் ச.கந்தசாமி வழங்கினார்



ஈரோடு.டிச.10-

ஈரோடு மாவட்ட கலெக்டர் ச.கந்தசாமி தமிழ் வளர்ச்சித் துறையின் சார்பில் அண்ணல் காந்தியடிகள் மற்றும் பண்டித ஜவகர்லால் நேரு ஆகியோரின் பிறந்தநாளையொட்டி நடைபெற்ற பேச்சுப் போட்டியில் வெற்றி பெற்ற பள்ளி, கல்லூரி மாணவ மாணவியர்களுக்கு பரிசு மற்றும் பாராட்டு சான்றிதழ்களை வழங்கினார்.

ஈரோடு மாவட்டம், மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில், கலெக்டர் ச.கந்தசாமி தமிழ் வளர்ச்சித் துறையின் சார்பில் அண்ணல் காந்தியடிகள் மற்றும் பண்டித ஜவகர்லால் நேரு ஆகியோரின் பிறந்தநாளையொட்டி பள்ளி கல்லூரி மாணவ, மாணவியர்களுக்கிடையே நடைபெற்ற பேச்சுப் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசு மற்றும் பாராட்டு சான்றிதழ்களை வழங்கினார்.தமிழ் வளர்ச்சித் துறையின் சார்பில் நாட்டிற்காகப் பாடுபட்ட தலைவர்களின் பிறந்த நாளன்று மாவட்ட அளவில் பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்களுக்கு ஆண்டுதோறும் பேச்சுப்போட்டிகள் நடத்திப் பரிசுகள் வழங்கப்பட்டு வருகிறது. அந்த வகையில் அண்ணல் காந்தியடிகள் (அக்டோபர் 2) மற்றும் (நவம்பர் 14) ஜவகர்லால் நேரு பிறந்தநாளையொட்டி 04.12.2025 மற்றும் 05.12.2025 ஆகிய இரண்டு நாட்களில் பள்ளி கல்லூரி மாணவ, மாணவியர்க்கிடையே பேச்சுப் போட்டிகள் நடைபெற்றது. இப்பேச்சுபோட்டிகள் பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்களுக்கு ஈரோடு, மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாக கூட்டரங்கில் நடைபெற்றது.

பேச்சுப் போட்டிகள் நடத்தப்பட்டு, கலெக்டர் ச.கந்தசாமி பள்ளி, கல்லூரி அளவில் நடைபெற்ற போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவ, மாணவியர்களுக்கு முதல் பரிசாக ரூ.5000/-, இரண்டாம் பரிசாக ரூ.3000/-, மூன்றாம் பரிசாக ரூ.2000/-, மற்றும் பள்ளி மாணவர்களுக்கென நடைபெற்ற பேச்சுப்போட்டியில் பங்கேற்ற மாணவ, மாணவியர்களுள் அரசுப் பள்ளி மாணவர்கள் இரண்டு பேரைத் தனியாகத் தெரிவு செய்து ஒவ்வொருவருக்கும் சிறப்புப் பரிசுத்தொகையாக ரூ.2000/- வீதம் என மொத்தம் 16 மாணவ மாணவர்களுக்கு பரிசு மற்றும் பாராட்டு சான்றிதழ்களை வழங்கி வாழ்த்துக்களை தெரிவித்தார். இந்நிகழ்ச்சியில் தமிழ் வளர்ச்சி துறை துணை இயக்குநர்ஜோதி, உட்பட துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# ஈரோடு நந்தா ஆயுர்வேத மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனையில் முதலாமாண்டு மாணவர்களுக்கு வரவேற்பு

ஈரோடு டிச 10-

ஈரோடு நந்தா ஆயுர்வேத மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனையின் முதலாமாண்டு புதிய மாணவர்களின் "சிஷ்யோபநயன" வரவேற்பு விழா நடைபெற்றது.

ஸ்ரீ நந்தா கல்வி அறக்கட்டளையின் தலைவர் வி. சண்முகன் தலைமை தாங்கினார் ஸ்ரீ நந்தா கல்வி அறக்கட்டளையின் அங்கத்தினர் பானுமதி சண்முகன் குத்து விளக்கேற்றி துவக்கி வைத்தார்.கல்லூரியின் முதல்வர் மருத்துவர் எம். கிருத்திகா வரவேற்றார்.பின்னர் சென்னையில் செயல்பட்டு வரும் தன்வந்திராலயா மற்றும் மலேசியாவின் ஸ்மிருதி ஆயுர்வேத நிறுவனத்தின் தலைவரும், இந்திய மருத்துவ கவுன்சிலின் முன்னாள் தலைவருமான மருத்துவர் வனிதா ஆர். முரளிகுமார் சிறப்பு




விருந்தினராகக் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார். அப்போது கூறுகையில், ஆயுர்வேத சிகிச்சை என்பது மூலிகை மருத்துவம், உணவு முறை, மசாஜ் (அய்யங்கா), தியானம் மற்றும் நச்சு நீக்கம் (பஞ்சகர்மா) ஆகியவற்றை உள்ளக்கியது. இதன் மூலம் மனம், உடல் மற்றும் ஆன்மாவை பாராபரிய முறையில் சமநிலப்படுத்தப்படுகிறது என்று சுட்டிக் காட்டினார்.விழாவில் ஸ்ரீ நந்தா கல்வி அறக்கட்டளையின் செயலர் .எஸ்.நந்தகுமார் பிரதீப், நந்தா கல்வி நிறுவனங்களின் செயலர் .எஸ்.திருமூர்த்தி, மற்றும் நிர்வாக அலுவலர் மருத்துவர் ஜீ. தர்மராஜ் பாராட்டி, தங்களது வாழ்த்து தெரிவித்தார்கள்.

மாண்புமிகு மாவட்ட
உரிமையியல் மற்றும் நீதித்துறை
நடுவர்மன்றம்
சோழிங்கநல்லூர்
I.A.No.1/2024 in
OS No. 564/2024

திரு.பி.விஜயராஜன்,
த/பெ.திரு.பத்மநாபன்,
2வது தெரு, சப்தகிரி நகர்,
சோழிங்கநல்லூர்,
சென்னை- 600 119.
... மனுதாரர்/ வழக்குதாரர்
எதிர்
திரு.டி.ரகு நந்தனா
மற்றும் 5 நபர்கள்
... பிரதிவாதிகள்/ பிரதிவாதிகள்
பெறுநர்கள்:
R2.எம்.எஸ்.ராஜாராம்,
த/பெ. (லேட்)எம்.எஸ்.மணி,
எண்.77, கிரீன்வேஸ் சாலை,
ஆர்.ஏ.புரம், சென்னை -600 028.
R4. திரு.எஸ்.மோகன் பாபு,
திரு.கே.ஸ்ரீனிவாசன்,
எண். 95, விஜிபி காந்தி மெயின்ரோடு,
வி.ஜி.பி.லேஅவுட் பகுதி-2,
உத்தண்டி, சென்னை -600 119.
R5.திருமதி.டி.ஷீலா,
த/பெ. திரு.சுப்பையா,
எண்.35/ E மீனாட்சி சாலை,
T.V.S நகர், மதுரை தெற்கு,
பழங்கநாதம், மதுரை- 625003.
R6. திருமதி. செலின் தமயந்தி,
க/பெ.திரு.மோதிலால் செல்வின்,
எண்.54, சுரேஷ் தெரு,
நடராஜ் நகர் மெயின் ரோடு,
மதுரை தெற்கு, மதுரை -625016

அறிவிப்பு

மேற்படி இரண்டாவது, நான்காவது, ஐந்தாவது மற்றும் ஆறாவது பிரதிவாதிகள் அறிவது யாதெனில்: மேலே குறிப்பிட்ட வாதி மேற்குறிப்பிட்ட நீதிமன்றத்தில் தங்கள் மீது தாக்கல் செய்த வழக்கு 28-01-2026 அன்று வாய்தாபோடப்பட்டுள்ளது. எனவே தாங்கள் நேரடியாகவோ அல்லது தங்களின் வழக்கறிஞர் மூலமாகவோ மேற்படி நாளில் காலை 10.30 மணி அளவில் நீதிமன்றத்தில் ஆஜராக வேண்டியது, தாங்கள் வரவில்லையெனில் தாங்கள் வராத காரணத்தால் வழக்கு தங்களுக்கு எதிராக ஒருதலைப்பட்சமாக தீர்ப்பாகும் என்பதை அறியவும்.

K.B. உதயன்
C. ஆண்டணி
வாதியின் வழக்கறிஞர்கள்

14 வது
ஸ்மால் நாஸஸ் கோர்ட், சென்னை
RLTOP No. 509 of 2025

திரு. A. ஜகபர்
அவர்களுக்காக அவர் பொது அதிகாரி திரு. J.முகமது அமீன்
எண்.149/72 அங்கப்ப நாயக்கன் தெரு. சென்னை 600 001.
..... மனுதாரர்
எதிர்
திரு. இஸ்மாயில் ராஜா
....எதிர்மனுதாரர்

பெறுநர்
திரு. இஸ்மாயில் ராஜா
புதிய எண்.44, ப.எண்.41.
ஆண்டர்ஸன் தெரு, முதல்தனம் கடைப்பகுதி. சென்னை 600 001.

உங்களை மனு கட்டிடத்திலிருந்து காலி செய்ய மனுதாரர் தாக்கல் செய்த மேற்படி மனுவில் நீங்கள் கோர்ட்டில் ஆஜராக மேற்படி கோர்ட்டரால் 19.12.2025 காலை 10.30 மணிக்கு தேதியிடப்பட்டுள்ளது. மேற்படி தேதியில் நீங்கள் மேற்படி கோர்ட்டில் மேற்சொன்ன மனுவில் ஆஜராக தவறும் பட்சத்தில் உங்களுக்கு எதிராக கோர்ட்டாரால் ஒருதலைபட்சமாக தீர்ப்பளிக்கப்படும் என்பதை இதன் மூலம் உங்களுக்கு அறிவிக்கிறேன்.

இப்படிக்கு
M.A. MD. KARAMATHULLAH
மனுதாரர் வழக்கறிஞர்

BEFORE THE HON'BLE SPECIAL II JUDGE SMALL CAUSES COURT AT CHENNAI
M.C.O.P.NO. 5440/2024

1.Mrs.Jaya
2. M.Balamurugan
... Petitioners.
-Versus-
Mr.S.Prabakaran,
Chennai-600041.

To
Mr.S. Prabakaran
S/o Santhiyagu
No. 2/185, D111 Cross Street,
Periyar Nagar, Palavakkam,
Chennai-600041.
... Respondent.

Sir
The above case has filed against you for seeking compensation under the Motor Vehicles Act 1988. Please take notice the above said matter was posted on 20.01.2026 for your appearance before the Hon'ble Special II Judge of Small Causes Court at Chennai. Kindly make arrangements to appear on that day either by you or by your Counsel on that day at about 10.30 AM otherwise the matter will be decided in your absence.

R.H. DEEPANKUMAR
COUNSEL FOR PETITIONER

முன்னிலை 8 வது உதவி
உரிமையில்
நீதிமன்றம்-சென்னை.
இடைக்கால மனு எண். 3 / 2025
இன் அசல் வழக்கு எண். 9422/ 2019

மகேஷ்வரி
..மனுதாரர் / பிரதிவாதி எதிர்
ல. அமுதா
....எதிர்மனுதாரர்/ வாதி

பெறுனர்:
ல. அமுதா,
க/பெ.லட்சுமணன்,
வசிக்கும் இடம், கதவு எண்.229,
4 வது தெரு, B.V.காலணி,
வியாசர்பாடி, சென்னை- 600 039,

தங்கள் மீது தொடரப்பட்டுள்ள மேற்படி மனு/ வழக்கு மேற்படி நீதிமன்றம் முன்பு 15.12.2025 அன்று விசாரணைக்கு வரவுள்ளது. அன்று தாங்கள் மேற்படி நீதிமன்றம் முன்பு காலை 10.30 மணியளவில் ஆஜராக வேண்டும். தவறும் பட்சத்தில் மேற்படி வழக்கு ஒரு தலைபட்சமாக தீர்மானிக்கப்படும் என்பதை இதன் மூலம் அறியவும்.

இப்படிக்கு
தங்கள் உண்மையுள்ள, மா. சந்தனமாரி,
மோ. மணிவண்ணன்
மனுதாரர் / பிரதிவாதி வழக்கறிஞர்,
எண். 382, நியூ அடிஷனல் லா சேம்பர்ஸ், உயர்நீதிமன்றம்,
சென்னை 600 104
8870507646

மாண்புமிகு
IIசிறுவழக்குகள் நீதிமன்றம்,
சென்னை
M.C.O.P. No. 816 of 2018

1.கங்காபாய்
2.குணவதி
3.தீபா
4.காந்தம்மாள்
... மனுதாரர்கள்
எதிர்
1.S.மோகன்
2. தி யுனடைட் இந்தியா இன்சூரன்ஸ் கம்பெனி லிமிடெட்
3. S.பாஸ்கர்,
4. சிந்தம்பரம்
... எதிர் மனுதாரர்கள்

பெறுநர்.
திரு S.பாஸ்கர்,
S/o K.சுப்ரமணியன்
எண். 56/31/6. பாண்டவ பெருமாள் மாடதெரு, காஞ்சிபுரம்.

மேற்படிமனுதாரர், எதிர்மனுதாரர்கள் மீது தொடர்ந்துள்ள மோட்டார் வாகன விபத்து நஷ்டாடு கோரிய இவ்வழக்கில் R3 எதிர்மனுதாரராகிய தாங்கள் ஆஜராவதற்காக -16-12-2025 அன்று லாய்தா போடப்பட்டு ள்ளது. அன்றைய தினம் காலை 10.30 மணியளவில் தாங்கள் நேரிலோ அல்லது வழக்கறிஞர் முலமாகவோ மேற்கூறிய நீதிமன்றத்தில் ஆஜராகி, ஆட்சேபனையிருப்பின் தெரிவிக்கவும். தவறும் பட்சத்தில் ஒருதலை பட்சமாக தீர்பளிக்கப்படும் என்பதை இதன்மூலம் அறியவும்.

க.பிரேம் குமார்
பி. பிரஷாந்த் மனுதாரரின் வழக்கறிஞர்கள்

# வயது முதிர்ந்தோர் மற்றும் மாற்றுத்திறனாளி குடும்ப அட்டைதாரர்களின் இல்லத்திற்கே சென்று அரிசி, சர்க்கரை உள்ளிட்ட ரேசன் பொருட்களை வழங்கும் தாயுமானவர் திட்டம்

## முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு நீலகிரி மாவட்டத்தில் பயனடைந்தோர் மனமார்ந்த நன்றி

ஊட்டி டிச.10

தமிழ்நாடு முதலமைச்சர் ஏழை, எளிய மக்கள் வாழ்வாதாரம் மேம்பட வேண்டும் என்ற நோக்கத்தில், அனைத்து துறைகளின் சார்பில் பல்வேறு திட்டங்களை தீட்டி சிறப்பான முறையில் செயல்படுத்தி வருகிறார்கள். மேலும், 70 வயதுக்கு மேற்பட்ட மூத்த குடிமக்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகள் மட்டுமே கொண்ட குடும்பங்கள் நியாயவிலைக்ககடைகளுக்கு நேரில் சென்று பொருட்களை பெற்றுச் செல்வதில் ஏற்படும் இடர்பாடுகளை களைய, அவர்களின் வீடுகளுக்கே சென்று அத்தியாவசிய பொருட்களை விநியோகம் செய்யும் வகையில் முதலமைச்சரின் தாயுமானவர் திட்டம் என்ற சிறப்பான திட்டத்தினை தொடங்கி வைத்தார்கள்.

இத்திட்டத்தின் மூலம் சமூக நலம் சார்ந்த நலிவுற்ற பிரிவினரின் வாழ்வாதார நிலையை மேம்படுத்துவதுடன், உணவு பாதுகாப்பையும் உறுதி செய்ய உதவும் என்பதால், முதற்கட்டமான 02.07.2025 அன்று நீலகிரி மாவட்டம் கோத்தகிரி வட்டத்தில் 10 நியாய விலைக்கடைகள் தேர்ந்தெடுக்கப்பட்டு, அவை 6 கிளஸ்டர்களாக வகைப்படுத்தப்பட்டு செயல்படுத்தப்பட்டது. ஒவ்வொரு கிளஸ்டருக்கும் 50 குடும்ப அட்டைதாரர்கள் வீதம் மொத்தம் 200 குடும்ப அட்டைதாரர்கள் முதற்கட்டமாக தெரிவு செய்யப்பட்டு, ஒவ்வொரு கிளஸ்டருக்கும் தனித்தனி வாகனங்கள் மூலம் குடும்ப அட்டைதாரர்களின் வீடுகளுக்கு அரிசி, சர்க்கரை உள்ளிட்ட அத்தியாவசிய பொருட்கள் எடுத்து





செல்லப்பட்டு வழங்கப்பட்டது.நீலகிரி மாவட்டத்தில் 323 முழு நேர நியாய விலை கடைகளும், 92 பகுதி நேர நியாய விலை கடைகளும் இயங்கி வருகிறது. இதில் முழுநேர நியாயவிலைக்கடைகள் மூலம் 2,02,515 குடும்ப அட்டைதாரர்களும், பகுதி நேர நியாய விலைக்கடைகள் மூலம் 16,382 என மொத்தம் 2,18,897 குடும்ப அட்டைதாரர்கள் உள்ளனர்.

இதில் முதலமைச்சரின் தாயுமானவர் திட்டத்தின் கீழ் ஆகஸ்ட் மாதத்தில் 70 வயதுக்கு மேற்பட்ட மூத்த குடிமக்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகள் 18,286 குடும்ப அட்டைதாரர்களும், செப்டம்பர் மாதத்தில் 18,286 குடும்ப அட்டைதாரர்களும், அக்டோபர் மாதத்தில் 21,449 குடும்ப அட்டைதாரர்களும், நவம்பர் மாதத்தில் 21,449 குடும்ப அட்டைதாரர்களும் என மொத்தம் 79,470 மூத்த குடிமக்கள் மற்றும் மாற்றுத்திறனாளி குடும்ப அட்டைதாரர்கள் அத்தியாவசிய பொருட்கள் பெற்று பயனடைந்து வருகின்றனர்.

இத்திட்டத்தின் மூலம் பயனடைந்த பயனாளி ராமச்சந்திரன் தெரிவிக்கையில்:

என் பெயர் ராமச்சந்திரன். எனக்கு 73 வயதாகிறது. நான் கல்லாடா கிராமத்தில் வசித்து வருகிறேன். நான் அரவேணு தொடக்க வேளாண்மை கூட்டுறவு நியாயவிலைகடையிலிருந்து அரிசி, சர்க்கரை உள்ளிட்ட அத்தியாவசிய பொருட்களை வாங்கி வந்தேன். மூத்த குடிமக்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகள் பயன்பெறும் வகையில் முதலமைச்சரின் தாயுமானவர் திட்டத்தின் மூலம் அத்தியாவசிய பொருட்களை வீட்டிற்கே கொண்டு வந்து வழங்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ் நானும் பயனடைந்துள்ளேன்.



இத்திட்டமானது எங்களை போன்ற மூத்த குடிமக்களுக்கு மிகவும் பயனுள்ளதாக அமைந்துள்ளது. இத்திட்டத்தினை செயல்படுத்தி வரும் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கும், தமிழ்நாடு அரசிற்கும் எங்களது மனமார்ந்த நன்றியினை தெரிவித்துக் கொள்கிறேன் என தெரிவித்தார்.

இத்திட்டத்தின் மூலம் பயனடைந்த பயனாளி மகாலட்சுமி தெரிவிக்;கையில்:-

என் பெயர் மகாலட்சுமி. நான் நீண்ட காலமாக குன்னூர் வெலிங்டன் பகுதியில் வசித்து வருகிறேன். நான் வெலிங்டன் நியாயவிலைகடையிலிருந்து அரிசி, சர்க்கரை உள்ளிட்ட அத்தியாவசிய பொருட்களை வாங்கி வந்து கொண்டிருந்தேன். நியாய விலைகடைக்கு சென்று பொருட்களை வாங்கி கொண்டு வீட்டிற்கு வருவதற்கு மிகவும் சிரமமாக இருந்தது.

மூத்த குடிமக்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகளுகள் ஏற்படும் சிரமங்களை கருத்தில் கொண்ட தமிழ்நாடு முதலமைச்சர் தாயுமானவர் என்ற சிறப்பான திட்டத்தினை அறிவித்தார்கள். இத்திட்டத்தின் கீழ் பணியாளர்கள் மூலம் நேரடியாக வீட்டிற்கு வருகை தந்து அத்தியாவசிய பொருட்களை வழங்கி வருகிறார்கள்இத்திட்டத்தின் கீழ் நானும் பயனடைந் துள் ளேன். இது போன்ற சிறந்த திட்டத்தினை முதியோர்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகள் பயன் பெ றும் வகையில் செயல்படுத்தி வரும் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கும், வீடு தேடி வந்து அத்தியாவசிய பொருட்களை விநியோகம் செய்யும் பணியாளர்களுக்கும், என் சார்பிலும், என்னை போன்ற அனைத்து மக்களின் சார்பிலும் நன்றியினை தெரிவித்துக் கொள்கிறேன் என தெரிவித்தார்.



நீலகிரி மாவட்டத்தில் முதியோர்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகள் பயன்பெறும் வகையில் முதலமைச்சரின் தாயுமானவர் என்ற திட்டத்தினை செயல்படுத்தி வரும் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு நெஞ்சம் நிறைந்த நன்றியினை தெரிவித்துக் கொண்டனர்.

**தொகுப்பு**
**நி.சையத் முகம்மத்**
**செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்**
**நீலகிரி மாவட்டம்.**

# ஊட்டி குட்ஷெப்பர்டு சர்வதேச பள்ளியில் மிகப்பெரிய சூரிய மின்சக்தி ஆலை அமைப்பு

## பள்ளி தலைவர் ஜேக்கப் தாமஸ் தகவல்

ஊட்டி, டிச.10-

நீலகிரி மாவட்டம் ஊட்டி குட்ஷெப்பர்டு சர்வதேச பள்ளியில் அமைக்கப்பட்டுள்ள மிகப் பெரிய சூரிய மின்சக்தி ஆலை எதிர் காலத்திற்கு ஆற்றல் அளிக்கும் என இப்பள்ளியின் தலைவர் ஜேக்கப் தாமஸ் பெருமையுடன் கூறினார்.

ஊட்டியில் அமைந்துள்ள குட் ஷெப்பர்ட் இன்டர்நேஷனல் பள்ளி நீலகிரி மாவட்டத்தில் அதன் வகையான மிகப் பெரிய 538 மறு சூரிய மின்சக்தி நிறுவுதலைப் பயன்பாட்டிற்குக் கொண்டு வந்து, சுற்றுச்சூழல் தலைமைத்துவம் மற்றும் நிலையான வளாக செயல்பாடுகளை நோக்கி ஒரு துணிச்சலான நடவடிக்கையை எடுத்துள்ளது. இந்த மைல்கல், பொறுப்பான நிர்வாகம் மற்றும் காலநிலையைப் பற்றிய கல்வியில் பள்ளியின் நீடித்த அர்ப்பணிப்பை உறுதிப்படுத்துகிறது.



இந்தச் சூரிய மின்சக்தி ஆலை, சுத்தமான, புதுப்பிக்கத்தக்க ஆற்றலைப் பயன்படுத்துவதன் மூலம் வழக்கமான மின்சார ஆதாரங்களைச் சார்ந்து இருப்பதை கணிசமாகக் குறைக்கிறது. வளாகத்தின் தினசரி ஆற்றல் தேவைகளில் 65 சதவீதத்திற்கும் மேல் இப்போது சூரிய மின்சக்தி மூலம் பூர்த்தி செய்யப்படுகிறது, இது வகுப்பறைகள், உறைவிடங்கள், ஆய்வகங்கள், உணவக வசதிகள் மற்றும் பல அத்தியாவசிய செயல்பாடுகளை ஆதரிக்கிறது. இந்த மாற்றம் ஆற்றல் மீள்திறனை மேம்படுத்துகிறது, அதே நேரத்தில் பள்ளியின் கார்பன் தடம் வியத்தகு முறையில் குறைகிறது.

கட்டமைப்பைத் தாண்டி, சூரிய மின்சக்தி முயற்சி சமூக அளவில் உத்வேகத்திற்கு ஒரு ஊக்கியாக செயல்படுகிறது. நிறுவனங்கள் நீண்ட கால சிந்தனை மற்றும் சுற்றுச்சூழல் பொறுப்புணர்வை ஏற்கும் போது என்ன சாத்தியமாகும் என்பதை இது நிரூபிக்கிறது. குட்ஷெப்பர்டு பள்ளி, நீலகிரி போன்ற ஒரு சூழலியல் ரீதியாக உணர்திறன் கொண்ட பகுதியில் பெரிய அளவிலான சூரிய மின்சக்தியை ஏற்றுக்கொள்வதன் சாத்தியக்கூறு மற்றும் நன்மைகளை வெளிப்படுத்துவதன் மூலம் முன்னுதாரணமாக இருப்பதில் பெருமிதம் கொள்கிறது.

மாணவர்களுக்கு, இந்த நிறுவுதல் ஒரு பயன்பாட்டை விட மேலானது - இது ஒரு சக்திவாய்ந்த கற்றல் வாய்ப்பு. சூரிய மின்சக்தி அமைப்பு ஒரு நேரடி ஆய்வகமாகச் செயல்படுகிறது, இது நிலையான தொழில்நுட்பங்கள், ஆற்றல் அமைப்புகள், தரவு பகுப்பாய்வு மற்றும் சுற்றுச்சூழல் பொறுப்பு ஆகியவற்றிற்கு மாணவர்களுக்கு நேரடி வெளிப்பாட்டைக் கொடுக்கிறது. கல்வி மற்றும் இணைப் பாடத்திட்ட திட்டங்களில் ஒருங்கிணைக்கப்பட்ட இந்த முயற்சி, தகவல் அறிந்த, ஆர்வமுள்ள மற்றும் காலநிலையைப் பற்றி உணர்வுள்ள ஒரு தலைமுறை உலகளாவிய குடிமக்களை வளர்க்க உதவுகிறது.

'வகுப்பறையிலிருந்து சமூகம் வரை, எங்கள் சூரிய மின்சக்தி திட்டம் குட்ஷெப்பர்டு பள்ளியில் நாங்கள் வைத்திருக்கும் மதிப்புகளைப் பிரதிபலிக்கிறது,' என்று இப்பள்ளியின் தலைவர் ஜேக்கப் தாமஸ் கூறினார். 'அர்த்தமுள்ள மாற்றம் உணர்வுபூர்வமான தேர்வுகளுடன் தொடங்குகிறது - மேலும் முக்கியமான தீர்வுகளின் ஒரு பகுதியாக இருக்க முடியும் என்பதை எங்கள் மாணவர்கள் காண வேண்டும் என்று நாங்கள் விரும்புகிறோம்.'

ஏற்கனவே எங்கள் பள்ளியில் மழைநீர் சேகரிப்பு, வன வளர்ப்பு, கழிவுகளைப் பிரித்தெடுத்தல் மற்றும் ஹைட்ரோபோனிக் விவசாயம் உள்ளிட்ட பள்ளியின் பரந்த நிலைத்தன்மை முயற்சிகளின் ஒரு பகுதியாக தற்போது, சூரிய மின்சக்தி ஆலை பசுமையான, மேலும் நிலையான எதிர்காலத்திற்கான பள்ளியின் ; அர்ப்பணிப்புக்கு மற்றொரு அடுக்கைச் சேர்க்கிறது.

இந்த முயற்சியின் மூலம், பள்ளி வளாகத்திற்கு சூரிய ஒளியுடன் ஆற்றல் அளிப்பது மட்டுமல்ல - இது பொறுப்பான, முன்னோக்குச் சிந்தனை கொண்ட, மற்றும் நாம் அனைவரும் பகிர்ந்து கொள்ளும் உலகின் நல்வாழ்வுடன் ஆழமாக இணைக்கப்பட்ட ஒரு கல்விப் பார்வைக்கு ஆற்றல் அளிக்கிறது.

Printed, Published and Owned by S.Manimaran and Printed at Manimaran Printers
Old No:5, New No: 9, kannan Street, Korukkupet, Chennai - 600021.
Ph: 044-25952015,9842165236
E-Mail: chennaiedi@thinaboomi.com
RNI.Regn No.55306/93
Editor:MANIMARAN
Subject to Madurai Jurisdiction Only

# தேசிய மாணவர் படையில் உள்ள பட்டதாரி மாணவர்களுக்கு மெட்ராஸ் ரெஜிமெண்டில் 14 நாள் பயிற்சி



ஊட்டி, டிச.10-

தேசிய மாணவர் படையில் உள்ள பட்டதாரி மாணவர்களுக்கு குன்னூர் வெலிங்டனில் உள்ள மெட்ராஸ் ரெஜிமென்டில் 14 நாள் பயிற்சி தொடங்கியது.

இந்திய ராணுவத்தில் பல்வேறு ரெஜிமெண்டுகள் உள்ளன. இதில் எம்.ஆர்.சி. என்று அழைக்கப்படும் மெட்ராஸ் ரெஜிமெண்டல் சென்டர் முக்கியத்துவம் பெற்றதாக உள்ளது. நூற்றாண்டு பழமை வாய்ந்த எம்.ஆர்.சி. ராணுவ முகாமிற்கு தமிழ்நாடு, கேரளா, கர்நாடகா ஆந்திரா போன்ற தென் மாநிலங்களில் உள்ள இளைஞர்கள் தேர்வு செய்யப்படுகிறார்கள்.

இவ்வாறு தேர்வு செய்யப்படும் இளைஞர்களுக்கு 46 வாரங்கள் பயிற்சி அளிக்கப்படுகிறது. இதில் உடற்பயிற்சி, இந்தி மொழி பயிற்சி, ஆயுத பயிற்சி உள்ளிட்ட பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன. 46 வார பயிற்சி முடித்த வீரர்களுக்கு சத்திய பிரமாண நிகழ்ச்சி நடத்தப்படுகிறது. சத்தியபிரமாணம் எடுத்த வீரர்கள் எல்லை புறத்தில் உள்ள யூனிட்டுகளுக்கு அனுப்பி வைக்கப்படுகிறார்கள்.இந்தநிலையில் தேசிய மாணவர் படையில் உள்ள பட்டதாரி மாணவர்களுக்கான பயிற்சி முகாம் குன்னூர் வெலிங்டனில் உள்ள மெட்ராஸ் ரெஜிமென்டில் நேற்று தொடங்கியது. மெட்ராஸ் ரெஜிமென்டின் துணை கமாண்டன்ட் கர்னல் நித்தின் குட்டப்பா இந்த பயிற்சி முகாமினை தொடங்கி வைத்து பேசினார்.14 நாட்கள் நடைபெறும் இந்த முகாமில் படை அணிவகுப்பு, மலையேற்றம்,புதிய ரக ஏகே 203இ எஸ்எல்ஜி ரைபிள் உள்ளிட்ட துப்பாக்கிகள் மற்றும் ராக்கெட் லாஞ்சர்களை கையாள்வது உள்ளிட்ட பல்வேறு பயிற்சிகள் அளிக்கப்படுகிறது.இப்பயிற்சி முகாமில் தமிழகத்தின் கோவை, திருச்சி, சேலம் உள்ளிட்ட மாவட்டங்கள் புதுச்சேரி மற்றும் அந்தமான் நிக்கோபார் தீவுகளை சேர்ந்த 54 பட்டதாரி மாணவர்கள் கலந்து கொண்டுள்ளனர். இந்த பயிற்சியினை நிறைவு செய்யும் மாணவர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கப்படுகிறது. இதில் பயிற்சி பெற்றவர்கள் தகுதி தேர்வு இன்றி ராணுவ அதிகாரிகளாக பணியில் சேர தகுதி பெறுகின்றனர்.

தமிழ்நாடு அரசு
நீர்வளத்துறை
குறுகிய கால மின்னணு ஒப்பந்தப்புள்ளி
அறிவிப்பு எண்.06/2025-2026/வஅ1/ந.கா.வ.வ./திருச்சி/நாள் : 08.12.2025

தமிழ்நாடு ஆளுநருக்காகவும் அவரது சார்பாகவும் மின்னணு (E-Tender) வழியாக உரிய வகுப்பில் பதிவு பெற்ற தகுதி வாய்ந்த, கட்டுமான பணிகள் மற்றும் பாசன பணிக்கு அனுபவம் பெற்ற ஒப்பந்தக்காரர்களிடமிருந்து கண்காணிப்புப் பொறியாளர், நீவது, நடுக்காவேரி வடிநில வட்டம், திருச்சி அவர்களால் கீழ்காணும் பணிக்கு ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்படுகின்றது.

| வ. எண். | வேலையின் பெயர் | பணியின் தோராய மதிப்பு (சரக்கு மற்றும் சேவை வரி 18% உட்பட) ரூபாய் இலட்சத்தில் | முன் வைப்புத் தொகை ரூபாய் | ஒப்பந்த காலம் (மழைக் காலம் உட்பட) | ஒப்பந்தப் புள்ளி சமர்ப்பிக்கும் இறுதி நாள் மற்றும் நேரம் | ஒப்பந்தப் புள்ளி திறக்கப்படும் நாள் மற்றும் நேரம் |
|---|---|---|---|---|---|---|
| | மொத்த தொகை ஒப்பந்தமுறை - இனவிலை ஒப்பந்தப்புள்ளி (இரு உறை ஒப்பந்த வழி முறை) | | | | | |
| | ஆற்றுப் பாதுகாப்புக் கோட்டம், திருச்சி | | | | | |
| 1 | திருச்சி மாவட்டம், ஸ்ரீரங்கம் வட்டம், மேலூர் கிராமத்தில் காவேரி ஆற்றின் இடது கரையிலும், வெள்ளித்திருமுத்தம் கிராமத்தில் கொள்ளிட ஆற்றின் வலது கரையிலும், கற்கள் நிரப்பப்பட்ட கம்பி வலைச் சுவர் (Gabion Wall) மற்றும் திருப்புச்சுவர் (Groyne) கட்டி அரிந்தோடிய பகுதியில் வெள்ளத் தடுப்பு பணிகள் மேற்கொள்ளுதல். | 1116.37 | 5,69,000 | 12 மாதங்கள் | 23.12.2025 3.00 பிற்பகல் வரை | 24.12.2025 3.00 பிற்பகல் முதல் |

ஒப்பந்தப்புள்ளிகளை 12.12.2025 முதல் https:// www.tntenders.gov.in என்ற இணையதளத்தில் இலவசமாக பார்க்கவும் மற்றும் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். மின்னணு முன்வைப்புத் தொகை செலுத்த வேண்டிய விபரம் மற்றும் இதர விவரங்கள் மற்றும் விதி முறைகளை பார்க்கலாம். மேலும் கண்காணிப்புப் பொறியாளர், நீவது, நடுக்காவேரி வடிநில வட்டம், திருச்சி அலுவலகத்திலும் அலுவலக வேலை நாட்களில் தெரிந்து கொள்ளலாம். ஒப்பந்தக்காரரின் உரிய பதிவு வகுப்பு - வகுப்பு - I -இல் ரூ.75.00 இலட்சம் மற்றும் அதற்கு மேல் மாநில அளவில், நீவது அல்லது பொபது, இதற்கு சமமான.

அனைத்து திருத்தங்கள் / கால நீட்டிப்பு / மாற்றங்கள் ஏதாவது இருப்பின் மேற்குறிப்பிட்ட இணைய தளத்தில் மட்டுமே வெளியிடப்படும்.

கண்காணிப்புப் பொறியாளர், நீவது
நடுக்காவேரி வடிநில வட்டம், திருச்சி - 620 020.
செமதொஇ/6534/ஒப்பந்தப்புள்ளி/2025

## ஜூனியர் உலக கோப்பை ஹாக்கி: இன்று
# 3-வது இடத்துக்கான போட்டியில் இந்தியா - அர்ஜென்டினா மோதல்




**சென்னை, டிச. 10-**

ஜூனியர் உலக கோப்பை ஹாக்கியில் 3-வது இடமான வெண்கல பதக்கத்துக்கான போட்டியில் 2 முறை சாம்பியன்களான இந்தியா-அர்ஜென்டினா அணிகள் இன்று மோதுகின்றன. இந்த ஆட்டம் எழும்பூர் மேயர் ராதாகிருஷ்ணன் ஸ்டேடியத்தில் இன்று மாலை 5.30 மணிக்கு நடக்கிறது.

**ரோகித் தலைமையில்...**

ரோகித் தலைமையிலான இந்திய அணி அர்ஜென்டினாவை வீழ்த்தி 3-வது இடத்தை பிடிக்குமா? என்று ரசிகர்கள் ஆவலுடன் எதிர்பார்க்கின்றனர். அதே நேரத்தில் அர்ஜென்டினா சிறந்த அணி என்பதால் கடுமையாக போராட வேண்டும். இந்திய அணி 'லீக்' சுற்றில் சிலி (7-0), ஓமன் (17-0), சுவிட்சர்லாந்து (5-0) ஆகியவற்றையும், கால் இறுதியில் பெல்ஜியத்தையும் தோற்கடித்தது. அரைஇறுதியில் ஜெர்மனியிடம் வீழ்ந்தது.

**அரைஇறுதியில்...**

அர்ஜென்டினா அணி 'லீக்' சுற்றில் ஜப்பான் (4-1), சீனா (3-1) ஆகியவற்றை வீழ்த்தியது. நியூசிலாந்துடன் (3-3) 'டிரா' செய்தது. கால்இறுதியில் நெதர்லாந்தை (1-0) தோற்கடித்தது. அரைஇறுதியில் ஸ்பெயினிடம் தோற்றது. முன்னதாக நடைபெறும் 5-வது இடத்துக்கான போட்டியில் பெல்ஜியம்-நெதர்லாந்து (மாலை 3 மணி), 7-வது இடத்துக்கான ஆட்டத்தில் பிரான்ஸ்-நியூசிலாந்து (மதியம் 12.30 மணி) அணிகள் மோதுகின்றன.

**17 முதல் 24-வது...**

9-வது இடத்துக்கு இங்கிலாந்து-அயர்லாந்து (இரவு 8 மணி), 11-வது இடத்துக்கு ஆஸ்திரேலியா-தென் ஆப்பிரிக்கா (மாலை 5.30 மணி), 13-வது இடத்துக்கு ஜப்பான்-மலேசியா (மாலை 3 மணி), 15-வது இடத்துக்கு சிலி-சுவிட்சர்லாந்து அணிகள் மோதுகின்றன. இதற்கு முன் நடந்த போட்டி முடிவில் ஆஸ்திரியா, வங்கதேசம், தென்கொரியா, சீனா, எகிப்து, கனடா, நமீபியா, ஓமன் ஆகிய அணிகள் முறையே 17 முதல் 24-வது இடங்களை பிடித்தன.

## ஃப்ரீஸ்டைல் செஸ் கிராண்ட்ஸ்லாம்:
# இந்திய வீரரிடம் கார்ல்சன் தோல்வி




**கேப்டவுன், டிச. 10-**

ஃப்ரீஸ்டைல் செஸ் கிராண்ட்ஸ்லாம் பைனல் 2025 போட்டியில் இந்திய வீரர் எரிகைசி வெற்றி பெற்றார்.

**4.5 புள்ளிகளுடன்...**

ஃப்ரீஸ்டைல் செஸ் கிராண்ட்ஸ்லாம் பைனல் 2025 போட்டி தென் ஆப்பிரிக்காவின் கேப்டவுனில் நடைபெற்று வருகிறது. இந்த போட்டியின் ரவுண்ட்-ராபின் ஸ்டேஜின் 5-வது சுற்று ஆட்டத்தில் இந்திய செஸ் வீரர் அர்ஜுன் எரிகைசி, உலகின் முன்னணி வீரரான மேக்னஸ் கார்ல்சனுடன் மோதினார். இந்த ஆட்டத்தில் இந்திய வீரர் எரிகைசி வெற்றி பெற்றார். இந்த வெற்றியால் அர்ஜுன், போட்டியின் குரூப் ஸ்டேஜில் 4.5 புள்ளிகளுடன் 3-வது இடத்தில் உள்ளார். கார்ல்சனும் 4.5 புள்ளிகளுடன் 4-வது இடத்தில் உள்ளார்.

**5.5 புள்ளிகளுடன்...**

உஸ்பெகிஸ்தானின் நொதிர்பெக் சிந்தரோவ் 5.5 புள்ளிகளுடன் முதலிடத்திலும், லெவன் அரோனியன் 5 புள்ளிகளுடன் 2-வது இடத்திலும் உள்ளனர். போட்டியின் அடுத்த கட்டங்கள் நாக் அவுட் சுற்றுகளாக தொடரும். அர்ஜுன் காலிறுதி ஆட்டத்தில் கிமருடன் மோதவுள்ளார். இந்த வெற்றி அர்ஜுனின் செஸ் வாழ்க்கையில் ஒரு முக்கியமான சாதனையாகக் கருதப்படுகிறது. ஏனெனில் கார்ல்சன் போன்ற அனுபவமிக்க வீரரை ஃப்ரீஸ்டைல் செஸ் போன்ற வடிவத்தில் வீழ்த்தியது சிறப்பு வாய்ந்தது.

# ஐ.பி.எல். மினி ஏலத்துக்கான இறுதிப்பட்டியல் வெளியீடு
## 240 இந்திய வீரர்களுக்கு இடம்

**மும்பை, டிச. 10-**

ஐ.பி.எல். மினி ஏலத்துக்கான இறுதிப்பட்டியல் இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு வாரியம்(பி.சி.சி.ஐ.) வெளியிட்டுள்ளது. இதில் 240 இந்திய வீரர்கள் மற்றும் 110 வெளிநாட்டு வீரர்கள் உள்பட 350 பேர் இடம்பெற்றுள்ளனர்.

**10 அணிகளும்...**

ஐ.பி.எல். 2026 சீசனுக்கான மினி ஏலம் வருகிற டிச.16 ஆம் தேதி அபுதாபியில் நடைபெறவுள்ளது. ஏலத்துக்கு முன்னதாக, அணிகள் தங்களுக்குத் தேவையான வீரர்களை தக்கவைத்துக் கொண்டு மற்ற வீரர்களை கடந்த நவம்பர் 15 ஆம் தேதி விடுவித்தது. அதன்படி, சென்னை, மும்பை, பெங்களூரு உள்பட 10 அணிகளும் தங்களிடம் இருக்கும் தொகைக்கு ஏற்ப மினி ஏலத்தில் பங்கேற்று வீரர்களை ஏலத்தில் எடுக்கலாம்.

**இருப்புத்தொகை...**

அந்த வகையில் மினி ஏலத்தில் பங்கேற்கும் கொல்கத்தா அணியிடம் ரூ.64.30 கோடியும், குறைந்தபட்சமாக மும்பை அணியிடம் ரூ.2.75 கோடியும் கையிருப்பாக வைத்துள்ளது. அதேவேளையில், சென்னை (ரூ.43.40 கோடி), ராயல் சேலஞ்சர்ஸ் பெங்களூரு (ரூ.16.40 கோடி), ஹைதராபாத் (ரூ.25.50 கோடி), குஜராத் (ரூ.12.90 கோடி), ராஜஸ்தான் (ரூ. 16.05 கோடி), தில்லி (ரூ. 21.80 கோடி), லக்னோ (ரூ. 22.95 கோடி), பஞ்சாப் (ரூ. 11.50 கோடி) தொகையை வைத்துள்ளன.

**1,355 வீரர்கள் பதிவு...**

டிச.16 ஆம் தேதி அபுதாபியில் நடைபெறும் மினி ஏலத்தில் பங்கேற்க 14 நாடுகளைச் சேர்ந்த 1,355 வீரர்கள் பதிவு செய்திருந்தனர். இந்த ஏலத்தில் அனைத்து அணிகளிலும் மொத்தம் 77 அணி இடங்களுக்காக வீரர்களில் 31 இடங்கள் வெளிநாட்டு வீரர்களுக்காக ஒதுக்கப்பட்டன. இந்த நிலையில், மினி ஏலத்துக்கு இறுதிப்பட்டியலை பி.சி.சி.ஐ. செயலர் தேவ்ஜித் சாய்க்கியா நேற்று வெளியிட்டார். இதில், 240 இந்திய வீரர்கள் மற்றும் 110 வெளிநாட்டு வீரர்கள் உள்பட 350 பேர் இடம்பெற்றுள்ளனர். மேலும், ஐக்கிய அரபு அமீரகத்தின் அபுதாபியில் டிச. 16 ஆம் தேதி இந்திய நேரப்படி மதியம் 1 மணிக்கு நடைபெறுகிறது.

**224 இந்திய வீரர்கள்...**

மொத்தமாக, சர்வதேசப் போட்டிகளில் விளையாடிய, விளையாடும் இந்திய வீரர்கள் 16 பேர், வெளிநாட்டு வீரர்கள் 96 பேர், சர்வதேச போட்டிகளில் விளையாடாத இந்திய வீரர்கள் 224 பேர் மற்றும் வெளிநாட்டு வீரர்கள் 14 பேர் இடம்பெற்றுள்ளனர். டெவான் கான்வே, கேமரூன் க்ரீன், ஜேக் ஃபிரேசர், சர்பராஸ் கான், டேவிட் மில்லர், பிரித்வி ஷா உள்ளிட்டோரின் பெயர்கள் முதல் செட்டில் இடம்பெற்றுள்ளன. இதில், ரூ. 2 கோடி அடிப்படை விலையில் 40 வீரர்களும், ரூ. 1.50 கோடியில் 9 வீரர்களும், ரூ. 1.25 கோடியில் 4 வீரர்களும், ரூ. 1 கோடியில் 17 வீரர்கள் உள்ளனர்.

## இலங்கைக்கு எதிரான டி20 தொடர்:
# இந்திய மகளிர் அணி அறிவிப்பு

**புதுடெல்லி, டிச. 10-**

இலங்கைக்கு எதிரான டி20 தொடருக்கான இந்திய மகளிர் அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

**விசாகப்பட்டினத்தில்...**

சமீபத்தில் நடந்த ஐ.சி.சி. ஒருநாள் உலகக் கோப்பையை இந்திய மகளிர் அணி வென்று சாதனை படைத்தது. இலங்கை மகளிர் கிரிக்கெட் அணி இந்த மாதம் 21-ம் தேதி முதல் 30-ம் தேதி வரை இந்தியாவில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு 5 போட்டிகள் கொண்ட டி20 தொடரில் விளையாடுகிறது. அதன்படி, இரு அணிகளுக்கு இடையிலான முதல் டி20 போட்டி 21-ம் தேதி விசாகப்பட்டினத்தில் நடைபெற உள்ளது. 2-வது போட்டி 23-ம் தேதி அதே மைதானத்தில் நடைபெற உள்ளது. 26, 28, 30 ஆகிய தேதிகளில் என கடைசி 3 போட்டிகளும் திருவனந்தபுரத்தில் நடக்கிறது.

**ஹர்மன்ப்ரீத் கவுர்...**

இந்நிலையில், இலங்கை அணிக்கு எதிரான இந்திய மகளிர் அணி அறிவிக்கப்பட்டுள்ளது. ஹர்மன்ப்ரீத் கவுர் கேப்டனாகவும், ஸ்மிருதி மந்தனா துணை கேப்டனாகவும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

**இந்திய அணி:**

ஹர்மன்ப்ரீத் கவுர் (கேப்டன்), ஸ்மிருதி மந்தனா (துணை கேப்டன்), தீப்தி சர்மா, சினே ராணா, ஜெமிமா ரோட்ரிக்ஸ், ஷபாலி வர்மா, ஹர்லீன் தியோல், அமன்ஜோத் கவுர், அருந்ததி ரெட்டி, கிராந்தி கவுட், ரேணுகா சிங் தாக்கூர், ரிச்சா கோஷ், ஜி.கமலினி, ஸ்ரீ சரணி, வைஷ்ணவி சர்மா.

## தமிழக வீரர் பிரக்ஞானந்தா தகுதி



உலக செஸ் சாம்பியன்ஷிப்பில் நடப்பு சாம்பியனுடன் மோதும் வீரர் கேண்டிடேட்ஸ் செஸ் தொடரின் மூலம் தேர்வு செய்யப்படுவது வழக்கம். அடுத்த ஆண்டு நடக்கும் உலக செஸ் சாம்பியன்ஷிப்பில் நடப்பு சாம்பியன் இந்தியாவின் குகேசை எதிர்கொள்ளும் வீரர் யார் என்பதை கண்டறிய கேண்டிடேட்ஸ் செஸ் போட்டி மார்ச் 28-ந் தேதி முதல் ஏப்ரல் 16-ந் தேதி வரை சைப்ரசில் நடக்கிறது. 8 வீரர்கள் இடையிலான கேண்டிடேட்ஸ் செஸ் போட்டிக்கு அமெரிக்காவின் பாபியானோ கருனா, ரஷியாவின் ஆந்த்ரே இசிபென்கோ, நெதர்லாந்தின் அனிஷ் கிரி, ஜெர்மனியின் மதியாஸ் புளுபாம், உஸ்பெகிஸ்தானின் ஜவோகிர் சிந்தாரோவ், சீனாவின் வெய் யி ஆகியோர் ஏற்கனவே தகுதி பெற்றுள்ளனர்.

இந்த நிலையில் 7-வது வீரராக அந்த போட்டிக்கு தமிழகத்தின் பிரக்ஞானந்தா தகுதி பெற்றிருப்பதாக சர்வதேச செஸ் சம்மேளனம் (பிடே) அறிவித்தது. 2025-ம் ஆண்டுக்கான 'பிடே' செஸ் சர்க்யூட்டில் நடைபெற்ற போட்டிகளில் ஒவ்வொரு வீரரின் சிறந்த 7 போட்டிகளின் முடிவை கணக்கிட்டு அதன் அடிப்படையில் புள்ளிகள் வழங்கப்பட்டன. இதில் 115.17 புள்ளிகளுடன் முதலிடத்தை பிடித்த பிரக்ஞானந்தா அதன் மூலம் கேண்டிடேட்ஸ் செஸ் போட்டிக்கான வாய்ப்பை தட்டிச் சென்றார். மற்றொரு இடம் அமெரிக்க முன்னணி வீரர் ஹிகரு நகமுராவுக்கு கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. கேண்டிடேட்ஸ் செஸ் போட்டிக்கு இந்த தடவை இந்திய தரப்பில் பிரக்ஞானந்தா மட்டுமே தகுதி பெற்றுள்ளார். அதே சமயம் பெண்களுக்கான கேண்டிடேட்ஸ் செஸ் போட்டிக்கு இந்தியாவில் இருந்து திவ்யா தேஷ்முக், கோனெரு ஹம்பி, ஆர்.வைஷாலி ஆகியோர் தகுதி பெற்று இருக்கிறார்கள்.


## ஆஷஸ் தொடர்: மார்க் வுட் விலகல்



இங்கிலாந்து அணியின் பிரதான வேகப்பந்து வீச்சாளர்களில் ஒருவராக மார்க் வுட் காயம் காரணமாக ஆஷஸ் தொடரிலிருந்து விலகியுள்ளது அந்த அணிக்கு பெரும் பின்னடைவாக அமைந்துள்ளது. முதல் டெஸ்ட் போட்டியில் விளையாடிய மார்க் வுட் பெரிய அளவில் தாக்கத்தை ஏற்படுத்தவில்லை. முதல் போட்டியில் அவர் 11 ஓவர்கள் மட்டுமே வீசினார். விக்கெட் எதுவும் வீழ்த்தவில்லை. இடது முழங்காலில் ஏற்பட்ட காயம் காரணமாக அவர் இரண்டாவது டெஸ்ட்டிலிருந்து விலகினார். தற்போது, ஆஷஸ் தொடரின் மீதமுள்ள போட்டிகளிலிருந்தும் விலகியுள்ளார். அவருக்குப் பதிலாக மாட் ஃபிஷர் அணியில் சேர்க்கப்பட்டுள்ளார்.

கடந்த 2023 ஆம் ஆண்டு நடைபெற்ற ஆஷஸ் தொடரில் இங்கிலாந்து அணிக்காக மார்க் வுட் அதிக விக்கெட்டுகள் வீழ்த்தியிருந்தார். 5 போட்டிகள் கொண்ட தொடரில் முதல் இரண்டு போட்டிகளில் தோல்வியடைந்து தொடரை இழக்கும் நிலையில் இங்கிலாந்து அணி உள்ளது. இந்த நிலையில், பிரதான பந்துவீச்சாளர் மார்க் வுட் விலகியுள்ளது அந்த அணிக்கு நெருக்கடியை மேலும் அதிகரித்துள்ளது. இங்கிலாந்து - ஆஸ்திரேலியா இடையேயான மூன்றாவது டெஸ்ட் போட்டி அடிலெய்டில் வருகிற டிசம்பர் 17 ஆம் தேதி தொடங்குவது குறிப்பிடத்தக்கது.

## ஹர்திக் பாண்ட்யா காட்டம்



ஹர்திக் காதலியான மகிஹா சர்மா ஒரு ஹோட்டலில் இருந்து வெளிவரும் போது படிக்கட்டில் நடந்து வருவார். கவர்ச்சியான ஆடைகளில் வரும் அவரை கீழ் கோணத்தில் இருந்து தவறான கோணத்தில் வீடியோ எடுத்து சமூக வலைதளங்களில் வைரலாக்கி உள்ளனர். இதனை பார்த்த ஹர்திக் பாண்ட்யா தனது இன்ஸ்டா ஸ்டோரியில் காட்டமாக பேசியுள்ளார். அதில் அவர் கூறியிருப்பதாவது:-

நாங்கள் பொது வாழ்க்கையில் இருப்பதால் மக்கள் எங்களை கவனிப்பார்கள், போட்டோ எடுப்பார்கள் என்பதை நான் அறிவேன். அதை ஏற்கிறேன். ஆனால் தற்போது நடந்த சம்பவம் எல்லை மீறிய ஒன்று. மகிஹா படிக்கட்டுகளில் சாதாரணமாகத் தான் இறங்கி வந்தார். ஆனால், எந்த பெண்ணையும் புகைப்படம் எடுக்கக்கூடாத ஒரு மோசமான கோணத்தில் அவரை படம் பிடித்துள்ளனர். ஒரு தனிப்பட்ட தருணத்தை வைத்து கேவலமான முறையில் பரபரப்பை ஏற்படுத்திவிட்டார்கள். இது யார் எடுத்தது, என்ன தலைப்பு கொடுத்தார்கள் என்பதல்ல பிரச்சனை. இது அடிப்படை மரியாதை சம்பந்தப்பட்டது. பெண்களுக்கு கண்ணியம் உள்ளது என பாண்ட்யா கூறியுள்ளார்.

## 'திரிசூல' வடிவ மின் விளக்குகள்

கிரிக்கெட்டையும் ஹிந்து மதத்தையும் இணைக்கும் வகையில் உத்தரப் பிரதேச மாநிலம் வாரணாசியில் கட்டப்பட்டு வரும் புதிய கிரிக்கெட் திடல் ஒன்று சமூக வலைதளங்களில் கவனம் பெற்றுள்ளது.



உத்தரப் பிரதேசத்தின் பழமை வாய்ந்த ஆன்மிக நகரான காசியில் (வாரணாசி) உள்ள கஞ்சாரி பகுதியில் ரூ. 450 கோடி மதிப்பீட்டில் புதிதாகக் கட்டப்பட்டுவரும் சர்வதேச கிரிக்கெட் திடல், அதன் வழக்கத்திற்கு மாறான தனித்துவமான வடிவமைப்பு மூலம் உலகளவில் கவனத்தை ஈர்த்துள்ளது. 30 ஏக்கர் பரப்பளவில் 30 ஆயிரம் பேர் அமரக்கூடிய வகையில், இந்தாண்டு டிசம்பரில் கட்டி முடிக்கப்பட்டு திறப்பு விழாவிற்குப் பின்னர் அடுத்தாண்டில் சர்வதேச போட்டிகள் நடத்தப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்தத் திடலில் முக்கிய அடையாளமாகவும் உலகளவில் கவனம் பெற்ற விஷயமாக திரிசூல வடிவில் மின்விளக்கு கம்பங்கள் அமைக்கப்பட்டுள்ளன. கிரிக்கெட் திடல்களில் இரவில் போட்டிகளை நடத்துவதற்காக அமைக்கப்படும் மின்விளக்குக் கம்பங்கள், பொதுவாக நேராக அதன் தலைப்பகுதியில் சற்று உள்புறமாக சாய்ந்து இருக்கும். ஆனால், காசியில் அமையவிருக்கும் புதிய திடலில் ஹிந்துக்களின் புனித நகரமாகக் கருதப்படும் காசியின் ஆழமான கலாசாரம் மற்றும் ஆன்மிகத்தைக் குறிக்கும் வகையில் திரிசூல வடிவில் அமைக்கப்பட்டுள்ளது. அதேபோல, முன்னதாக வெளியிடப்பட்ட வாரணாசி கிரிக்கெட் திடலுக்கான 3டி செயல் திட்டத்தில் வட்ட வடிவில், கடவுள் சிவபெருமானின் தலையில் இருக்கும் நிலா பிறை வடிவிலும், உடுக்கை வடிவிலும் அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது.

# சென்னை கலைவாணர் அரங்கில் ஜன.16-ல் பன்னாட்டு புத்தகக்காட்சி
## அமைச்சர் அன்பில் மகேஸ் தகவல்

**சென்னை, டிச. 10-**

சென்னை கலைவாணர் அரங்கில் பன்னாட்டு புத்தக் காட்சி நடைபெறவுள்ளதாக பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் தெரிவித்துள்ளார்.

தென்னிந்திய புத்தக விற்பனையாளர் மற்றும் பதிப்பாளர் சங்கத்தின் (பபாசி) சார்பில் 49-ஆவது சென்னை புத்தகக் கண்காட்சி ஜனவரி 7-ஆம் தேதி முதல் 19-ஆம் தேதி வரை நடைபெற உள்ளது. வழக்கம்போல, நந்தனம் ஒய்எம்சிஏ மைதானத்தில் புத்தகக் காட்சி நடைபெறும் என பதிப்பாளர் சங்க நிர்வாகிகள் தெரிவித்துள்ளனர். நிகழாண்டில் 900-க்கும் மேற்பட்ட அரங்குகளை அமைக்க உள்ளதாகவும், பல்வேறு துறைசார் அறிஞர்கள் பங்கேற்கும் சிறப்பு நிகழ்ச்சிகளை நடத்த திட்டமிடப்பட்டுள்ளது.

இந்த முறை பொங்கல் விடுமுறை நாள்களையொட்டி புத்தகக் காட்சி திட்டமிடப்பட்டுள்ளது. அதன்படி, வரும் ஜனவரி 7-ஆம் தேதி முதல் 19-ஆம் தேதி வரை புத்தகக் காட்சி நடைபெறுகிறது. வார நாள்களில் மதியம் 2 மணி முதல் இரவு 8.30 மணி வரையிலும், வார இறுதி நாள்களில் மற்றும் விடுமுறை நாள்களில் காலை 11 மணி முதல் இரவு 9 மணி வரையிலும் புத்தகக் காட்சியை நடத்த முடிவு செய்யப்பட்டுள்ளது.

இந்த நிலையில், சென்னையில் நடைபெறவுள்ள பன்னாட்டு புத்தகக் காட்சிக் காண இலட்சினையை பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் வெளியிட்டார். தொடர்ந்து அமைச்சர் அன்பில் மகேஸ் பேசுகையில், "சென்னை கலைவாணர் அரங்கில் பன்னாட்டு புத்தகக் காட்சி நடைபெறவுள்ளது. வரும் ஜனவரி, 16,17,18 ஆகிய தேதிகளில் பன்னாட்டு புத்தகக் காட்சி நடைபெறும்" என்று தெரிவித்தார்.

# புதுச்சேரியில் புதிய அரசியல் அத்தியாயம் துவங்கியுள்ளது
## த.வெ.க. தலைவர் விஜய் பதிவு

**சென்னை, டிச.10-**

புதிய அரசியல் அத்தியாயத்தை தொடங்கி உள்ளதாக த.வெ.க. தலைவர் விஜய் பதிவு செய்துள்ளார்.

தமிழக வெற்றிக் கழக தலைவர் விஜய் தனது எக்ஸ் வலைதளத்தில் கூறியிருப்பதாவது:- என் நெஞ்சில் குடியிருக்கும்.. புதுச்சேரி மாநில மக்களுக்கு என் அன்பான வணக்கம். எல்லைகள் கடந்து, மொழியாலும் மனத்தாலும் எப்போதும் இணைந்திருக்கும் நாம், ஒரு புதிய அரசியல் வரலாற்றுக்கான அத்தியாயத்தை புதுச்சேரி மண்ணில் தொடங்கியிருக்கிறோம்.

நிலப் பரப்பிலும், நிர்வாகக் கட்டமைப்பிலும் சிறிய யூனியன் பிரதேசம் என்றாலும், கட்சி பேதமின்றி, வெறுப்புணர்வின்றி எதிர்க்கட்சியான நம் நிகழ்வுக்கு மிகப் பெரிய ஒத்துழைப்பு கொடுத்து நம் பாதுகாப்பிலும், பொதுமக்கள் பாதுகாப்பிலும் ஜனநாயக அரசியல் மாண்போடு புதுச்சேரி அரசு நடந்துகொண்டிருக்கிறது.

அந்த வகையில், புதுச்சேரி அரசுக்கும், முதல்வர் அவர்களுக்கும் உள்துறை அமைச்சர், பொதுப்பணித் துறை அமைச்சர் மற்றும் புதுச்சேரி மாநிலக் காவல் துறைக்கும் நமது மனப்பூர்வமான நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம். எழுச்சிமிக்க நம் இளைஞர் படையினரும் கட்டுக்கோப்பும் பொறுப்பும் மிக்கவர்கள் என்பதை அவதூறாளர்களுக்குப் புரிய வைத்துள்ளார்கள்.

அதிகாரத்தை வைத்துக் கொண்டு, சட்டத்தை வளைத்து, சூழ்ச்சிகள் உட்பட என்னென்னவோ திட்டம் போட்டு நம் அரசியல் பயணத்தை, மக்கள் சந்திப்பை, பிரசார முன்னெடுப்புகளை இந்தக் கபட நாடகத் தி.மு.க. அரசு தடுக்கப் பார்த்தாலும், முடக்க முயன்றாலும், அது அணுவளவும் நடக்காது. கழகத்தின் எதிர்பார்ப்பை, வேண்டுகோள்களை, உத்தரவுகளை மனதார மதித்து, நிகழ்வை வெகு வெற்றிகரமாக நடத்த ஒத்துழைத்த, அதற்குக் காரணமாயிருந்த தமிழகம், புதுச்சேரி மக்களுக்கும் கழகத் தோழர்களுக்கும் மனமார்ந்த நன்றி. இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## புதுச்சேரி பொதுக்கூட்டத்தில் பேசிய
# விஜய் பேச்சை செல்போனில் கேட்ட முதல்வர் ரங்கசாமி..!

**புதுச்சேரி, டிச.10-**



புதுச்சேரியில் நடந்த பொதுக்கூட்டத்தில் விஜய் பேச்சை டீக்கடையில் அமர்ந்து செல்போனில் முதல்வர் ரங்கசாமி ரசித்து கேட்டார்.

தமிழகத்தில் பிரசார வாகனத்தில் சென்று மக்கள் சந்திப்பு நிகழ்ச்சிகளை நடத்தி வந்த தமிழக வெற்றிக் கழக தலைவர் விஜய்க்கு, கரூர் கூட்ட நெரிசல் சம்பவத்தில் 41 பேர் பலியானதற்கு பிறகு அனுமதி மறுக்கப்பட்டது. பொதுக்கூட்டத்திற்கு மட்டுமே அனுமதி அளிக்கப்படும் என்றும் கூறப்பட்டது.

இந்த நிலையில், தமிழகம் போல் அண்டை மாநிலமான புதுச்சேரியிலும் மக்கள் சந்திப்பு நிகழ்ச்சிக்கு அனுமதி மறுக்கப்பட்டது. கடும் கட்டுப்பாடுகளுக்கு மத்தியில் 5 ஆயிரம் பேர் மட்டுமே பங்கேற்கும் வகையில், புதுச்சேரி உப்பளம் மைதானத்தில் வாகனத்தில் நின்று பொதுக்கூட்டம் நடத்த அனுமதி அளிக்கப்பட்டது. அதன்படி, நேற்று புதுச்சேரி உப்பளம் மைதானத்தில் பொதுக்கூட்டம் நடைபெற்றது.

கூட்டத்தில், தமிழக வெற்றிக் கழக தலைவர் விஜய் பேசுகையில், " மத்திய அரசுக்குத்தான் தமிழ்நாடு தனி மாநிலம், புதுச்சேரி தனி யூனியன் பிரதேசம் என்று இருப்பார்கள். நாம் வேறு வேறு கிடையாது. நாம் ஒன்றுதான். எல்லோரும் சொந்தம்தான். நாம் பார்க்கும்போது பாச உணர்வு, அதுமட்டும் இருந்தால் போதும். உலகில் எந்த மூலையில் நம் வகையறா இருந்தாலும் அவர்கள் நம் உயிர்தான்.

பாரதியார் இருந்த மண். பாரதிதாசன் பிறந்த மண்.1977-ல் எம்.ஜி.ஆர். தமிழகத்தில் ஆட்சி அமைத்தார். 1974-ல் புதுச்சேரியில் அவரது ஆட்சி அமைந்தது. அவர்கள்தான் அலெட் செய்தனர். புதுச்சேரி மக்கள் 30 ஆண்டுகளாக தாங்கி பிடிக்கிறீர்கள். தமிழகம் மட்டுமல்லாமல், புதுச்சேரிக்கும் குரல் கொடுப்பேன்.

தமிழக அரசு போல் புதுச்சேரி அரசு கிடையாது. நல்ல பாதுகாப்பு கொடுத்துள்ளனர். புதுச்சேரி முதல்-மந்திரிக்கு நன்றி. இதைப் பார்த்து தமிழக முதல்-அமைச்சர் கற்றுக்கொள்ள வேண்டும் என்று கூறினார். இதனை ஆரோவில் பகுதியில் டீக்கடையில் அமர்ந்து கொண்டிருந்த புதுச்சேரி மாநில முதல்வர் ரங்கசாமி தனது மொபைல் போனில் கேட்டு ரசித்தார் இந்த வீடியோ தற்போது இணையத்தில் வைரல் ஆகி வருகிறது.

## திருப்பரங்குன்றம் தீப வழக்கு:
# தலைமைச் செயலாளர், டி.ஜி.பி. ஆஜராக மதுரை கிளை உத்தரவு

**மதுரை, டிச. 10-**

திருப்பரங்குன்றம் மலை மீது, தீபத் தூணில் தீபம் ஏற்ற பிறப்பித்த உத்தரவை நிறைவேற்றாதது ஏன் என்பது குறித்து தமிழக தலைமைச் செயலரும், டி.ஜி.பி.யும் ஆஜராக உயர் நீதிமன்ற மதுரைக் கிளை உத்தரவிட்டுள்ளது.

கடந்த டிசம்பர் 1 ஆம் தேதி, திருப்பரங்குன்றம் உச்சிப் பிள்ளையார் மண்டபத்துக்கு அருகே உள்ள வழக்கமான விளக்கேற்றும் நிகழ்வுடன் சேர்த்து, அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி கோவில் தீபத்தூணில் விளக்கேற்ற வேண்டியது கோவில் நிர்வாகத்தின் கடமை என்று சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளை நீதிபதி ஜி.ஆர். சுவாமிநாதன் அமர்வு உத்தரவிட்டது.

ஆனால், கார்த்திகை தீபம் அன்று, அங்கு தீபம் ஏற்ற காவல்துறை அனுமதி அளிக்கவில்லை.

இந்த நிலையில், மதுரைக் கிளையில், நீதிமன்ற அவமதிப்பு தொடரக் கோரிய மனு மீது நேற்று முற்பகலில் விசாரணை நடந்த போது, தீபம் ஏற்றுவதற்கான காலம் முடிந்துவிட்டதால், அவசரமாக விசாரிக்கத் தேவையில்லை. மலையும் எண்ணெய், திரி ஆகியவை எங்கும் போய்விடாது. நீதிபதி உத்தரவு சரியா தவறா என்று உறுதி செய்யவே மேல்முறையீடு செய்யப்பட்டுள்ளது என்று தமிழக அரசு தரப்பில் வாதம் முன் வக்கப்பட்டது. ஆனால், மனுதாரர் தரப்பில், வழக்கை இழுத்தடிக்கவே முயற்சிக்கின்றனர். இந்த உத்தரவுக்கு இடைக்கால உத்தரவுகள் எதுவும் பிறப்பிக்கப்படவில்லை. எனவே, உத்தரவு நடைமுறையில்தான் உள்ளது என்று வாதம் முன்வைக்கப்பட்டது.


கோவில்களில் இதைச் செய்யக் கூடாது, இதைச் செய்ய வேண்டும் என யாரும் சொல்ல முடியாது. நீதிமன்றம் கூட சொல்ல முடியாது. தேவஸ்தானமே முடிவு செய்ய வேண்டும். பிரச்னை வந்தால் நீதிமன்றத்தைக் காரணம் காட்ட முடியாது. அரசுதான் பொறுப்பேற்க வேண்டும். சட்டம் ஒழுங்கை கருத்தில் கொள்ள வேண்டும் என்று அரசு தரப்பில் வாதம் முன்வைக்கப்பட்டது.

இதனைக் கேட்ட நீதிபதி ஜி.ஆர். சுவாமிநாதன், திருப்பரங்குன்றம் வழக்கு, தீபம் ஏற்றும் உரிமை சார்ந்தது மட்டுமல்ல, சொத்து உரிமை தொடர்பானதும் கூட. அரசின் கோரிக்கையை ஏற்று வழக்கை ஒத்திவைக்கிறேன் என்று தெரிவித்தார்.

மேலும் தீபம் ஏற்ற நடவடிக்கை எடுக்காதது ஏன் என்று தமிழக தலைமைச் செயலரும், டி.ஜி.பி.யும் காணொலி காட்சி வாயிலாக டிச. 17-ம் தேதி விசாரணைக்கு ஆஜராகி விளக்கமளிக்க உத்தரவிட்டுள்ளார்.

# சினிமா CINI செய்திகள்

## ஜி.வி.பிரகாஷ் நடிக்கும் 'ஹேப்பி ராஜ்'



Beyond Pictures தயாரிப்பாளர் ஜெய்வர்தா தயாரிப்பில், மரியா இளஞ்செழியன் இயக்கத்தில் உருவாகும் ஹேப்பி ராஜ் படத்தில் ஜி.வி. பிரகாஷ் நாயனாக நடிக்கிறார். நாயகியாக ஸ்ரீ கவுரி பிரியா நடிக்கிறார். படத்தின் தலைப்பு பற்றி இயக்குனர் மரியா இளஞ்செழியன் கூறுகையில், 'ஹேப்பி' என்று பெயர், கதையின் மைய உணர்வை நினைவூட்டும் ஒரு குறியீடாகும்.

முழுக் கதையிலும் 'ஹேப்பி' என்ற வார்த்தை நூறுக்கும் மேற்பட்ட முறை ஒலிக்கும் வகையில் கதை உருவாக்கப்பட்டுள்ளது என்றார். இப்படத்தில் நீண்ட இடைவெளிக்குப் பிறகு நடிகர் அப்பாஸ் நடிக்கிறார். மேலும் ஜார்ஜ் மரியம், பிரார்த்தனா, அதிர்ச்சி அருண், மதுரை முத்து, சோஃபா பாய் ரசூல் உள்ளிட்ட பலர் முக்கியமான கதாபாத்திரங்களில் நடிக்கின்றனர்.


## 'ரெட் லேபில்' படத்தின் இசை வெளியீட்டு விழா



ரெவ்ஜென் பிலிம் பேக்டரி சார்பில் லெனின் தயாரிப்பு மற்றும் நடிப்பில் கே .ஆர். வினோத் இயக்கத்தில் உருவாகியுள்ள படம் ரெட் லேபில், இப்படத்தஉக்கு கதை பொன்.பார்த்திபன், ஒளிப்பதிவு சதீஷ் மெய்யப்பன், இசை கைலாஷ் மேனன், நாயகியாக அஸ்மின் நடிக்கும் இப்படத்தில் இயக்குநர் ஆர்.வி.உதயகுமார், முனிஷ் காந்த், தருண், கெவின், கார் மேகம் சசி, அனுஷா ஆகியோர் நடித்துள்ளனர். வரும் பிப்ரவரி மாதம் வெளியாகவுள்ள நிலையில் இப்படத்தின் முன்னோட்டம் மற்றும் பாடல்கள் வெளியீட்டு விழா சமீபத்தில் நடைபெற்றது.

இந்த விழாவில் ஆர்.வி.உதயகுமார், பேரரசு, எழில் உள்ளிட்டோர் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்து கொண்டனர். கதாநாயகனும் தயாரிப்பாளருமான லெனின் பேசும் போது, இயக்குநருடன் சில முரண்பாடுகள் இருந்தாலும் படத்தை எடுத்து முடிக்க வேண்டும் என்று பொறுமை காட்டினார் .அது எனக்கு ஆச்சரியமாக இருந்தது .சொன்னது போல் படத்தை எடுத்து முடித்து விட்டார் .இந்தப் படம் நிச்சயமாக திருப்தி தரும் படமாக இருக்கும். என்றார். இப்படத்தின் மூலம் ஸ்ரீதர் ராஜ் பி.ஆர்.ஓ.வாக அறிமுகாகி இருக்கிறார்.

## நாளை மறுநாள் வெளியாகும் 'கார்த்தியின் வா வாத்தியார்'



ஸ்டுடியோ கிரீன் கே. ஈ. ஞானவேல் ராஜா தயாரிப்பில், கார்த்தி நடிப்பில், நலன் குமாரசாமி இயக்கத்தில் உருவாகியுள்ள திரைப்படம் "வா வாத்தியார்". இப்படத்தில் கீர்த்தி ஷெட்டி நாயகியாக நடித்துள்ளார். டிசம்பர் 12 ஆம் தேதி திரைக்கு வரவுள்ள நிலையில், படத்தின் முன் வெளியீட்டு நிகழ்ச்சி, சமீபத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வினில், இயக்குநர் நலன் குமாரசாமி பேசுகையில், இந்தப்படம் எடுக்க வாய்ப்பு தந்த எம் ஜி ஆருக்கு கோடி நன்றி.

கார்த்தி இப்படத்தில் மிக அழகாக கதாப்பாத்திரத்தில் பொருந்திப் போய்விட்டார். எம் ஜி ஆருக்கு ஒரு அர்ப்பணிப்பு தான் இந்தப்படம் என்றார்.

பின்னர் நாயகன் கார்த்தி பேசுகையில், இந்தப்படத்தில் பனியாற்றும் போது தான் எம் ஜி ஆரின் விஸ்வரூபம் எனக்கு புரிந்தது.

இயக்குனர் நலன் எம் ஜி ஆர் பற்றி ஆராய்ச்சி செய்து இப்படத்தை எடுத்துள்ளார். இந்தப்படம் எல்லோருக்கும் பிடிக்கும் என்றார்

## 'புத்தம் புது நேரம்' இசை வெளியீட்டு விழா



சக்தி பீடம் ப்ரொடக்ஷன்ஸ் & *Face Guru Institute of Legends movie media* தயாரிப்பில் பி.சந்திரகுமார் எழுதி இயக்கியிருக்கும் திரைப்படம் "புத்தம் புது நேரம்". விவசாயிகளின் நலன் பற்றி பேசும் இந்த படத்தின் இசை வெளியீட்டு விழா சமீபத்தில் நடைபெற்றது. இந்த நிகழ்வினில் இயக்குனர் சந்திரகுமார் பேசும்போது, இந்த படத்தில் தயாரிப்பாளர்கள் என யாரும் இல்லை, எல்லோரும் முடிந்த அளவு பணத்தை போட்டு படம் எடுத்திருக்கிறோம்.


இந்த படத்தின் மூலம் லட்சங்கள், கோடிகள் சம்பாதிக்க வேண்டும் என்ற நோக்கம் இல்லை.

இந்த படத்துக்கு உங்கள் ஆதரவை தர வேண்டும் எனக் கேட்டுக் கொள்கிறேன் என்றார். பின்னர் செந்தில் பேசும்போது, புத்தம் புது நேரம் ஒரு படம் என்பதை விட புத்தம் புது குடும்பம் என்று தான் சொல்ல வேண்டும். இந்த படத்தில் ஒவ்வொருவரும் ஒவ்வொரு வேலையை எடுத்து செய்தோம். இந்த குடும்பம் 2026-ல் ஐந்து திரைப்படங்களை எடுக்கப் போகிறோம் என்பதை சக்தி பீடம் சார்பில் பெருமையுடன் அறிவித்துக் கொள்கிறேன்" என்றார். படத்துக்கு கே.பரஞ்சோதி இசையமைக்க, முரளி கிருஷ்ணா ஒளிப்பதிவு செய்திருக்கிறார்.



**இ-பைலிங் முறையை ரத்து செய்யக்கோரி மத்திய அரசை கண்டித்து மதுரை மாவட்ட நீதிமன்றம் முன்பு வழக்கறிஞர்கள் சங்க தலைவர் பாஸ்கரன் தலைமையில் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டனர். அருகில் சங்க செயலாளர் மோகன் குமார், துணைத் தலைவர்கள் வீர பெருமாள் சிவானந்தம், துணைச் செயலாளர்கள் பாலமுருகன், கார்த்திகேயன், பொதுக்குழு உறுப்பினர்கள் முத்து கண்ணன், அகராதி, சிவபாண்டி, கற்பவல்லி, சாகுல்ஹமீது, நூலகர் சுரேஷ் மற்றும் வழக்கறிஞர்கள் கலந்து கொண்டனர்.**

## வரும் 19-ம் தேதி வெளியாகும் 'அவதார்-ஃபயர் அண்ட் ஆஷ்'




இயக்குநர் ஜேம்ஸ் கேமரூனின் 'அவதார்: ஃபயர் அண்ட் ஆஷ்' திரைப்படம் டிசம்பர் 19 ஆம் தேதியன்று வெளியாக உள்ளது. இந்தப் படத்திற்கான ஐமேக்ஸ் டிக்கெட் முன்பதிவுகள் இப்போதே தொடங்கிவிட்டது.*PVR INOX* உள்ளிட்ட திரையரங்குகள் செயலிகள், வலைதளங்கள் மற்றும் மார்க்கெட்டிங் சேனல்களில் டிஜிட்டல் ஒருங்கிணைப்புகளுடன் அவதார்-தீம் பிராண்டிங்கை அறிமுகப்படுத்தியுள்ளன.

'அவதார்' திரைப்படத்தின் இந்த அத்தியாயத்தில் பண்டோரா உலகின் கலாச்சார மற்றும் உணர்ச்சி நிலப்பரப்பை விரிவுபடுத்தும் ஃபயர் குலத்தின் தலைவரான வராங்கை அறிமுகப்படுத்துகிறது. இப்படம் ஆங்கிலம், இந்தி, தமிழ், தெலுங்கு, மலையாளம் கன்னடம் என 6 இந்திய மொழிகளில் வெளியாகிறது

## ரீ ரிலிசாகும் 'படையப்பா'




சூப்பர்ஸ்டார் ரஜினிகாந்தின் 50 வருட பொன்விழாவை கொண்டாடும் வகையில், அவரது பிறந்த நாளான டிசம்பர் 12 ஆம் தேதியன்று படையப்பா படம் மீண்டும் திரைக்கு வருகிறது. 1999 ஆண்டில் கே எஸ் ரவிக்குமார் இயக்கத்தில், ஏ ஆர் ரஹ்மான் இசையில் உருவான "படையப்பா" படத்தில் சூப்பர்ஸ்டார் ரஜினிகாந்துடன், சிவாஜிகணேசன், சௌந்தர்யா, ரம்யா கிருஷ்ணன், செந்தில், மணிவண்ணன், அப்பாஸ் என பெரும் நட்சத்திர பட்டாளமே இணைந்து நடித்திருந்தனர்.

அருணாச்சலா சினி கிரியேஷன்ஸ் சார்பில் கே. சத்திய நாராயணா, எம். வி கிருஷ்ணா ராவ் மற்றும் கே விட்டல் பிரசாத் ஆகியோர் தயாரித்திருந்தனர். இணை தயாரிப்பாளராக பி. எல். தேனப்பன் பணியாற்றினார். 1999 ஆம் ஆண்டு ஏப்ரலில் 200 திரையரங்குகளில் வெளியாகி 150 நாட்களைக் கடந்து, பெரும் வசூலைக் குவித்த இப்படம் தற்போது 4K தரத்தில் டிஜிட்டலில் மாற்றம் செய்யப்பட்டு, நவீன ஒலி அமைப்புடன் டிசம்பர் 12 ஆம் தேதி உலகமெங்கும் வெளியாக உள்ளது.

## வாராஹி அம்மன் கோவிலில் தேய்பிறை பஞ்சமி பூஜை



**நத்தம், டிச. 10-**

திண்டுக்கல் மாவட்டம் நத்தம் கோவில்பட்டி அக்ரஹாரத்தில் பாமாருக்மணி வேணு ராஜகோபாலசுவாமி கோவிலில் உள்பிரகாரத்தில் அமைந்துள்ள வாராஹி அம்மன் கோவிலில் தேய்பிறை பஞ்சமியை முன்னிட்டு சிறப்பு பூஜைகள் நடந்தது. இதையொட்டி கோவிலில் யாகசாலை அமைக்கப்பட்டு வாராஹி அம்மனுக்கு திருமஞ்சனம், பால், பழம், சந்தனம், தயிர் உள்ளிட்ட 16 வகையான பொருட்களால் திரவிய அபிஷேகமும்,சிறப்பு அலங்காரமும், தீபாராதனைகளும் நடந்தது.இதில் சுற்றுவட்டார பகுதிகளை சேர்ந்த ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டு அம்மனை தரிசனம் செய்தனர்.

தொடர்ந்து அவர்களுக்கு பிரசாதம் வழங்கபட்டது. இதைப்போலவே குட்டூர் அண்ணாமலையார் கோவிலில் அமைந்துள்ள மகாவாராஹி அம்மன் கோவிலிலும், அசோக் நகர் பகவதி அம்மன் கோவிலில் உள்ள வாராஹி அம்மன் கோவிலிலும் தேய்பிறை பஞ்சமியை முன்னிட்டு சிறப்பு அபிஷேகங்களும், தீபாராதனைகளும் நடந்தது. இங்கும் பக்தர்கள் கலந்து கொண்டு தரிசனம் செய்தனர்.



**மதுரை திருக்குறள் பேரவை விழாவிற்கு வருகை தந்த தவத்திரு குன்றக்குடி ஆதீனம் பொன்னம்பல அடிகளார் மதுரையின் அட்சய பாத்திரம் ட்ரஸ்ட் நிறுவனர் நெல்லை பாலுவிற்கு ஆசி வழங்கினார்.**

## மேலமடை ஊராட்சிக்கு சமூக நல்லிணக்க ஊராட்சி விருது: முதல்வர் வட்டார வளர்ச்சி அலுவலருக்கு வழங்கினார்



**ராமநாதபுரம், டிச. 10-**

ராமநாதபுரம் மாவட்டம் திருப்புல்லாணி ஊராட்சி ஒன்றியம் மேலமடை ஊராட்சிக்கு சமூக நல்லிணக்க ஊராட்சி விருது தேர்வு செய்யப்பட்ட நிலையில் வட்டார வளர்ச்சி அலுவலர் ராஜேஸ்வரியிடம் முதலமைச்சர் விருது மற்றும் ரூ.1 கோடி நிதியை வழங்கினார்.

தமிழக அரசின் சார்பில் சமூக ஒற்றுமையுடன் விளங்கக்கூடிய ஊராட்சிக்கு சமூக நல்லிணக்க ஊராட்சி விருது மற்றும் ரூ.1 கோடி நிதி வழங்கப்பட்டு வருகிறது. அதன்படி ராமநாதபுரம் மாவட்டம் திருப்புல்லாணி யூனியன் மேலமடை ஊராட்சி சமூக நல்லிணக்க விருதுக்கு தேர்வு செய்யப்பட்டது. தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் மேலமடை ஊராட்சிக்கு சமூக நல்லிணக்க ஊராட்சி விருது மற்றும் ரூ.1 கோடி நிதிக்கான காசோலையை வழங்கினார்.

திருப்புல்லாணி யூனியன் கிராம ஊராட்சி வட்டார வளர்ச்சி அலுவலர் ராஜேஸ்வரி மேற்கண்ட விருது மற்றும் நிதியை பெற்றுக் கொண்டார். முதல் அமைச்சரிடம் நிதி மற்றும் விருதினை பெற்று திரும்பிய வட்டார வளர்ச்சி அலுவலர் ராஜேஸ்வரிக்கு மாவட்ட அலுவலர்கள், பொதுமக்கள் சிறப்பான வரவேற்பு அளித்து பாராட்டினர். மேலும் வட்டார வளர்ச்சி அலுவலர் ராஜேஸ்வரி ராமநாதபுரம் சட்டமன்ற உறுப்பினர் காதர்பாட்சா முத்துராமலிங்கத்தை நேரில் சந்தித்து வாழ்த்து பெற்றார்.

## உதயநிதி அரசியலுக்கு வந்த பின்னர் அனைத்து தேர்தல்களிலும் தி.மு.க வெற்றி பெற்று வருகிறது

### திருமங்கலம் பொதுக்கூட்டத்தில் ஆர்.எஸ்.பாரதி பேச்சு



**திருமங்கலம்,டிச.10-**

தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அரசியலுக்கு வந்த பின்னர் அனைத்து தேர்தல்களிலும் தி.மு.க வெற்றி பெற்று வருகிறது என திருமங்கலம் கிழக்கு ஒன்றியம் கப்பலூரில் நடைபெற்ற இளைஞர்கள் எழுச்சி நாள் பொதுக் கூட்டத்தில் கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி பேசினார்.

மதுரை தெற்கு மாவட்ட தி.மு.க சார்பில் தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பிறந்த நாளை முன்னிட்டு இளைஞர் எழுச்சி நாள் பொதுக்கூட்டம் திருமங்கலம் கிழக்கு ஒன்றியம் கப்பலூரில் நேற்று மாலை சிறப்பாக நடைபெற்றது.

ஆயிரக்கணக் கானோர் கலந்து கொண்ட இக் கூட்டத்திற்கு மதுரை தெற்கு மாவட்ட கழக செயலாளர் சேடபட்டி மு.மணிமாறன் தலைமையேற்று உரையாற்றினார். திருமங்கலம் கிழக்கு ஒன்றிய செயலாளர் தங்கப்பாண்டி வரவேற்றார். தமிழக வணிகவரி மற்றும் பத்திர பதிவுத் துறை அமைச்சர் பி.மூர்த்தி இக்கூட்டத்தில் பங்கேற்று சிறப்பித்தார்.இக் கூட்டத்தில் கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி சிறப்பாளராக கலந்து கொண்டு சிறப்புரை யாற்றினார்.அப்போது அவர் பேசியதாவது: துணை முதல்வர் உதயநிதி அரசியலில் காலடி எடுத்து வைத்த நாள் முதல் அத்தனை தேர்தல்களிலும் திமுக வெற்றி பெற்று வருகிறது. திமுக ஒன்று தான் உறுதியான அரசியல் செய்கிறது. இந்தியாவே உற்று நோக்கும் வகையில் முதல்வர் பல்வேறு நலத் திட்டங்களை செயல்படுத்தி வருகிறார். அயோத்தி ராமர் கோவில் பிரச்சனை முன்வைத்து பாஜக வெற்றி பெற்றது. ஆனால் அயோத்தியில் பாஜக தோற்று விட்டது.வரும் தமிழக சட்டமன்ற தேர்தலில் பாஜக அடியோடு தோற்பது உறுதி. 24 மணி நேரத்தில் திருப்பரங்குன்றத்தில் இயல்பு நிலை திரும்பச் செய்தவர் முதல்வர் ஸ்டாலின். திமுக சட்ட ரீதியாக போராடி வெற்றி பெறும் இயக்கம். எஸ்ஐஆர் வாக்கு திருட்டு தமிழகத்தில் செல்லாது.2026 சட்டமன்ற தேர்தலில் திமுக வெற்றி பெறுவது நிச்சயம் என்று பேசினார்.

இந்த பொதுக்கூட்டத்தில் திமுக சட்டத்துறை இணைச் செயலாளர் சூர்யா வெற்றி கொண்டான், தலைமை செயற்குழு உறுப்பினர் ஏர்போர்ட் பாண்டியன்,இளமகிழன். முன்னாள் எம்.எல்.ஏ முத்துராமலிங்கம், லதா அதியமான், மாவட்ட பொருளாளர் கொம்பாடி தங்கம், துணை செயலாளர் சிவனாண்டி, மாநில விவசாய அணி நிர்வாகி கொடி சந்திரசேகர், தொகுதி பார்வையாளர் டிஸ்கோ அலாவுதீன்,பொதுக்குழு ஆதிமூலம்,சிவமுருகன், ஒன்றிய செயலாளர்கள் மதன்குமார், நாகராஜன், ராமமூர்த்தி,ஆலம்பட்டி சண்முகம், பாண்டியன், தனசேகரன், தனபாண்டியன், திருமங்கலம் நகர் செயலாளர் ஸ்ரீதர், நகர்மன்ற தலைவர் ரம்யா முத்துக்குமார், துணை தலைவர் ஆதவன் அதியமான், பேரையூர் பேரூர் செயலாளர் வருசை முகமது, மாவட்ட அணி அமைப்பாளர்கள் மீனவரணி ஆலங்குளம் செல்வம், கிருத்திகா தங்கப்பாண்டி, பரமசிவம்,ஜெயச்சந்திரன், சிவனேசன், ராஜசேகர், மாவட்ட கவுன்சிலர் (மு) ஜெயராஜ், மற்றும் கட்சி நிர்வாகிகள் வக்கீல் கவிஸ்ரீ தினேஷ் காளிதாஸ்,சுரேஷ், ஜெகதீஷ், சாதிக்,வடக்கம்பட்டி ராதாகிருஷ்ணன் முன்னாள் நகர்மன்ற தலைவர் நிரஞ்சன்,நகர் கழக நிர்வாகிகள் சின்னச்சாமி, செல்வம், துரைமருது, அழகுமலை, சுவர்ணா வெற்றி, காண்டை முருகன், தங்கப்பாண்டி, வக்கீல் செந்தில்நாதன், ரஞ்சித்குமார், மாரியப்பன், சுப்புராஜ், கௌதம் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர். நிறைவாக மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் வி.விமல் நன்றி தெரிவித்தார்.

## மேலூரில் ஓய்வு பெற்ற அரசு அலுவலர்கள் சங்கம் சார்பில் இலவச மருத்துவ முகாம்



**மேலூர், டிச. 10-**

மேலூர் ஓய்வு பெற்ற அரசு அலுவலர்கள் சங்கம் மற்றும் மதுரை வாசன் கண் மருத்துவமனை, மேலூர் ராவ் மருத்துவமனை இணைந்து நடத்திய சிறப்பு கண் பரிசோதனை மற்றும் பொது மருத்துவ முகாம் மேலூர் மூவேந்தர் பண்பாட்டுக் கழகத்தில் நேற்று 9-ம் தேதி நடைபெற்றது.

சங்க தலைவர் தர்மலிங்கம், சங்க செயலாளர் பெரியரசன் என்ற சீனிவாசன், பொருளாளர் வீரபாண்டி ஆகியோர் வரவேற்புரையாற்றினர். மேலூர் வட்டாட்சியர் செந்தாமரை, மேலூர் சமூக பாதுகாப்பு திட்ட தாசில்தார் லயனல் ராஜ்குமார் ஆகியோர் முன்னிலை வகித்தனர். மேலூர் கருவூல அலுவலர் கே.குமரன், சார் நிலை கருவூலர் சிவக்குமார், மேலூர் பெரியாறு ஒருபோக பாசன விவசாய சங்க தலைவர் எம்.முருகன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொண்டனர்.

மதுரை வாஸன் கண் மருத்துவமனையின் தலைமை மருத்துவ இயக்குநர் டாக்டர். கமல்பாபு மற்றும் டாக்டர் ரம்யா கண் சம்பந்தப்பட்டமான நோய்களுக்கு ஆலோசனைகளை வழங்கினார். மேலூர் ராவ் மருத்துவமனையின் டாக்டர் பரத் கிருஷ்ணன் பொதுமக்களுக்கு பொதுமருத்துவம் சம்பந்தப்பட்ட மருத்துவ ஆலோசனைகளை வழங்கினார்.

முகாமில் இணைச்செயலாளர்கள் சிவஞானம், வேலு, மலையாளம், மற்றும் செயற்குழு உறுப்பினர்கள், முன்னாள் தலைவர் தவமணி, செயலாளர் சேகர் ஸ்ரீதர், மற்றும் ஆண்டிச்சாமி, ஜீவானந்தம், சந்திரன், பரஞ்ஜோதி, சேட் பாபு, பரந்தாமன், சுப்பையா, வெங்கட்ராமன், சுப்பிரமணியன், சாகுல் ஹமீது, சங்க உறுப்பினர்கள், பொதுமக்கள் உட்பட நூற்றுக்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர். துணை தலைவர் சலீம் நன்றியுரை கூறினார்.



துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் சென்னை தனியார் வணிக வளாகத்தில் 12 நாடுகள் பங்குபெறும் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் 2025 ஸ்குவாஷ் உலக கோப்பை சென்னை, போட்டிக்கான கோப்பையை அறிமுகம் செய்து தொடங்கி வைத்தார். இந்நிகழ்வில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை கூடுதல் தலைமைச்செயலாளர் அதுல்யா மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் மேகநாத ரெட்டி, உலக ஸ்குவாஷ் சம்மேளனத் தலைவர் செனா ஊல்ட்ரிட்ஜ், இந்திய ஸ்குவாஷ் ராக்கெட் சம்மேளனத் தலைவர் அனில் வாத்வா, தமிழ்நாடு ஸ்குவாஷ் ராக்கெட் சங்கத்தின் புரவலர் ராமச்சந்திரன், ஐரோப்பிய ஸ்குவாஷ் சம்மேளனத் தலைவர் தாமஸ் ட்ரொட்சன் மற்றும் ஸ்குவாஷ் விளையாட்டு வீரர், வீராங்கனைகள் பங்கேற்றனர்.



அ.தி.மு.க. பொதுச்செயலாளரும், தமிழக சட்டமன்ற எதிர்க்கட்சித்தலைவருமான எடப்பாடி கே. பழனிசாமியை செங்கோட்டையனின் மூத்த சகோதரர் காளியப்பனின் மகனும், வடக்கு மாவட்ட சுற்றுச்சூழல் அணி தி.மு.க. அமைப்பாளருமான செல்வன் அக்கட்சியில் விலகி தன்னை அ.தி.மு.க.வில் இணைத்துக்கொண்டார். மேலும் அவருடன், குள்ளம்பாளையம் கிராமம், கோபி செட்டிப்பாளையம் தொகுதி உள்ளிட்ட பல்வேறு பகுதிகளை சேர்ந்த 50-க்கும் மேற்பட்டோர் நேரில் சந்தித்து தங்களை கட்சியில் இணைத்துக் கொண்டனர்.

## பரபரப்பான அரசியல் சூழ்நிலையில்

# அ.தி.மு.க. பொதுக்குழு இன்று கூடுகிறது

சென்னை, டிச. 10-

பரபரப்பான அரசியல் சூழ்நிலையில் அவைத் தலைவர் தமிழ்மகன் உசேன் தலைமை அ.தி.மு.க. பொதுக்குழு இன்று கூடுகிறது. இதில் பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி பங்கேற்று சிறப்புரை ஆற்ற இருக்கிறார்.

தமிழகத்தில் அடுத்த ஆண்டு ஏப்ரல் மாதம் சட்டசபை தேர்தல் நடைபெற உள்ளது. தேர்தலுக்கு இன்னும் 4 மாதங்களே இருக்கும் பரபரப்பான சூழ்நிலையில், அ.தி.மு.க. பொதுக்குழு இன்று (புதன்கிழமை) சென்னையில் கூட இருக்கிறது.

வானகரம் ஸ்ரீவாரு வெங்கடாஜலபதி பேலஸ் திருமண மண்டபத்தில் நடைபெறும் இந்த பொதுக்குழு கூட்டத்திற்கு கட்சியின் அவைத் தலைவர் தமிழ்மகன் உசேன் தலைமை தாங்குகிறார். பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி சிறப்புரை ஆற்ற இருக்கிறார். கூட்டத்தில் பொதுக்குழு உறுப்பினர்கள் 3 ஆயிரம் பேர் உள்பட மாநில நிர்வாகிகள், சிறப்பு அழைப்பாளர்கள் என மொத்தம் 5 ஆயிரம் பேர் கலந்து கொள்ள இருக்கிறார்கள்.

நடைபெற உள்ள சட்டசபை தேர்தலில் அ.தி.மு.க., ஏற்கனவே பா.ஜ.க.வுடன் கூட்டணியை உறுதி செய்துள்ளது. மேலும், நடிகர் விஜய்யின் தமிழக வெற்றிக் கழகத்தையும் கூட்டணிக்குள் இழுக்க வேண்டும் என்றும் ஆர்வம் காட்டிவருகிறது. ஆனால், தமிழக வெற்றிக் கழகம் கொள்கை எதிரியாக கருதும் பா.ஜ.க., அ.தி.மு.க. கூட்டணியில் இருப்பதால் அதற்கு வாய்ப்பு இல்லை என்றே தெரிகிறது. அதே நேரத்தில், பா.ஜ.க.வின் நெடுநாள் வலியுறுத்தலான, பிரிந்து கிடக்கும் அ.தி.மு.க.வை ஒன்றிணைப்பது குறித்து பொதுக்குழுவில் முடிவு செய்யப்படுமா? என்ற எதிர்பார்ப்பும் நிலவுகிறது.

ஏற்கனவே, அ.தி.மு.க.வில் இருந்து நீக்கப்பட்டுள்ள ஓ.பன்னீர்செல்வம், சசிகலா, டி.டி.வி.தினகரனை மீண்டும் சேர்க்க வேண்டும் என்று கோரிக்கை வைத்த முன்னாள் அமைச்சர் செங்கோட்டையன், அ.தி.மு.க.வில் இருந்து அதிரடியாக நீக்கப்பட்டார். அவரும் தற்போது விஜய் தலைமையிலான தமிழக வெற்றிக் கழகத்தில் பயணிக்கத் தொடங்கியுள்ளார். இந்த நிலையில், அவரது சொந்த தொகுதியான கோபிசெட்டிப்பாளையத்தில் தனது பலத்தை நிரூபிப்பதற்காக சமீபத்தில் எடப்பாடி பழனிசாமி பிரமாண்ட கூட்டத்தை நடத்திக் காட்டினார்.

இதற்கு மத்தியில், ஓ.பன்னீர்செல்வம் டெல்லி சென்று மத்திய அமைச்சர் அமித்ஷாவையும் சந்தித்து பேசிவிட்டு திரும்பியிருக்கிறார். ஏற்கனவே, அவர் அ.தி.மு.க. ஒருங்கிணைப்பு குறித்து வரும் 18-ந் தேதிக்குள் நல்ல முடிவு எடுக்க வேண்டும் என்று எடப்பாடி பழனிசாமிக்கு கெடு விதித்திருந்தார். எனவே, இதுகுறித்தும் அ.தி.மு.க. பொதுக்குழுவில் விவாதிக்கப்படுமா? என்ற கேள்வி எழுந்துள்ளது. அ.தி.மு.க. ஒன்றிணைந்து வலுவாக இருந்தால்தான் தேர்தலில் தி.மு.க.வை வீழ்த்த முடியும் என்று, கூட்டணியில் அங்கம் வகிக்கும் பா.ஜ.க. கருதுகிறது. அதையே எடப்பாடி பழனிசாமியிடமும் வலியுறுத்தி வருகிறது. ஆனால், அவர்தான் அதற்கு செவி சாய்க்காமல் இருந்து வருகிறார்.

அதே நேரத்தில், கெடு விதித்த கையோடு ஓ.பன்னீர்செல்வமும் டெல்லி சென்று திரும்பியிருப்பதால், அவரை மட்டுமாவது அ.தி.மு.க.வில் இணைக்கும் முடிவு எடுக்கப்படும் என்று அவருடைய ஆதரவாளர்கள் நம்புகின்றனர். எனவே, பரபரப்பான அரசியல் சூழ்நிலையில் அ.தி.மு.க. பொதுக்குழு இன்று (புதன்கிழமை) கூட இருக்கிறது.



மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் நேற்று தேனாம்பேட்டையில் உள்ள பொது சுகாதாரம் மற்றும் மருந்துத்துறை இயக்ககத்தில், 405 பகுதி சுகாதார செவிலியர்கள் மற்றும் 117 வட்டார சுகாதார மேற்பார்வையாளர்களுக்கு பதவி உயர்வு ஆணைகளை வழங்கினார். இந்நிகழ்வில் துறை சார்ந்த அரசு உயர் அலுவலர்கள் உடன் உள்ளனர்.



தலைமைச் செயலகத்தில் போக்குவரத்து மற்றும் மின்சாரத்துறை அமைச்சர் சிவசங்கர், அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகத்தில், பணிக்காலத்தில் மறைந்த பணியாளிரின் வாரிசுதாரர்களுக்கு கருணை அடிப்படையில் பணிநியமன ஆணைகளை வழங்கினார். இந்நிகழ்வில், துறைசார்ந்த அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

## 4 ஆயிரம் ரூபாய் கோடி மதிப்பில்

# தமிழக அரசு - ஜியோ ஹாட்ஸ்டார் ஒப்பந்தம்

சென்னை, டிச. 10-

தமிழ்நாடு அரசுடன் இணைந்து திரைப்படங்கள், இணையத்தொடர், உள்ளடக்கம் போன்றவற்றை உருவாக்க தமிழ்நாடு அரசுடன் ஜியோ ஹாட்ஸ்டார் ரூ.4 ஆயிரம் கோடி மதிப்பிலான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளது.

தமிழ்நாட்டில் முதன்முறையாக ஒரு பெரிய திரைப்படத்தை நேரடியாக டிஜிட்டல் தளத்தில் வெளியிடும் முன்னோடி முயற்சியை கமல்ஹாசன் 2012 ஆம் ஆண்டே மேற்கொண்டார்.

சென்னையில் ஜியோ ஹாட்ஸ்டார் சவுத் அன்பவுண்ட் நிகழ்வு நடைபெற்றது. தமிழ்நாட்டின் திரைப்பட மற்றும் ஊடகக் கல்வி நிறுவனங்களுடன் இணைந்து திறமைகளை உருவாக்குவது, பயிற்சி வாய்ப்புகளை அதிகரிப்பது, படைப்புத் துறையை வலுப்படுத்துவது போன்ற நோக்கங்களுக்காக இந்த நிகழ்ச்சி நடத்தப்பட்டது.

இந்த நிகழ்ச்சியில் கலந்து கொள்ள முதல்வர் மு.க. ஸ்டாலினுக்கு அழைப்பு விடுக்கப்பட்ட நிலையில், துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் கலந்து கொண்டார். நடிகர் கமல்ஹாசனும் கலந்து கொண்டார். இந்நிகழ்வின் போது தமிழ்நாடு அரசு மற்றும் ஜியோ ஹாட்ஸ்டார் நிறுவனம் இடையே ரூ.4 ஆயிரம் கோடி மதிப்பிலான புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தானது. தமிழ்நாடு அரசுடன் இணைந்து திரைப்படங்கள், இணையத்தொடர், உள்ளடக்கம் போன்றவற்றை உருவாக்க ஜியோ ஹாட்ஸ்டார் ஒப்பந்தம் செய்துள்ளது.

தொடர்ந்து இந்த நிகழ்ச்சியில் பேசிய துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின், எப்போதும் சொல்வதுதான். உள்ளடக்கம்தான் இப்போது ராஜா. உள்ளடக்கம் நன்றாக இருந்தால் அது எப்போதும் மக்களால் கொண்டாடப்படும்.

உள்ளடக்கம் நன்றாக இருந்தால் மொழி, இனத்தை தாண்டி அதற்கான வரவேற்பு அனைத்து இடங்களிலும் கிடைக்கும்.

அதற்கு நிறைய உதாரணங்கள் இருக்கின்றன. இன்றைய சூழலில் புதிய தொழில்நுட்பங்களை கலைஞர்கள் கற்றுக்கொள்ள வேண்டியது மிகமிக முக்கியம், அவசியம்.

எதை கற்றுக்கொள்ள வேண்டும், எப்படி கற்றுக்கொள்ள வேண்டும், அதை எப்படி கலையாக கொண்டு வர வேண்டும் என்பதற்கு கமல் சார் ஒரு சிறந்த உதாரணம், நம் எல்லோருக்கும் அவர் ஒரு இன்ஸ்பிரேஷன். இப்போதும் கமல் சார் கற்றுக்கொள்கிறார். தற்போதும் திரைத்துறையில் வரும் புதிய அம்சங்களை பரிசோதித்து பார்ப்பதில், கற்றுக்கொள்வதில் முதல் ஆளாக இருக்கிறார்.

தமிழ்நாட்டில் முதன்முறையாக ஒரு பெரிய திரைப்படத்தை நேரடியாக டிஜிட்டல் தளத்தில் வெளியிடும் முன்னோடி முயற்சியை கமல்ஹாசன் 2012 ஆம் ஆண்டே மேற்கொண்டார். ஓ.டி.டி. சினிமாவுக்கு மாற்றாகாது." என தெரிவித்தார்.

# நீலகிரியில் குந்தா, பந்தலூர் 2 புதிய ஊராட்சி ஒன்றியங்கள் உருவாக்கம்

சென்னை, டிச. 10-

உதகமண்டலம் மற்றும் கூடலூர் ஊராட்சி ஒன்றியங்களை பிரித்து, குந்தா மற்றும் பந்தலூர் என 2 புதிய ஊராட்சி ஒன்றியங்களை உருவாக்கப்பட்டுள்ளன.

நீலகிரி மாவட்டத்தில் உதகை, கூடலூர் ஊராட்சி ஒன்றியங்களை பிரித்து புதிய ஊராட்சி ஒன்றியங்களை உருவாக்கி தமிழ்நாடு அரசு புதிய அறிவிப்பை வெளியிட்டுள்ளது. உதகமண்டலம் மற்றும் கூடலூர் ஊராட்சி ஒன்றியங்களை பிரித்து, குந்தா மற்றும் பந்தலூர் என 2 புதிய ஊராட்சி ஒன்றியங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. 26 கிராம ஊராட்சிகளை உள்ளடக்கி உதகை ஊராட்சி, 12 கிராம ஊராட்சிகளை உள்ளடக்கி குந்தா ஊராட்சி என பிரிக்கப்பட்டுள்ளது. கூடலூர் ஊராட்சி ஒன்றியத்தை பிரித்து பந்தலூர் ஊராட்சி ஒன்றியம் என புதிய ஊராட்சி ஒன்றியம் உருவாக்கப்பட்டுள்ளது.



சுற்றுலாத்துறை அமைச்சர் இரா. இராஜேந்திரன் தலைமையில் சென்னை, வாலாஜா சாலையில் அமைந்துள்ள தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக்கழக கூட்டரங்கில், மாவட்ட வாரியாக சுற்றுலா திட்டப் பணிகள் குறித்து சுற்றுலா அலுவலர்கள் மற்றும் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக்கழகத்தின் மூலம் நடத்தப்பட்டு வரும் தங்கும் விடுதிகள், உணவு விடுதிகள், படகு குழாம்கள் மற்றும் சுற்றுலா குறித்து மண்டல மேலாளர்கள், மேலாளர்கள் மற்றும் பொறியாளர்களுடனான ஆய்வுக்கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் துறை சார்ந்த அரசு உயர்அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



சென்னை பல்கலைக்கழக முதுகலை மாணவர்கள் விடுதியில் அடிப்படை வசதிகள் குறித்து தமிழக உயர்கல்வித்துறை அமைச்சர் கோவி.செழியன் நேரில் ஆய்வு மேற்கொண்டார். இந்த ஆய்வின்போது, துறைசார்ந்த அரசு அலுவலர்கள் உடனிருந்தனர்.